# அவருடைய ஆலோசனைக்காக காத்திருத்தல்

நம் உலக ஞானமும்,
அனுபவமும் போதுமானதா?



எம். வெயின் மேக் லியோட்

# தேவ ஆலோசனைக்குக் காத்திருத்தல்

மனித ஞானமும் அனுபவங்களும்
இதற்குப் போதுமானதா?

எப். வெயின் மேக் லியோட்

“Waiting on His Counsel”
*by*
F. Wayne Mac Leod

*Tamil Edition*
Edition 1, Printing 1

1,000 Copies

Copyright © by Wayne Mac Leod

Originally Published in English as
“The Revival of Acts 2” *by*
Light to My Path Book Distribution
Sydney Mines, N.S. Canada
www.ltmp.ca

All Rights Reserved.

No part of this publication may be reproduced or transmitted
in any form or by any means, electronic or mechanical,
including photocopying, recording, or any information storage
and retrieval system, without permission in writing from
the author and publisher.

Unless otherwise indicated, Scripture quotations are taken
from the Tamil Holy Bible

Translation, Publishing & Distribution by
MARANATHA PUBLISHING COMPANY
MaranathaPublishers@gmail.com

Printed by Alleluia Print Services
www.AlleluiaPrints.com

# பொருளடக்கம்

முகவுரை .................................................. 5

1. தேவ ஆலோசனையின் அவசியம் .................................. 7

2. தேவ ஆலோசனையை தேடுவதற்கான
   கட்டளை .................................................. 20

3. தேவ ஆலோசனைகளை
   புறக்கணிப்பதிலுள்ள ஆபத்துக்கள் ........................... 31

4. வேதாகம ஆலோசனை ............................................ 44

5. வேதாகமமும் தேவனுடைய
   ஆவியானவரும் ............................................. 56

6. ஆவியானவரின் ஆலோசனை ........................................ 68

7. நியாயப் பிரமாணமும் தேவனுடைய
   குறிப்பான வழிநடத்துதலும் .................................. 84

8. தேவ ஆலோசனையின் ஆசீர்வாதம் ................................. 100

9. தேவ ஆலோசனையும் மோசேயும் .................................. 112

10. யோசுவாவும் தேவ ஆலோசனையும் ............................... 121

11. சவுலும் தேவ ஆலோசனையும் .................................. 133

12. தாவீதும் தேவ ஆலோசனையும் ................................. 143

13. இயேசுவும் பிதா மற்றும் ஆவியானவரின்
    ஆலோசனையும் ............................................. 154

14. பவுலும் தேவ ஆலோசனையும் .................................. 166

15. கடைசியாக சில வார்த்தைகள் ................................. 178

நவீனகால விஞ்ஞானம்
மற்றும் தொழில்நுட்பங்கள்
இருந்த போதிலும் மனிதனின்
தரிசனமும் ஞானமும்
மட்டுப்படுத்தப்பட்டது.
ஆகவே தேவ
ஆலோசனைக்கு
முதலிடம் கொடுப்பதன்
மூலம் இப்பொழுதும்
எப்பொழுதும் இருக்கக்கூடிய
ஆசீர்வாதத்தின்
ஐசுவரியத்தை கண்டு
கொள்ளுங்கள்!

# முகவுரை

சில நாட்களுக்கு முன்பாக நான் 106ம் சங்கீதத்தை வாசித்துக் கொண்டிருந்தேன். அவ்வாறு நான் வாசித்துக் கொண்டிருந்த போது 13ம் வசனம் என் உள்ளத்தில் பேசியது:

> ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள்; அவருடைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திருக்கவில்லை.

தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி அவர்களின் சத்துருக்களின் கையிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்காக செய்த ஆச்சரியமான கிரியைகளைப் பற்றி இந்த சங்கீதம் சொல்லுகின்றது. அவ்வாறு அவர்கள் விடுதலையாக்கப் பட்ட காலம் தேவனுடைய ஜனங்கள் களிகூர்ந்த காலமாகும். அந்த நாட்களிலே அவர்கள் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்தார்கள். அவருடைய துதியைப் பாடினார்கள். (சங்கீதம் 106:12) ஆனாலும் இந்த களிகூறுதலும் துதியும் தொடர்ந்து நடை பெறவில்லை. அதன் அடுத்த வசனத்திலேயே தேவன் அவர்களுக்குச் செய்தவைகளை மறந்து, அவருடைய ஆலோசனைக்குக் காத்திராமல் போனார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

தேவனுடைய ஆலோசனைக்குக் காத்திருப்பது என்பதன் அர்த்தம் என்ன? அறிவும், புத்தியும் பெருகியுள்ள இந்தக்காலத்தில் இப்படிப்பட்ட ஆலோசனைக்குக் காத்திருக்க வேண்டிய அவசியமென்ன? இதைக் குறித்து வேதத்தில் அதிகம் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்நாட்களிலிருந்த

இஸ்ரவேலர்களைப் போல, அவருடைய ஆலோசனைக்கு காத்திராமல் போனதுதான் நம்முடைய நாட்களிலுள்ள சபைகளிலும் காணப்படும் மிகப் பெரும் பிரச்சனையாக நான் கருதுகின்றேன்!

நியாதிபதிகள் 17:6 இவ்வாறு குறிப்பிடுகின்றது -

அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை; அவனவன் தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான்.

இவ்வாறுதான் நம்முடைய சபைகளைக் குறித்தும் இன்று விவரிக்கப்படுகின்றதா? தேவ ஆலோசனையைக் கைவிட்டு நம்முடைய பார்வைக்குச் சரியானதை நாம் செய்து வருகின்றோமா?

தேவனுடைய ஆலோசனைக்குக் காத்திருத்தல் என்றால் என்ன? மற்றும் நம்முடைய சொந்த ஞானத்தையும் புரிந்து கொள்ளலையும் சார்ந்திருப்பதைப் பற்றி வேதம் என்ன கற்றுத் தருகின்றது, என்பதனைப் பற்றி அறிந்து கொள்ளுவதே இந்த குறுகிய பாடத்தின் நோக்கமாகும். நம் இருதயக்கண்கள் திறக்கப்பட்டு நம் வாழ்க்கையில் தேவனுடைய நோக்கத்தைக் கண்டு கொள்வதற்கு இந்தப் பாடதிட்டம் வழிவகுக்கட்டும் என நான் ஜெபிக்கின்றேன்.

அதிகாரம் 1

# தேவ ஆலோசனையின் அவசியம்

நான் முகவுரையில் குறிப்பிட்டிருப்பது போலவே, இந்தப் பாடத்தின் நோக்கம் சங்கீதம் 106:13ஐத் தழுவி எடுக்கப்பட்டுள்ளது. சங்கீதக்காரன் தன் ஜனத்தைப் பற்றி குறிப்பிடுகையில்: அவர்கள் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள், அவருடைய ஆலோசனைக்குக் காத்திருக்கவில்லை என எழுதுகின்றார். அவருடைய ஆலோசனைக்குக் காத்திருக்கவில்லை என்னும் பகுதி என்னை அதிர்சியடையச் செய்தது. இதைக்குறித்து நான் தியானித்துக் கொண்டிருந்த போது என்னைக் குறித்தும் என் சமுதாயத்தைக் குறித்தும் இப்படித்தான் சொல்லப்படுகின்றதோ என நினைத்தேன்.

இந்த நாட்களிலே நாம் கல்வியறிவிற்கும் அனுபவத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். இது போற்றத்தக்க ஒன்றாக இருந்தாலும், நம் தேவை என்ன என்னும் உணர்வை இழந்து விட்டோமோ எனவும் எண்ணத் தோன்றியது. சில காலங்களுக்கு முன்னர் ஒரு கருத்தரங்கிலே நான் கலந்து கொண்டேன். அங்கே வந்திருந்த பேச்சாளர் தன் மகனைக் குறித்த ஒரு விளக்கவுதாரணத்தை நம்முடன் பகிர்ந்து கொண்டார். ஒரு நாள் அவருடைய மகன் விளையாடிக் கொண்டிருந்த போது, அவன் கீழே விழுந்து அவன் தலை கடினமான ஏதோ ஒன்றில் மோதிவிட்டது. விளைவாக அவன் மயக்கமடைந்தான். தன் மகனின் நிலைமையைப் பார்த்த தகப்பன், அவனை அப்படியே கையிலெடுத்துக் கொண்டு உடனே மருத்துவமனைக்குச் சென்றார். அங்கே சென்று குழந்தையை மருத்துவரின் கையில் கொடுக்கும்போதுதான்,

இதற்காக நான் ஜெபிக்கவில்லையே என அவருக்கு ஞாபகம் வந்தது. உடனே அந்த பாவத்தை அறிக்கை செய்து தன் மகனை ஆண்டவருடைய கரங்களில் ஒப்புக் கொடுத்தாராம்.

அந்தப் பேச்சாளர், தேவனை நம்புவதைப் பார்க்கிலும் மருத்துவரை அதிகம் நம்புவதற்கே ஏற்பட்ட சோதனையைப் பற்றித்தான் அங்கே குறிப்பிட்டார். எத்தனை முறைகளில் நாமும் இதையே செய்து கொண்டிருக்கின்றோம் அல்லவா? தேவ ஆலோசனையின் அவசியத்தை கண்டு கொள்ளாத அளவிற்கு நம் கல்வியறிவு அதிகமாகி விட்டதா? தேவனை நம்புவதிலும் அதிகமாக நம் திறமைகளை அதிகம் நம்புகிறோமா? தேவ ஆவியானவரின் செயல்களை மறந்து விட்டோமா? நம் நிகழ்ச்சிகளும் நம் அனுபவங்களும் நம் வாழ்க்கையில் தேவனுடைய இடத்தை எடுத்துக் கொண்டனவா? நம் தலைவர்களின் பெயர்களுக்குப் பின்னால் போடப்பட்டிருக்கும் பட்டங்களின் பட்டியல் நம் கண்களைக் குருடாக்கி விட்டனவா?தேவனுடைய ஆலோசனைக்கு காத்திருப்பதன் அவசியத்தை உணராமல் நம் திறமைகளுக்கு அதிக கவனம் செலுத்துவதே இன்று நம் சபைகளில் காணப்படும் போராட்டத்திற்கு காரணமாக இருக்குமா?

இந்த பாடத்தை நாம் கற்றுக் கொள்ளும் போது, தேவ ஆலோசனைக்கான அவசியத்தை உணர்ந்து கொள்வது மிக அவசியம். இதனை ஆராய்வதற்காக முதலாவதாக மனிதர்களாகிய நம்மைப் பற்றி தேவன் என்ன சொல்கின்றார் என்பதை பற்றி ஆராய்வோம்.

நாம் செய்யும் அனைத்திலும் தேவனுடைய ஆலோசனை அவசியம் என்பதனை புரிந்து கொள்ள வேண்டுமானால் நம் சுபாவம், இருதயம் மற்றும் நம் சிந்தை ஆகியவைகளைக் குறித்த வேதாகம அடிப்படையிலான புரிந்து கொள்ளல் அவசியம்.

தேவன் சிருஷ்டித்தவைகள் பரிசுத்தமும் குறையற்றவை களுமானவைகள். ஆனாலும் ஆதியாகமம் 3ம் அதிகாரத்திலே மனுக்குலம் பாவத்தில் வீழ்ச்சியடைந்ததைப் பற்றி குறிப்பிடு கின்றது. பாவம் உலகத்தில் எவ்வாறு பிரவேசித்தது என்பதனைக் கவனிக்கவும். ஏதேன் தோட்டத்தில் ஏவாளும் சாத்தானும் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள். நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசிக்க கூடாது என தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டது ஏவாளுக்குக் தெரியும். ஆனாலும் நீ அதைப் புசித்தால் உன் கண்கள் திறக்கப்படும் என கூறி சாத்தான் அவளை வஞ்சித்தான். நன்மை தீமை அறிந்து நீ தேவனைப் போலாவாய் என்றும் அவன் கூறினான். (ஆதியாகமம் 3:5) ஏவாளும் சாத்தான் சொன்னதை அப்படியே கேட்டு அதைக் குறித்து சிந்திக்க ஆரம்பித்தாள். ஆதியாகமம் 3:6ல் இவ்வாறு வாசிக்கின்றோம்:

அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக் கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

இந்த வசனம் ஆதாம் மற்றும் ஏவாளைப் பற்றி என்ன கூறுகின்றது? பாவம் உலகத்தில் பிரவேசிக்கும் முன்னரே அவர்களால் புரிந்து கொள்ள முடியாத பல காரியங்கள் இருந்ததாக இது காட்டுகின்றது. அவர்கள் சாத்தானின் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, மரத்தின் அழகினால் வஞ்சிக்கப்பட்டு மரத்தின் கனியை புசித்து அதன் விளைவுகளை அனுபவித்தார்கள். இவ்வாறு நன்மை தீமை அறியும் மரத்தைப் பற்றிய விஷயத்தில் அவர்கள் தேவனுடைய ஆலோசனையை அவமதித்தார்கள். தீமையின் தாக்கம் அவர்களில் அதிகமாக இருந்தது. அது முதல் பாவம் உலகத்தில் பிரவேசித்து உலகத்தையும் மனிதர்களின் சிந்தையையும் சீரழித்தது.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் பாவம் உலகத்தில் பிரவேசிக்கு முன்னரே ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனுடைய ஆலோசனை தேவைப்பட்டது. தேவனில்லாமல் சுயாதீனமாக செயல்படும் திறமை அவர்களுக்குள் கொடுக்கப்படவில்லை. பரிபூரணமான உலகத்திலே கூட அவர்களுக்குத் தேவ ஆலோசனை தேவைப் பட்டுள்ளது. இந்த தேவ ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து நடக்க மறுதலித்ததே அவர்களின் வாழ்க்கையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

நோவாவின் நாட்களிலே தேவன் உலகத்தைப் பார்த்து மனுக்குலத்தின் சிந்தையை இவ்வாறு விவரிக்கின்றார்:

> மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு (ஆதியாகமம் 6:5)

இந்த வசனத்தில் சில கடுமையான வார்த்தைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகியது என்பதைக் கவனிக்கவும். அத்துடன் அவன் இருதயத்து நினைவெல்லாம் நித்தமும் பொல்லாததே என குறிப்பிட்டுள்ளது என்பதனையும் கவனிக்கவும்.

மனிதனுடைய எண்ணங்களெல்லாம் எப்பொழுதும் தீமையானதாகவே காணப்படும் என்றே தேவன் இங்கே சொல்கின்றார். இது உண்மையாக இருக்கக் கூடுமா?இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளதை முற்றிலும் நம்ப முடியுமா? எப்படி மனிதர்களின் எண்ணங்களும் நினைவுகளும் எப்பொழுதும் பொல்லாததாக இருக்க முடியும்?

இந்த வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளாக இல்லாவிட்டால் இதை நாம் நம்பாமலிருந்து விடலாம். ஆனாலும் நோவாவின் நாட்களில் தேவன் மனுக்குலத்தை இவ்வாறுதான் பார்த்தார். அவனுடைய இருதயத்தின்

நினைவுகள், அவனுடைய சுபாவத்தை மேற்கொண்ட பாவத்தினால் ஆளுகை செய்யப்பட்டது. ஆகவே அவனுடைய ஒவ்வொரு நோக்கமும் ஒவ்வொரு சிந்தனையும் பாவத்தினால் கரைபட்டிருந்தது.

மனுக்குலத்தின் ஆவிக்குரிய நிலைமையை தீர்க்கதரிசியாகிய ஏசாயா கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றார்:

> நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது (ஏசாயா 64:6)

இந்த அழுக்கு நம் வாழ்க்கையின் எல்லா பாகங்களையும் பாதிக்கின்றது. எரேமியா தீர்க்கதரிசியும் மனிதனின் இருதயத்தை இவ்வாறு விவரிக்கின்றார்:

> எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? (எரேமியா 17:9)

நீங்கள் எடுக்க வேண்டிய தீர்மானங்களில் உங்கள் இருதயத்தின் நினைவுகளை பின்பற்ற உங்களுக்கு யாராவது ஆலோசனை சொன்னதுண்டா? இப்படிப்பட்ட ஆலோசனைகளிலுள்ள பிரச்சனையைப் பற்றியே எரேமியா விளக்குகின்றார். இருதயமானது திருக்குள்ளதும் கேடுள்ளதுமாயிருக்கின்றது. திருக்குள்ள இருதயத்தை நாம் பின்பற்றுவது சரிதானா? வியாதிப்பட்ட நிலையிலுள்ள இருதயத்தின் ஆலோசனையை நாம் பின்பற்றுவது சரிதானா?

இருதயத்தைப் பற்றி மத்தேயு 15:19-20ல் ஆண்டவராகிய இயேசு தன் சீஷர்களுக்கு சொன்னதைக் கவனியுங்கள்:

> 19 எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்.

*20 இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்.*

நம் இருதயம் சொல்வதையெல்லாம் செய்ய ஆரம்பித்தால் அதன் விளைவு என்னவாகும்? மனித இருதயத்திலிருந்தே எல்லாவித பாவகாரியங்களும் உருவாகுகின்றன என இயேசு கூறியுள்ளார். நம்முடைய இருதயம் நம்மால் நம்பப் படக்கூடிய ஒன்றல்ல. தேவ ஆலோசனையைப் பின்பற்றாமல் நம் இருதயத்தின் நினைவுகளைப் பின்பற்றுவோமானால், சீக்கிரத்தில் நாம் பாவத்தில் சிக்கிக் கொண்டதை காணமுடியும்.

அப்போஸ்தலனாகிய யாக்கோபு, நம் இருதயத்தின் விருப்பத்தைப் பற்றி என்ன சொல்கின்றார் என்பதைக் கவனியுங்கள்:

*14 அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.*
*15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். (யாக்கோபு 1:14-15)*

இவைகள் இலகுவாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வார்த்தைகளல்ல. நம் சுய ஆசைகளால் சிக்குண்டு சோதிக்கப்படுகின்றோம் என யாக்கோபு சொல்கின்றார். இவ்வித ஆசைகள் பாவத்தைப் பிறப்பிக்கின்றன. முடிவாக அவை நம்மை அழித்து விடுகின்றன.

அப்போஸ்தலனாகிய யோவானும் இதைப்பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்:

*16 ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம்*

*பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.*
*17 உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.*
*(1 யோவான் 2:16-17)*

யோவான் இங்கே என்ன சொல்கின்றார் என்பதைக் கவனிக்கவும். நம்முடைய கண்களின் விருப்பங்கள் தேவனிடத்திலிருந்து வந்தவைகளல்ல, ஆனால் அவை இவ்வுலகத்திலிருந்து வந்தவைகள் என்றே அவர் சொல்கின்றார். இவ்வாறான இச்சைகள் நம்மை விட்டு கடந்து போகும். அவைகள் தற்காலிகமானவைகள். அவைகள் விரைவாக நம்மை விட்டு கடந்தோடும்.

யோசுவா 7ம் அதிகாரத்திலே ஆகான் என்பவனின் இச்சை, இஸ்ரவேல் மக்களை எவ்வாறு தோல்வியடையச் செய்தது என்பதனைக் குறித்து வாசிக்கின்றோம். இஸ்ரவேல் மக்கள் எரிகோவைச் சுதந்தரித்த பொழுது அங்கிருந்து எந்த கொள்ளையையும் எடுத்துக் கொள்ளக் கூடாது என தேவன் அவர்களிடம் கூறியிருந்தார். அங்கிருந்த எல்லாவற்றையும் சுட்டெரிக்க வேண்டும் என்பதே கட்டளை. ஆனால் ஆகான் ஒரு அழகான வஸ்திரத்தையும் 200 சேக்கல் வெள்ளியையும் பொன்பாளத்தையும் இச்சித்தான். அவன் தன் இருதயத்தின் விருப்பத்தைப் பின்பற்றி அந்த பொருட்களை தனக்கென்று எடுத்து, தன் கூடாரத்திலே ஒளித்து வைத்தான்.

அவனுடைய இந்த செயல் இஸ்ரவேலரில் 36 பேரின் மரணத்திற்கு காரணமாகவும் ஆயி பட்டணத்திலே தோல்வியையும் சந்திக்கும்படியாகவும் அமைந்தது. தன் இருதயத்தின் விருப்பத்தைப் பின்பற்றியதே அவன் செய்த பாவம்.

*அப்போஸ்தலர் பவுல் தன் சாட்சியை ரோமர் 7:18-19ல் கூறியுள்ளதை கவனியுங்கள்:*

*18 அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை.*

*19 ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்.*

பவுல் கடினமான காரியமொன்றை இங்கே குறிப்பிடுகின்றார். அது என் மாம்சத்தில் நன்மை வாசம் பண்ணுகிறதில்லை என்பதாகும். இது நம்மால் ஏற்றுக் கொள்ளப்படமுடியாத ஒரு உண்மையாகும். எப்படியோ, நமக்குள் நன்மை வாசம் பண்ணுகின்றது என நாம் நம்புகின்றோம். எப்படியோ, நம் ஞானத்தினாலும் மனித திறமையினாலும் தேவனுக்கு ஊழியம் செய்ய முடியும் என நாம் நம்புகின்றோம். தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு நம் மாம்சத்தை பழக்கப்படுத்தி கட்டுப்படுத்துவதே நாம் செய்ய வேண்டிய ஒன்று என நாம் எண்ணுகின்றோம்.

பவுல் மேலும் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

*எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடையநியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமா யிருக்கமாட்டார்கள். (ரோமர் 8:7-8)*

மாம்ச மனிதனின் சிந்தை எப்பொழுதும் தேவனுக்கு எதிர்த்து நிற்கின்றது என்றும் அது தேவனுக்கு தன்னை ஒப்புக்கொடுக்கவோ அல்லது அவரைப் பிரியப்படுத்தவோ முடியாது என்றும் பவுல் இங்கு தெளிவாக குறிப்பிடுகின்றார். பவுலின் கூற்றுப்படி நம் மாம்சத்தையும் அதின் ஆசை

இச்சைகளையும் சிலுவையில் அறைவதே நாம் செய்ய வேண்டிய ஒன்றாகும்.

> *கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலாத்தியர் 5:24)*

நம் மாம்சத்தில் நன்மை ஒன்றுமில்லை என பவுலின் வார்த்தைகளிலிருந்து தெளிவாக காணமுடியும். அது தேவனுக்கு எதிர்த்து நிற்கிறதாகவும் அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாததாகவும் இருக்கின்றது. சிலுவையில் மாம்சத்தை அறைவதே நாம் செய்ய வேண்டிய ஒன்றாகும். நாம் ஆண்டவராகிய இயேசுவைப் பின்பற்ற விரும்பினால் நம் ஆசை, இச்சைகள், சிந்தனைகள் மற்றும் நம் மாம்சத்தின் உணர்வுகள் ஆகியனவற்றிற்கு மரித்து அவருடைய ஆலோசனையை தேடி அவருடைய நோக்கத்திற்காக வாழ பழக வேண்டும்.

சாதாரண மனிதர்களாகிய நாம் எப்படி தேவனையும் அவருடைய நோக்கத்தையும் புரிந்து கொள்ள முடியும்? தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளல்ல!

> *பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. (ஏசாயா 55:9)*

மனித தர்க்க அறிவு தேவனையும் அவருடைய நோக்கங்களையும் புரிந்து கொள்ள போதுமானதல்ல. அவர் நம்மால் புரிந்து கொள்ள முடியாத விதத்தில் செயல்படுகின்றார். யோபு என்னும் மனிதன் தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் இழந்து சாம்பலில் உட்கார்ந்திருக்கும் போதுதான் இதை கற்றுக் கொள்ள முடிந்தது.யோபு தன் குடும்பத்தையும் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் இழந்து வியாதிப்பட்டு தன்

வாழ்க்கையில் நடந்த எல்லாவற்றையும் திரும்பிப் பார்த்த பொழுது அவனால் தேவனுடைய நோக்கத்தை கண்டு கொள்ள முடியவில்லை. தேவன் என்ன செய்கின்றார் என்பதனை புரிந்து கொள்ள அவனுடைய அறிவு போதுமானதாக இருக்கவில்லை. கடைசியாக அவன் தேவனையும் அவரின் நோக்கத்தையும் நம்ப ஆரம்பித்தான். சகலவற்றையும் அறிந்த தேவனுடைய சிந்தையை நான் புரிந்து கொள்வது எப்படி? முடிவில்லா அவருடைய ஞானத்தில் ஒரு சிறு பகுதியை புரிந்து கொள்வதற்குக் கூட எனக்கு ஞானமில்லையே! அவருடைய நோக்கத்தை எப்படி வெளிப்படுத்துவாரென்று என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. என் வாழ்க்கையில் ஏற்படும் கோரசம்பவத்தை நன்மைக்காக பயன்படுத்த முடியும் என்று என்னால் புரிந்து கொள்ளவே முடியாது. இவைகள் என்னால் இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியவைகள் அல்ல. ஆனால் நான் செய்யக்கூடியதெல்லாம் அவருடைய முடிவில்லா ஞானத்தை நம்பி அவருடைய நோக்கத்தை சார்ந்திருப்பது மட்டுமே.

மனித ஞானம் தேவனுடைய சிந்தையை புரிந்து கொள்வதற்குப் போதுமானதல்ல என்பது மட்டுமல்ல, நம் சுபாவம் பாவத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதனால் நம் எண்ணங்களும், விருப்பங்களும் நோக்கங்களும் கூட சிதைந்து போய் காணப்படுகின்றது என வேதம் சொல்கின்றது. நம் இருதயத்தையும் நம் விருப்பங்களையும் பின்பற்றுவதென்பது நம்மை மரணத்திற்கு வழிநடத்தி தேவனிடமிருந்து நம்மைப் பிரித்து விடும். இது நம்மை எங்கே கொண்டு போய் சேர்க்கும்? தேவனையும் அவருடைய வழிகளையும் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. நம் இருதயமும் நம் விருப்பங்களும் நம்பக்கூடியவைகளல்ல.

அவ்வாறு நம் சிந்தையையும், இருதயத்தையும் விருப்பங்களையும் நம்பி வாழ முடியாவிட்டால் எவ்வாறு

நாம் தேவன் எதிர்பார்க்கின்ற வாழ்க்கையை வாழ முடியும்? நமக்கிருக்கும் ஒரே வழி தேவ ஆலோசனை மட்டுமே. தேவன் எதிர்ப்பார்க்கும் வாழ்க்கை முறை ஒன்றை நாம் வாழ வேண்டுமானால், நாம் செய்யும் எல்லாக் காரியங்களிலும் அவருடைய ஆலோசனையும் ஞானமும் அவசியம். நம்முடைய எல்லாத் தீர்மானங்களையும் ஒவ்வொரு செயல்களையும் தேவனிடம் ஒப்புக் கொடுக்க வேண்டும். சரியானது என்னவென்பதை நமக்குக் கற்றுத் தந்து நம் புரிந்து கொள்ளுதலை சரிப்படுத்துவதற்கு அவருக்கு நாம் விட்டுக் கொடுக்க வேண்டும். நம் புரிந்து கொள்ளலை விட மேலாக தேவனுடைய வழிநடத்துதலை நம்ப கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வது மனித திறமைகளுக்கும் மனித அறிவிற்கும் அவமரியாதையான ஒன்றாக தோன்றும். நாம் தேவனுக்காக அனேக காரியங்களைச் செய்திருந்தாலும் அவருடைய ‘வழிகளில்’ அவற்றைச் செய்யவில்லை என்பதே உண்மை.

நாம் தேவனுக்காக மிகுந்த அலுவல்கள் உள்ளவர்களாக காட்டிக் கொள்கின்றோம், ஆனால் அவருடைய ஆலோசனைக்கும் வழிநடத்துலுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதற்கு தவறி விடுகின்றோம். தேவன் எதிர்பார்க்கின்ற விதத்தில் நாம் இருக்க வேண்டுமானால் நம் மனித ஞானம், இருதயம் மற்றும் நம் ஆசைகள் தருவதைக் காட்டிலும் மேலான ஒன்று நமக்குத் தேவை. சகலவற்றையும் அறிந்த அனந்த ஞானமுள்ள தேவனுடைய ஆலோசனையே நமக்குத் தேவை.

தேவனையும் அவரது வார்த்தையையும் அவரது ஆவியானவரையும் முற்றிலும் சார்ந்து மனித ஞானம் மற்றும் மனித திட்டம் ஆகியவற்றை நம்பாத மக்களாக நாம் மாறவேண்டும். தேவன் தாமே அவரது ஆலோசனைக்குக் காத்திருக்க நமக்குக் கற்றுத் தருவாராக.

## கவனத்திற்கு:

- தேவனை நம்புவதைப் பார்க்கிலும் உங்கள் ஞானத்தையும் உங்கள் அனுபவத்தையும் நம்பின சூழ்நிலைகள் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா? விளக்குக.

- தேவனுடைய சிந்தையையும் அவருடைய வழிகளையையும் நம்மால் முழுமையாக புரிந்து கொள்ள முடியுமா?

- ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் பாவத்தில் விழுவதற்கு காரணம் என்ன?

- நம் இருதயத்தைப் பற்றி வேதம் என்ன சொல்லுகின்றது? நம் இருதயம் சொல்லுவதை நாம் பின்பற்ற கூடுமா?

- மாம்ச விருப்பங்களின் சுபாவம் என்ன? நம்மை வழிநடத்துவதற்கு அவற்றை நம்ப முடியுமா?

- தேவ ஆலோசனையை தேடுவது நமக்கு எவ்வளவு அவசியமானது? காரணங்களை ஆராய்வதன் மூலம் தேவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கின்றபடி வாழ முடியமா?

## ஜெபத்திற்கு:

- மனித இருதயத்தைப் பற்றியும் விருப்பங்களைப் பற்றியும் தேவன் கற்றுத் தருவதை ஏற்றுக் கொள்ள உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.தேவனுடைய ஆலோசனைக்கும் மேலாக அவற்றை நம்பினதற்காக தேவன் மன்னிக்கும்படியாக அவரிடம் ஜெபியுங்கள்

- நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் தேவனை தேடுவதற்குரிய விருப்பத்தை கொடுக்கும்படியாக அவரிடம் ஜெபியுங்கள். தேவனுடைய ஆலோசனைக்காக காத்திருப்பது என்றால் என்ன என்பதைக் குறித்து கற்றுத்தருமாறு ஜெபியுங்கள்.

• தேவன் உங்களை வழிநடத்தவும் ஆலோசனை சொல்லவும் ஆவலுள்ளவராய் இருப்பதற்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள். அவருடைய ஆலோசனையை பெற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு அவருடைய ஆலோசனை கிடைப்பதற்காக நன்றி சொல்லுங்கள்.

அதிகாரம் 2

# தேவ ஆலோசனையை தேடுவதற்கான கட்டளை

முதலாம் அதிகாரத்திலே தேவனுடைய ஆலோசனை நமக்கு அவசியம் என்பதற்கான காரணத்தை ஆராய்ந்தோம். அதில் முதலாவதாக தேவனுடைய சிந்தை மற்றும் அவரது நோக்கத்தை நம்முடைய மட்டுப்படுத்தப்பட்ட புரிந்து கொள்ளல் மூலம் அறிந்து கொள்ள முடியாதபடியால் நமக்கு தேவ ஆலோசனை அவசியம் என்பதனையும் இரண்டாவதாக நம்முடைய இருதயமும் விருப்பமும் எண்ணங்களும் பாவத்தினால் பாதிக்கப்பட்டுள்ளபடியால் அது நம்மை தேவனிடமிருந்தும் அவருடைய நோக்கங்களிலிருந்தும் திசை மாற்றுகின்றபடியால் நமக்கு தேவ ஆலோசன தேவை என்பதனையும் நாம் பார்த்தோம்.

இந்தப் பாடத்தைத் தொடர்ந்து கற்றுக் கொள்வதற்காக நாம் தேவனுடைய ஆலோசனையை தேடுவதற்கான கட்டளையை ஆராயப் போகிறோம். இதன் ஆரம்பமாக சங்கீதம் 10:4ஐ பார்ப்போம்.

துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்;
அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே.

இந்த வசனத்தில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய பகுதி என்னவென்றால் துன்மார்க்கன் தேவனைத் தேடான் என்பதாகும். இந்த வசனத்திலிருந்து பலவற்றை நாம் புரிந்து கொள்ள முடிந்தாலும், ஒரு அவிசுவாசியின் தேவனையோ அல்லது அவரது சித்தத்தையோ தேடமாட்டான் என்பதே அவனது குணாதிசயம் என்பது இதில் தெளிவாகத்

தெரிகின்றது. அவர்கள் தேவ நோக்கத்தையோ அல்லது தேவ ஆலோசனையையோ தேடாமல் தங்கள் சொந்த வழிகளில் காரியங்களைச் செய்கின்றார்கள். தேவன் இதை துன்மார்க்கம் என்று கூறுகின்றார்.

துன்மார்க்கத்தைப் பற்றி யோபு கூறுவதை யோபு 21:14ல் கூறுவதைக் கவனியுங்கள்.

> *அவர்கள் தேவனை நோக்கி: எங்களைவிட்டு விலகியிரும், உம்முடைய வழிகளை அறிய விரும்போம். (யோபு 21:14)*

தேவனுடைய ஆலோசனையையும் அவரது வழிகளையும் அறிந்து கொள்ளவோ அல்லது தேடவோ வாஞ்சிக்காமலிருப்பதுதான் துன்மார்க்கனுடைய முக்கியமான குணாதிசயமாகும். பாவம் என்பதன் மையப்பகுதியில் இருப்பது என்ன? அது தேவ ஆலோசனையை தேடாமல் நம் சொந்த இஷ்டத்தின்படி காரியங்களைச் செய்வதற்கான விருப்பத்தைத் தவிர வேறென்ன காரணமாக இருக்கக் கூடும்? இது அவிசுவாசிகளின் பாவம் மாத்திரமல்ல, ஆனால் விசுவாசிகளிலும் இதே பாவம் காணப்படுகின்றது. தேவனுடைய இருதயத்தைத் தேடாமல் தேவன் வைத்திருக்கும் பாதையை விட்டு விலகிச் செல்லும் துன்மார்க்கத்தில் விசுவாசிகளும் கூட வாழுகின்றார்கள். தீர்க்கதரிசியாகிய எரேமியா இவ்வாறு கூறுகின்றார்.

> *கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல வென்றும் அறிவேன். (எரேமியா 10:23)*

தீர்க்கதரிசி இந்த வசனத்தில் என்ன சொல்லுகின்றார் என்பதைக் கவனியுங்கள். மனுஷனுடைய வழிகள் அவனாலே ஆகிறதல்ல என்று சொல்கின்றார். வேறுவிதமாகச்

சொல்வதானால் நாம் வாழ வேண்டிய விதத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால், நம் உள்மனிதனைப் பார்த்து நாம் செயல்பட முடியாது. நமக்கு வெளியில் நம் தேவனாகிய கர்த்தரை பார்க்க வேண்டும். நம் வழிகளை நாமே வழிநடத்திக் கொள்ளக் கூடாது. நமக்கும் மேலாக உள்ள ஒரு அதிகாரத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். தேவன் தீர்மானிக்கும் விதத்தில் நாம் வாழ வேண்டும். இவ்வாறு செய்வதற்கு நம் யோசனைகளுக்கும் திட்டங்களுக்கும் நாம் மரிக்க ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இது உலகம் நமக்குச் சொல்லித் தருகின்ற தத்துவ ஞானமாகிய நம் கனவுகளை நாம் பின்பற்ற வேண்டும் என்பதற்கு எதிரான ஒன்றாகும். நம் உள்ளுணர்வுகளை நாம் பின்பற்ற வேண்டுமென உலகம் சொல்லுகின்றது. நம் சிந்தையில் எதைச் செய்யத் தீர்மானிக்கின்றோமோ அதை நாம் செய்யலாம் என அது சொல்லித் தருகின்றது. இவ்விதமான மனப்பாங்கை எரேமியா எதிர்க்கின்றார். அதற்குப் பதிலாக தேவ ஆலோசனைக்கும் வழிநடத்துதலுக்கும் ஒப்புக் கொடுக்க அழைக்கின்றார். நமக்கு என்ன வேண்டுமோ, அதை நிறைவேற்றுவதை நிறுத்தி விட்டு தேவன் என்ன விரும்புகின்றாரோ அதைத் தேட அவர் அழைக்கின்றார்.இந்த உண்மையில் உள்ள ஆச்சரியமான காரியம் என்னவென்றால், அது நமக்காக நாம் தேடுபவைகளைக் காட்டிலும் அதிகமான திருப்தியையும் சந்தோஷத்தையும் நம் வாழ்க்கையில் கொண்டு வரும். நமக்குத் தேவையானவைகளில் சிறந்தவைகளைக் கொடுக்க தேவன் அறிந்திருக்கின்றார்.

நாம் அவருடைய ஆலோசனையைத் தேடும்போது அவரில் நாம் முற்றிலும் திருப்தியடைகின்றோம். நம் வாழ்க்கையைக் குறித்த தேவனுடைய நோக்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் தேடும் தற்காலிக சந்தோஷங்கள் ஒன்றுமில்லாததைப் போல மறைந்து போய் விடும்.

வேதாகமத்தில் தேவனுடைய ஆலோசனையை தேடுவதற்கான தெளிவான கட்டளை நீதிமொழிகள் 3:5, 6ல் கொடுக்கப்பட்டுள்ளது.

> உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

என் தனிப்பட்ட வாழ்க்கைக்கு இந்த வசனங்கள் மிகப்பெரிய சவாலாக இருந்திருக்கின்றது. இந்த வசனங்களில் மிகத் தெளிவான கட்டளை காணப்படுவதை நாம் பார்க்க முடியும். உன் சுயபுத்தியின் மேல் சாயாதே என்பதே அந்த கட்டளை. இதைவிட தெளிவாக சொல்வதற்கு ஒன்றுமில்லை. நம்முடைய புரிந்து கொள்ளலை நம்ப வேண்டாம் என்பதே தேவனுடைய கட்டளை. அதற்குப் பதிலாக நாம் அவரை நினைத்துக் கொள்ளவேண்டும் என அவர் எதிர்பார்க்கின்றார். அவரை நினைத்துக் கொள்வது என்பது, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்திலும் தேவனைக் கொண்டு வரவேண்டும் என்பதாகும். நம் ஒவ்வொரு தீர்மானத்தையும் தேவ ஆலோசனைக்கு முன் வைத்து அவர் என்ன சொல்கின்றாரோ அதை நாம் செய்ய வேண்டும். அவ்வாறு நாம் செய்யும் போது அவர் நம்முடைய வழிகளைச் செவ்வைப் படுத்துவார் என்பதே வேதம் நமக்குச் சொல்லும் வார்த்தையாகும். அவரை அங்கீகரித்து அவருடைய நோக்கத்தை நாம் தேடும் போது நம் காரியங்களிலும் நம் பாதைகளிலும் அவர் தெளிவைக் கொண்டு வருகின்றார்.

வேதாகமத்தில் பலதடவைகள் தேவன் தன் ஜனங்களிடம் மனித ஞானத்தை நம்பாமல் அவருடைய ஆலோசனையைத் தேடும்படி சொல்லுவதை நாம் காணமுடியும்.

*பிரபுக்களையும், இரட்சிக்கத்திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். (சங்கீதம் 146:3)*

இந்த வார்த்தையும் ஒரு கட்டளையாகும். விசுவாசிகள் தங்கள் பிரச்சினையிலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்ள பிரபுக்களை நம்பக்கூடாது, விசுவாசிகள் உலக தலைவர்களை நம்புவதைக் காட்டிலும், ஆபத்துக் காலங்களில் தேவனையும் அவரது ஆலோசனைகளையும் தேடவேண்டும் என்பதே இந்த வார்த்தையின் அர்த்தமாகும். இதே சிந்தனை சங்கீதம் 118:8, 9இலும் கொடுக்கப் பட்டுள்ளது.

*8 மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.*
*9 பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.*

பிரச்சனைகள் நம்மை சூழும்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

நம் அடைக்கலத்திற்காக நம் ஆண்டவரிடம் ஓட வேண்டும் என்றே சங்கீதக்காரன் இங்கே சொல்கின்றார். நாம் தேவனையும், அவரது ஆலோசனையையும் அவரது ஆறுதலையும் தேடவேண்டும். நம் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடிக் கொள்ள நம்முடைய திட்டத்தின்படியும் நம் ஆலோசனைப் படியும் முயற்சி செய்வது நமக்கு வாடிக்கையானதொன்றல்லவா? நமக்குத் தேவையானதொரு உதவிக்காக யாரோ ஒரு நபரிடம் செல்லுவதும் வாடிக்கையானதொன்றல்லவா.

தேவனுடைய ஞானமும் அவருடைய ஆலோசனையும் நமக்குக் கொடுப்பதற்காக ஆயத்தமாக இருக்கும் போது மனிதனிடம் நம்பிக்கை வைத்து அவனிடம் ஓடுவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்றே சங்கீதக்காரன் இங்கே சொல்ல வருகின்றார். உங்கள் இக்கட்டான நேரங்களில் தேவனிடம் ஓடுங்கள். அவரிலும் அவரின் ஆலோசனையிலும் மறைந்து

கொள்ளுங்கள். இதுதான் சங்கீதக்காரன் விசுவாசிகளுக்கு விடும் சவால். உங்கள் ஆபத்து நாட்களில்உங்கள் சிந்தனையில் முதலாவதாக தேவன் வரவேண்டும்.

ஏசாயா இதை மேலும் இவ்வாறு விவரிக்கின்றார்:

நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம். (ஏசாயா 2:22)

நம் வாழ்க்கையின் உதவிகளுக்காகவும் வழிநடத்துதலுக்காகவும் மனுஷனை நோக்கிப் பார்ப்பதை நிறுத்தும்படி ஏசாயா சவால் விடுகின்றார். மனித ஞானத்திலும், மனித பெலத்திலும் நம்பிக்கை வைக்க வேண்டாம் என ஏசாயா கூறுகின்றார்.

அப்படி நாம் மனிதனிலும் அவனுடைய ஞானத்திலும் நம்பிக்கை வைக்காவிட்டால் நம் ஆபத்துக் காலத்தில் எங்கே செல்லுவோம்? சங்கீதம் 37:5 இதற்கான பதிலைத் தருகின்றது:

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.

சங்கீதம் 55:22ல் சங்கீதக்காரன் மேலும் இவ்வாறு கூறுகின்றார்:

கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒரு போதும் தள்ளாட வொட்டார்.

அந்நாட்களில் காணப்பட்டவர்களில் சாலமோன் சிறந்த ஞானமுள்ளவர், அவருடைய ஆலோசனை நீதிமொழிகள் 16:3ல் காணப்படுகின்றது.

உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.

சிறந்த ஞானியாகிய சாலமோன் கூட நம் திட்டங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுக்க சொல்லுகின்றார். நம் திட்டங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பது என்றால் அவருடைய திட்டத்திற்கும் அவருடைய ஞானத்திற்கும் முற்றிலும் அர்ப்பணிப்பது என்பதாகும்.

பழைய ஏற்பாட்டு வேத பகுதிகளில் நாம் காணும் இப்பகுதிகள் புதிய ஏற்பாட்டிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. நாம் இராஜ்ஜியத்தை தேடும் மக்களாக காணப்பட வேண்டுமென்று இயேசு கூறுகின்றார்:

> ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று, நீங்கள் கேளாமலும் சந்தேகப் படாமலும் இருங்கள்.
> இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித் தேடுகிறார்கள்; இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்.
> தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.
> (லூக்கா 12:29-31)

இந்த உலகத்தின் காரியங்களை விட மேலாக தன்னுடைய ராஜ்ஜியத்தின் காரியங்களைத் தேட வேண்டுமென்று தேவன் நமக்குச் சொல்லுவதையே இந்த வசனம் தெளிவாக காண்பிக்கின்றது. நம் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கத்தில் மட்டுமே நமது இருதயமும் கவனமும் காணப்பட வேண்டும். அவருடைய சித்தத்தையும் அவரது ஆலோசனையையும் தேடுகின்ற மக்களாக நாம் காணப்பட வேண்டும்.

நம் வாழ்க்கையில் கவலைகள் ஏற்படும் போது, அவைகளைத் தேவனிடத்தில் தெரியப்படுத்த வேண்டுமென்றே அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகின்றார்:

*நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். (பிலிப்பியர் 4:6)*

நம் கவலைகளையும் விண்ணப்பங்களையும் தேவனிடத்தில் தெரியப்படுத்தும் பொழுது, எந்த சூழ்நிலையிலும் நமக்கு ஆலோசனை சொல்லி நம்மை வழிநடத்த வாக்குப் பண்ணியுள்ளவராக, மற்றும் ஆளுகை செய்கின்றவராக அங்கீகரித்துஅவருடைய சித்தத்திற்கு சரணடைகின்றோம். நம் சோதனைகள் மத்தியில் அவருடைய சித்தத்திற்கு சரணடைகின்றோம்.

பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது எல்லாவற்றையுங் குறித்து தேவனிடத்தில் தெரியப்படுத்தும்படி கூறுகின்றார். அதாவது தங்கள் வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் தேவனிடம் கொடுக்க வேண்டும் என்பதே அர்த்தமாகும். அவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் எல்லா கவலைகளிலும் பிரச்சனைகளிலும் தேவனுடைய ஞானத்திற்காகவும் வழி நடத்துதலுக்காகவும் தேவனிடம் செல்லவேண்டும். அவர்கள் எல்லாவற்றிலும் தேவ ஆலோசனையை நாட வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பேதுருவும் இதே காரியத்தை விசுவாசிகளுக்கு ஞாபகப்படுத்துகின்றார்:

*அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல்வைத்துவிடுங்கள். (1 பேதுரு 5:7)*

இதுவரை நாம் கவனித்த எல்லா வேதவசனங்களையும் சேர்த்து சுருக்கி கூற விரும்புகின்றேன். நாம் செய்யும் எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய ஆலோசனையைத் தேடாமலிருப்பதே துன்மார்க்கம் எனப்படும் (சங்கீதம் 10:4)

விசுவாசிகள் தங்கள் சுயபுத்தியின் மேல் சாயாமல் தாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் தேவனை அங்கீகரிக்க வேண்டும் (நீதிமொழிகள் 3:5-6) உதவிக்காகவும் வழிநடத்துதலுக்காகவும் மனிதனை நோக்கிப் பார்ப்பதை நாம் நிறுத்த வேண்டும். (ஏசாயா 2:22; சங்கீதம் 118:8-9) அதற்குப் பதிலாக நம் கவலைகளையும் நம் வழிகளையும் தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்க வேண்டும் (சங்கீதம் 37:5; நீதிமொழிகள் 16:3; 1 பேதுரு 5:7) நாம் செய்யும் அனைத்திலும்நம் தேவைகளை தேவனுக்குத் தெரியப்படுத்தி அவருடைய ஆலோசனையையும் வழிநடத்துலையும் தேடவேண்டும் (பிலிப்பியர் 4:6)). நம்முடைய பாதைகளை நாமே தீர்மானிக்கக் கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். (எரேமியா 10:23).

வேதாகம கட்டளைகள் மிகத் தெளிவாக உள்ளது. நாம் செய்யும் அனைத்திலும் தேவ ஆலோசனையைத் தேடும் மக்களாக நாம் எப்பொழுதும் காணப்பட வேண்டும். நம் சொந்த யோசனைகளுக்கும் திட்டங்களுக்கும் மரித்தவர்களாகவும் தேவனுடைய இருதயத்தை தேடுகின்றவர்களாகவும் காணப்பட வேண்டும். இதைச் செய்ய வேண்டுமானால் தேவனுடனுள்ள நம் தொடர்பு கிரமமானதாக இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பதற்கு நம் வழிகளையெல்லாம் அவருக்கு ஒப்புக் கொடுத்தவர்களாக இருக்க வேண்டும். இந்த சத்தியத்தை சரியாக கற்றுக் கொள்ளாதது தான் நம் சபைகள் பெலவீனமான சபைகளாக காணப்படுவதற்கான காரணமாக இருக்குமா? தேவனுடைய வேலையை செய்து முடிப்பதற்கு நமக்குள் தேவையான பெலனும், ஞானமும் போதுமான அளவு உண்டு என நம்பும் நிலைக்கு நாம் வந்து விட்டோமா? தேவன் எதிர்பார்க்கும் நபராக நாம் மாற, தேவன் இங்கே சொல்கின்றவைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். நம் ஞானத்தையும் அனுபவத்தையும் நம்பி வாழ்வதை விட்டு விட்டு தேவ ஆலோசனையை தேட ஆரம்பிப்போம்.

## கவனத்திற்கு:

• *துன்மார்க்கத்திற்கும் தேவ ஆலோசனையை தேடாமலிருப்பதற்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன?*

• *மனிதனின் வழிகள் அவனுக்குள் இல்லை என எரேமியா சொல்லுகின்றார். இதன் அர்த்தம் என்ன? ஒரு மனிதன் தன் வழியை எவ்வாறு தீர்மானிக்க முடியும்?*

• *நம் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் தேவனை அங்கீகரித்துக் கொள்வது என்றால் என்ன?*

• *தேவன் நம் வழிகளை ஆசீர்வதிக்க கேட்பதற்கும் நம் வழிகளை அவருக்கு ஒப்புக் கொடுப்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?*

• *நம் அனுதின வாழ்வின் தீர்மானங்களிலும் செயல்களிலும் இது என்ன அர்த்தத்தைக் கொடுக்கின்றது?*

• *தேவனுடைய ஆலோசனையை தேடுதல் மற்றும் நம் சொந்த ஞானத்தையோ புரிந்து கொள்ளலையோ நம்பக் கூடாது என்பதைக் குறித்த போதனைகளை, கற்றுக் கொடுப்பதில் நம் காலத்திலுள்ள சபைகள் எந்த அளவிற்கு வெற்றியடைந்துள்ளது?நம் சொந்த புரிந்து கொள்ளலை பின்பற்றுவதன் விளைவு என்ன?*

• *இன்று நீங்கள் செய்த காரியங்கள் எந்த அளவிற்கு தேவனுக்கு ஒப்புவிக்கப் பட்டதாக காணப்பட்டது? இன்று நீங்கள் எடுத்த தீர்மானங்களில் தேவனை அங்கீகரித்துக் கொண்டீர்களா?*

## ஜெபத்திற்காக:

• *நீங்கள் செய்யும் எல்லாக் காரியத்திலேயும் தேவ ஆலோசனையைத் தேட உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.*

• *தேவனுடைய ஆலோசனையைத் தேடாமல் உங்கள்*

சொந்த வழிகளில் காரியங்களைச் செய்த நேரங்களை தேவன் மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள்.

- உங்கள் சுய புத்தியின் மேல் சாயாமல் தேவ ஆலோசனையைத் தேடுவது என்றால் என்ன என்பதைக் குறித்து தேவன் கற்றுக் கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

அதிகாரம் 3

# தேவ ஆலோசனைகளை புறக்கணிப்பதிலுள்ள ஆபத்துக்கள்

தேவனையும் அவரது ஆலோசனையையும் தேடுவதன் அவசியத்தை நாம் தொடர்ந்து கற்றுக் கொள்ளும்போது, தேவனையும் அவரது ஆலோசனையையும் தேடாமலிருக்கும் நபர்களைப் பற்றிய வேதவசன எச்சரிப்புகளையும் ஆராய்வது மிக அவசியமாகும். தேவ ஆலோசனையை புறக்கணிப்பவர்களைக் குறித்து வேதம் சில கடுமையான எச்சரிப்புகளைக் கொடுக்கின்றது.

இதை ஆராய 2 நாளாகமம் 25:14-16 வரையுள்ள பகுதியில் காணப்படும் அமத்சியா என்னும் ராஜாவைக் கவனிப்போம். அமத்சியா ஏதோமியர்களுக்கு எதிராக யுத்தத்திற்கு சென்றான். அதற்காக தன்னுடைய இராணுவத்தில் 30,000 பேரை ஆயத்தம் செய்து மேலும் 10,000 பேரை இஸ்ரவேலிலிருந்து கூலிக்கு அமர்த்திக் கொண்டான். ஆனால் தேவன் இஸ்ரவேல் இராணுவத்திலிருந்து கூலிக்கு அமர்த்தினவர்களை யுத்தத்திற்கு அழைத்துக் கொண்டு போக வேண்டாம் என தீர்க்கதரிசியின் மூலம் எச்சரித்தார். ஆட்களை கூலிக்கு அமர்த்தக் கூடாது என தேவன் அவனிடம் எச்சரித்திருந்தார்.

இதை ஏற்றுக் கொள்ள மனதில்லாமலே அவர்களை திருப்பி அனுப்பி விட்டு தன் சொந்த இராணுவத்துடன் யுத்தத்திற்கு படையெடுத்துச் சென்றான். அந்த யுத்தத்தில் தன் 30,000 பேருள்ள சேனையைக் கொண்டு ஏதோமியர்களில் 20,000 பேரைக் கொன்று மிகப் பெரிய வெற்றியை பெற்றான்.

ஆனால் அவன் யுத்தத்திலிருந்து திரும்பி வரும்போது அவன் ஏதோமியர்களின் தெய்வங்களையும் தன்னுடன் கொண்டு வந்து அவைகளைப் பணிந்து கொள்ள ஆரம்பித்தான் என 2 நாளாகமம் 25:14ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைக் கண்ட தேவன் அவன் மேல் கோபம் கொண்டு ஒரு தீர்க்கதரிசியை அமத்சியாவினிடத்திற்கு அனுப்பி விக்கிரகாரதனை என்னும் பாவத்தைக் குறித்து கண்டிக்க அனுப்பினார். ஆனால் அமத்சியாவோ அந்த தீர்க்கதரிசியின் வார்த்தைக்கு செவி கொடுக்க மனதில்லாமல் நாங்கள் உன்னை ராஜாவுக்கு ஆலோசனைக் காரணாக நியமித்தோமா? இதை நிறுத்திக் கொள். நீ ஏன் கொல்லப்பட வேண்டும் என அவனிடம் கேட்கின்றான் (2 நாளாகமம் 25:16). அமத்சியா தேவ ஆலோசனைக்கு செவிகொடுக்க மறுத்தான். அதன் விளைவாக தேவனுடைய தீர்க்கதரிசி கீழுள்ள வார்த்தைகளை கடைசியாக கூறிவிட்டு ராஜாவின் சமூகத்தை விட்டு புறப்பட்டான்:

> *நீர் இப்படிச் செய்து, என் ஆலோசனையைக் கேளாமற்போனபடியினால், தேவன் உம்மை அழிக்க யோசனையாயிருக்கிறார் என்பதை அறிவேன் என்றான். (2 நாளாகமம் 25:16)*

யூத ராஜாவுக்கு விரோதமாக சொல்லப்பட்ட கடினமான வார்த்தைகள் இவை. தேவன் அனுப்பின தீர்க்கதரிசிக்கும் தேவ ஆலோசனைக்கும் ராஜா செவிகொடுக்க மனதில்லாமல் போனபடியால் அவனை அழிப்பதற்கு தேவன் தீர்மானித்தார்.

இதனைத் தொடர்ந்து 2 நாளாகமம் 33ல் மனாசே என்னும் ராஜாவைப் பற்றி நாம் வாசிக்க முடியும். 2 நாளாகமம் 33:9 மனாசேயின் காலத்தில் யூதாவின் நிலைமையைக் குறித்து இவ்வாறு கூறுகின்றது:

அப்படியே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப்பார்க்கிலும், யூதாவும் எருசலேமின்

குடிகளும் பொல்லாப்புச் செய்யத்தக்கதாய், மனாசே அவர்களை வழி தப்பிப் போகப் பண்ணினான்.

இதில் மனாசேக்கு என்ன நடந்தது என்பதனை 2 நாளாகமம் 33:10-11ல் காணமுடிகின்றது.

> கர்த்தர் மனாசேயோடும் அவனுடைய ஜனத்தோடும் பேசின போதிலும், அவர்கள் கவனிக்காதே போனார்கள்.
>
> ஆகையால் கர்த்தர்: அசீரியா ராஜாவின் சேனாபதிகளை அவர்கள் மேல் வரப்பண்ணினார்; அவர்கள் மனாசேயை முட்செடிகளில் பிடித்து, இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டிப் பாபிலோனுக்குக் கொண்டுபோனார்கள்.

துன்மார்க்கமான இராஜாவோடு தேவன் பேசின பொழுது அவனும் அவனுடைய ஜனமும் கவனிக்காதே போனார்கள் என கூறப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும்.

தேவனுடைய ஆலோசனையை கவனிக்க மறுத்தபடியால் முழு தேசமும் பாபிலோனியர்களிடம் ஒப்புக் கொடுக்கப் பட்டது. தேவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணியதன் நேரடி விளைவை இங்கே நாம் காணமுடியும்.

தேவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணுபவர்களைக் குறித்த எச்சரிப்பின் வார்த்தையை சங்கீதக்காரனும் எழுதியுள்ளார். சங்கீதம் 81:11-12ல் இவ்வாறு வாசிக்கின்றோம்.

> என் ஜனமோ என் சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை.
>
> ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டு விட்டேன்; தங்கள் யோசனைகளின் படியே நடந்தார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுலும் இதற்கொத்த வார்த்தைகளை ரோமர் 1:28-31 வரையுள்ள பகுதியில் குறிப்பிட்டுள்ளார்:

தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார். அவர்கள் சகல வித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலை யினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்.

பவுலின் காலத்திலிருந்த இஸ்ரவேலரை தேவன் அவர்களின் யோசனையின்படி நடக்க விட்டுக் கொடுத்து விட்ட படியால் அவர்களின் சமுதாயம் சீர்கேடடைந்தது. குற்றங்களும், வன்முறைகளும் மற்றும் சகலவிதமான துன்மார்க்கங்களும் வெளிப்பட்டு அவர்களை நாசம் பண்ணியது. அவர்களுடைய தேசத்தில் ஏற்பட்ட துன்மார்க்கமான நிலைமைகளுக்கான காரணத்தை கவனியுங்கள். தேவனுடைய ஜனம் அவருடைய

சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை (சங்கீதம் 81:11). அவர்கள் தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொள்ள மனமில்லாமல் போனார்கள் என்பதே அந்த காரணமாகும். (ரோமர் 1:28)

நீதிமொழிகளை எழுதினவர், மனித ஞானமும் அவனுடைய புரிந்து கொள்ளலும் அவனுக்குப் போதுமானதல்ல என எச்சரிக்கின்றார்:

> மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி
> உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.
> (நீதிமொழிகள் 14:12)

நம் சமுதாயத்திற்காக மற்றும் நம் தனிப்பட்ட வாழ்விற்கான தேவ ஆலோசனையை அலட்சியப்படுத்துவது என்பது நம் நடத்தைகளில் வீழ்ச்சியையும் முடிவிலே மரணத்தையும் கொண்டு வரும். நம் சமுதாயம் ஆரோக்கியமானதாகவும் ஆசீர்வாதமானதாகவும் இருக்க வேண்டுமானால் நாம் தேவனுடைய நோக்கத்தையும் அவருடைய இருதயத்தையும் தேடுகின்றவர்களாக காணப்பட வேண்டும்.

நமக்கு இஷ்டமான வழிகளுக்கு நம்மை ஒப்புக் கொடுப்பது மிக ஆபத்தானது. நம் தினசரி பத்திரிக்கைகளிலே தேவனுடைய ஆலோசனையை அலட்சியப்படுத்தி தங்கள் சொந்த வழிகளை தெரிவு செய்து கொண்ட பலருடைய சம்பவங்களை நாம் வாசிக்க முடிகின்றது. இப்படிப்பட்ட அவர்களின் தீர்மானங்களும் செயல்களும் அவர்களைப் பாழாக்குகின்றன. இந்த மனிதர்கள் தேவ ஆலோசனையை அலட்சியப்படுத்த தீர்மானித்ததன் விளைவாக தங்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்கின்றனர். தேவ ஆலோசனையை அலட்சியப்படுத்துபவர்களைக் குறித்து நீதிமொழிகள் புத்தகத்திலே எழுதப்பட்டுள்ளதை கவனியுங்கள்:

> அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப்
> பயப்படுதலைத் தெரிந்து கொள்ளாமற்போனார்கள்.
>
> என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை;

என் கடிந்து கொள்ளுதலையெல்லாம் அசட்டை பண்ணினார்கள்.

ஆகையால் அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள்.

பேதைகளின் மாறுபாடு அவர்களைக் கொல்லும், மூடரின் நிர்விசாரம் அவர்களை அழிக்கும் (நீதிமொழிகள் 1:29-32)

தேவ ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாமல் அவற்றை அலட்சியம் பண்ணுபவர்களுக்கு அவருடைய கடிந்து கொள்ளுதலின் பலனாக தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள். அவருடைய கடிந்து கொள்ளலையும் ஆலோசனையையும் மறுதலிப்பவர்களுக்கு மரணமும் அழிவும் அவர்கள் வழியில் காத்துக் கொண்டிருக்கும்.

வேதம் இவற்றுடன் நிறுத்திக் கொள்ளவில்லை. அது மேலும் சொல்லுவது என்னவென்றால், தேவனுடைய ஆலோசனையை அலட்சியம் செய்பவர்களின் நிலை ஆபத்துக் காலத்தில் தேவன் அவர்களை அலட்சியம் செய்வார். நீதிமொழிகள் 1ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளதை கவனியுங்கள்:

நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்க மாட்டோம் என்கிறீர்கள்; நான் என்கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும்இல்லை.

என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்து கொள்ளுதலை வெறுத்தீர்கள்.

ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங்காரியம் வரும் போது ஆகடியம் பண்ணுவேன்.

நீங்கள் பயப்படுங்காரியம் புசல் போல் வரும் போதும், ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்

*போதும், நெருக்கமும் இடுக்கணும் உங்கள் மேல் வரும் போதும், ஆகடியம் பண்ணுவேன்.*

*அப்பொழுது அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள்.*

*அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்து கொள்ளாமற்போனார்கள்.*

*என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை; என்கடிந்து கொள்ளுதலையெல்லாம் அசட்டை பண்ணினார்கள். (நீதிமொழிகள் 1:24-29)*

வாழ்க்கையின் போராட்டங்கள் மற்றும் புயல் வீசும் சூழ்நிலைகள் மத்தியில் ஜனங்கள் துயரப்பட்டு தேவனை நோக்கி கதறும்போது, தேவன் அவர்களின் சத்தத்தைக் கேட்க மறுப்பார். இதற்கான காரணம் தேவன் அவர்களுக்கு ஆலோசனை தர விரும்பினாலும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மனதில்லாமலிருந்ததுதான். தேவனையும் அவரது ஆலோசனையையும் மறுதலித்ததே அவர்களது வேதனைகளுக்குக் காரணம்.

எரேமியா அவருடைய நாட்களிலிருந்த ஜனங்கள் தேவனுடைய ஆலோசனையை மறுதலித்த படியால் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

*ஞானிகள் வெட்கி, கலங்கிப்பிடிபடுவார்கள்; இதோ, கர்த்தருடைய சொல்லை வெறுத்துப் போட்டார்கள்; அவர்களுக்கு ஞானமேது? ஆகையால் அவர்களுடைய ஸ்திரீகளை அந்நியருக்கும், அவர்களுடைய வயல்களை அவைகளைக் கட்டிக்கொள்பவர்களுக்கும் கொடுப்பேன்; அவர்களிலே சிறியோர் தொடங்கிப் பெரியோர் மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக் காரரா*

> *யிருக்கிறார்கள்; தீர்க்க தரிசிகள் தொடங்கி ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யராயிருந்து, சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற் பூச்சாய்க் குணமாக்குகிறார்கள். (எரேமியா 8:9-11)*

தங்கள் பார்வைக்கு ஞானியாக இருந்தவர்கள் தேவனுடைய வார்த்தையை மறுதலித்தார்கள். அவர்கள் ஞானிகளாக இருந்தாலும் தங்கள் ஞானத்தினாலேயே அழிந்தார்கள். அவர்கள் தேவனுடைய ஆலோசனையை தேடி அவருடைய வழிகளில் நடக்க மறுதலித்த காரணத்தின் விளைவாக அவர்களுடைய மனைவிகளும் அவர்களுடைய நிலங்களும் வேறொவருக்குச் சொந்தமாயிற்று.

நம்முடைய சொந்த ஞானத்தையும் பெலத்தையும் நம்பியிருப்பதைக் குறித்த விளக்கத்தை எரேமியா 17:5-6ல் வாசிக்கலாம்:

> *மனுஷன் மேல் நம்பிக்கைவைத்து, மாம்ச மானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
>
> *அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப் போலிருந்து, நன்மை வருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்.*

தன் சொந்த பெலத்திலும் ஞானத்திலும் தன் நம்பிக்கையை வைக்கின்ற மனிதனைக் குறித்து தேவன் எரேமியா மூலமாக நமக்கு என்ன சொல்லுகின்றார் என்பதனைக் கவனிக்கவும். அவன் வனாந்திரத்திலுள்ள கறளையாய்ப் போன செடியைப் போலிருப்பான். வனாந்தரத்திலுள்ள ஒரு செடி ஓங்கி

வளரவும், செழிப்பாக காணப்படவும், தேவையான தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே அந்த செடி சிறியதாக அநேகமாக கனியற்றதாகவும் இருக்கும். தனக்குத் தேவையான அளவு தண்ணீர் கிடைக்காதபடியால் தன் முழு வளர்ச்சியின் அளவையும் அது எட்டாது. அதுபோலவே நாமும் தேவ ஆலோசனையில்லாமல் நம் முழு வளர்ச்சியின் அளவையும் காணமுடியாது. அவன் நன்மை வருவதைக் காணமாட்டான். தேவனுடைய ஆசீர்வாதங்கள் அவனுடைய வாழ்க்கையிலிருந்து எடுக்கப்படும். அவனால் தேவனுடைய நோக்கத்திற்கு வெளியே ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாது.

முரட்டாட்டமாக வாழ்ந்து கொண்டு தேவ ஆலோசனையை அவமதித்து வாழ்கின்றவன் தன் வாழ்க்கையில் நன்மைகள் வருமென்னும் எதிர்பார்ப்புடன் இருக்க முடியாது. ஒருவேளை அவன் வாழ்க்கையில் செழிப்புள்ளவனைப் போல காணப்படலாம். ஆனால் மெய்யான நன்மை தேவனுடைய ஆலோசனையைப் பெற்றுக் கொள்கின்றவனுடைய வாழ்க்கையில் மட்டுமே காணப்படும்.

அவன் வறட்சியான இடங்களில் ஜீவிப்பான். நம் சொந்த பெலத்தினாலும் ஞானத்தினாலும் பல காரியங்களை நம்மால் சாதிக்க முடியலாம். நம் வியாபரத்தை பெருக்கி செல்வந்தனாக பிரபலமுடையவனாக வாழமுடியும்.. இந்த உலகம் தரக்கூடிய அனைத்தையும் பெற்றவர்களாக இருந்தாலும் நம் ஜீவியம் வறட்சியான இடங்களில் உள்ளவர்களைப் போலத்தான் இருக்கும்.தேவனுடைய ஆலோசனையில் மட்டுமே தேவனுடைய பரிபூரணத்தின் ஜீவ தண்ணீர் காணப்படுகின்றது. இதனால் வாழ்க்கையில் எல்லாம் இலகுவாக இருக்கும் என்பது அர்த்தமல்ல.

இந்த உலக வாழ்க்கையில போராட்டங்களுடனும் கஷ்டங்களுடனும் வாழ்ந்த பல நபர்களை நான்

சந்தித்திருக்கின்றேன். ஆனால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தேவ நோக்கத்திலும் தேவ ஆலோசனையின் நிறைவிலும் நடந்தபடியால் அவர்களின் இருதயம் மகிழ்ச்சியுடன் காணப்பட்டது. வெளியரங்கமான கிரியைகளைப் பார்த்து ஏமாந்து விடாதீர்கள்.தேவனுடைய ஆலோசனையில் மட்டுமே நாம் முழுமையான திருப்தியைக் காணமுடியும்.

இந்த அதிகாரத்தில் நாம் காணும் எச்சரிப்புக்கள் மூலம் என்ன கற்றுக் கொள்கின்றோம்? இங்கே குறிப்பிடும் வேத வார்த்தைகள் நமக்கு சொல்பவைகளை சுருக்கமாக இங்கே எழுதுகின்றேன். தேவனுடைய ஆலோசனையை தேட மறுதலித்த ராஜாவின் உதாரணத்தைப் பார்த்தோம். அமத்சியா என்னும் ராஜா தேவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணி தனக்கு அழிவைத் தேடிக் கொண்டான். மனாசே என்னும் ராஜாவின் காலத்தில் யூதா தேவனுடைய ஆலோசனையை புறக்கணித்தபடியால் பாபிலோன் சாம்ராஜ்யம் படையெடுத்து வந்து அவர்களுடைய சகலவற்றையும் கொள்ளையாடிக் கொண்டு சென்றது. எழுபது வருட காலமாக யூத ஜனங்கள் அந்நிய ஜனங்களிடம் அடிமைப் பட்டிருந்தார்கள். நீதிமொழிகளை எழுதினவர் மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகின்ற வழிகள் உண்டு ஆனால் அதின் முடிவோ மரண வழிகள் என கூறுகின்றார். தேவனுடைய ஆலோசனையை புறக்கணித்தவர்களுக்கு தேவன் தம் முதுகைக் காண்பிக்கின்றார். ஆகவே ஆபத்துக் காலங்களில் தங்களுடைய சொந்த ஞானத்தில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள விட்டுவிடப்படுகின்றார்கள். எரேமியா தன் காலத்தில் ஞானிகளைப் போல நினைத்துக் கொண்டிருந்த மக்களைப் பார்த்து, அவர்களுடைய ஞானம் அவர்களுடைய மனைவிகளையும் அவர்களுடைய நிலங்களையும் அவர்களிடமிருந்து உரிந்து கொள்ள வைக்கும் என எச்சரிக்கின்றார். அவர்கள் தேவனுடைய ஆலோசனையை மறுதலித்து வாழும் காலமெல்லாம் தேவன் அவர்களுக்குத் தர

விரும்பும் நன்மைகளின் பரிபூரணத்தை அனுபவிக்க மாட்டார்கள் எனவும் எரேமியா எச்சரிக்கின்றார். அதற்குப் பதிலாக அவர்கள் வாழ்க்கை வெறுமையானதாகவும் வனாந்தரத்தைப் போன்றதாகவும் இருக்கும் என சொல்லுகின்றார்.

இந்த எச்சரிப்புக்களையெல்லாம் நாம் வாசித்தோமே, ஆனால் இதற்கான பதிலாக நாம் என்ன செய்யப் போகின்றோம்? இந்த வேத வார்த்தைகள் சொல்லுபவைகளை நாம் விசுவாசிக்கின்றோமா? தேவனுடைய ஆலோசனை நமக்கு மிக அவசியமாக தேவைப்படுகின்றது என தேடுகின்றோமா? அல்லது அவருடைய ஆலோசனையில்லாமலேயே நம்மால் சாதித்து விட முடியும் என எண்ணிக் கொண்டிருக்கின்றோமா? வாழ்க்கையில் சம்பவிக்கும் எல்லாவற்றிலும் மனித ஞானத்தின் மூலம் விடை கண்டு விடமுடியும் என நம்பிக் கொண்டிருக்கின்றீர்களா? உங்களுக்குத் தேவையான பதிலை உங்களுக்குக் கிடைத்த பயிற்சிகள் மற்றும் திறமைகளின் மூலம் கண்டு பிடித்துக் கொள்ள முடியும் என நம்பிக் கொண்டிருக்கின்றீர்களா?

தேவனுடைய சிந்தையை நம்மால் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது என்பதை கடந்த மூன்று அதிகாரங்களிலும் நாம் கவனித்தோம்.. அவருடைய வழிகள், நம் வழிகளல்ல. அவருடைய எண்ணங்கள் நம் எண்ணங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அவருடைய வழிகள் நம்மால் புரிந்து கொள்ள முடியாதவைகள். நம்முடைய சிந்தைகளும் எண்ணங்களும் பாவத்தினால் தாக்கப்பட்டிருப்பதைக் குறித்து நாம் ஏற்கனவே கவனித்துள்ளோம். இது தேவனோடும் அவரது நோக்கத்தோடும் உள்ள நம் அனுபவத்தை பாதிக்கின்றது. நம் வழிகளிலெல்லாம் தேவனைத் தேடுவதைக் குறித்தும் நம் சுய புத்தியின் மேல் சாயாமலிருக்கவும் வேண்டிய வேதாகம கட்டளைகளை நாம் ஏற்கனவே ஆராய்ந்திருக்கின்றோம். அவருடைய ஆலோசனையை தேடாமலிருப்பவர்களின் மேல் வரக்கூடிய சாபங்களைக் குறித்தும் கவனித்தோம்.

*முடிவாக இவையெல்லாவற்றிற்கும் நமது பதிலென்ன? இங்கே குறிப்பிட்டுள்ள வேத வார்த்தைகளின் படி அவரது ஆலோசனையை தேட தீர்மானிக்கப் போகிறோமா அல்லது நம் சொந்த வழிகளிலேயே நடக்க தீர்மானிக்கப் போகிறோமா? தீர்மானம் நம் கைகளில் தான் உண்டு. ஆனால் தேவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணுதலின் விளைவு மிக ஆபத்தானதாக முடியும்.*

## கவனத்திற்கு:

- *அமத்சியா மற்றும் மனாசே ஆகிய ராஜாக்கள் தேவனுடைய ஆலோசனையை புறக்கணித்தபடியால் ஏற்பட்ட விளைவு என்ன?*

- *உங்கள் சமுதாயம் தேவனுடைய ஆலோசனை யினாலும் தேவனுடைய வழிகளிலினாலும் நடத்தப்பட்டால் எப்படியிருக்கும்? அல்லது அவரவர் தங்கள் இஷ்டப்படி செய்து வாழ்ந்து கொண்டிருந்தால் எப்படியிருக்கும்?*

- *கர்த்தரைத் தேடாத ஒரு மனிதன் அவாந்தர வெளி யிலுள்ள செடியைப் போலவும் நன்மை வருவதைக் காணாமல் இருப்பவனாகவும் இருப்பான் என எரேமியா கூறுகின்றார். தேவனை தேடாதவன் தன் வாழ்க்கையில் செழிப்பைக் காணமுடியுமா?*

- *தேவனுடைய ஆலோசனையை தேடுவதன் அவசியத்தை கிறிஸ்தவர்கள் பார்க்கிறார்கள் என நீங்கள் நினைக்கின்றீர்களா? நம் சொந்த வழிகளையும் நம் சொந்த ஆலோசனையையும் நம்புவதற்கு நாம் சோதிக்கப்படுகின்றோமா?*

- *இந்த அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ள வேத வசனங்களில் எந்த வசனம் உங்களை குறிப்பாக தொட்டது? எதிர்காலத்தில் நீங்கள் செய்யப் போகின்றவைகளில் என்ன விதமான மாற்றத்தை அது கொண்டு வரக்கூடும்?*

## ஜெபத்திற்கு:

- தேவனை அல்லது அவருடைய ஆலோசனையைத் தேடாமல் நம் சொந்த வழிகளில் நம் காரியங்களைச் செய்தவைகளை தேவன் மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள்.

- உங்கள் தலைவர்களுக்காக ஜெபியுங்கள்.அவர்கள் எடுக்கும் எல்லாத் தீர்மானங்களிலும் தேவனையும் அவரது நோக்கத்தையும் உண்மையாக அவர்கள் தேட ஜெபியுங்கள்.

- தேவனுடைய ஆலோசனையைத் தேடுவது என்றால் என்ன என்பதனையும் நம் வழிகளிலெல்லாம் அவரை அங்கீகரித்துக் கொள்வது எப்படி என்பதனைப் பற்றியும் தேவன் கற்றுத் தரும்படி ஜெபியுங்கள்.

- நீங்கள் செய்கின்ற எதிலாவது தேவனுடைய நோக்கத்தை தவிர்த்திருந்தால் அவற்றை தேவன் உங்களுக்குக் காண்பித்துத் தருமாறு ஜெபியுங்கள். அவைகளை தேவன் மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள். தேவனுடைய நோக்கத்திற்குள் மீண்டும் வரவும் தீர்மானங்களை தேவ ஆலோசனையின்படி எடுக்கவும் தேவன் உதவி செய்ய ஜெபியுங்கள்.

அதிகாரம் 4

# வேதாகம ஆலோசனை

*முதல் மூன்று அதிகாரங்களிலும் நாம் செய்யும் அனைத்திலும் தேவனுடைய ஆலோசனையைத் தேடுவதைக் குறித்து வேதம் நமக்கு என்ன சொல்லுகின்றது என ஆராய்ந்தோம். தற்பொழுது நாம் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், தேவ ஆலோசனையை எங்கே கண்டு கொள்ளலாம்? இதற்கு பதில் சொல்ல சங்கீதம் 119:9ஐ முதலில் ஆராய்வோம்.*

*வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே?*

*இங்கே சங்கீதக்காரன் தன் வாழ்க்கையின் முக்கிய நிலை யிலிருந்து, பிரகாசமான எதிர்காலத்தை நோக்கும் வாலிபனைக் குறித்து விவரிக்கின்றார். தன் முழுத் திறமையுடன் இருக்கும் இந்த வாலிபனை சங்கீதக்காரன் பார்க்கும் போது, அவனுடைய வாழ்க்கை பாதையில் காணப்படும் சோதனைகளையும் அறிந்து கொள்கின்றார். அவன் ஆரம்பித்துள்ள பயணம் ஆபத்துக்களும் மாற்று வழிகளும் நிறைந்த பயணமாகும். அவன் செல்லப் போகும் பாதையில் பல எதிரிகள் காணப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த வாலிபன் தேவன் எதிர்பாரக்கும் வாழ்க்கையை வாழ்ந்து எப்படி தன் முழு வளர்ச்சியை அடைய முடியும்?*

*தன் வழியில் காணப்படும் சோதனைகளுக்கும் கண்ணிகளுக்கும் எவ்வாறு தன்னை பாதுகாத்துக் கொள்ளக் கூடும்? அவன் தன் குறிப்பிட்ட இடத்தை அடையும்வரை பாதுகாப்பாக அவனை வைத்திருக்கக் கூடியது எது? இக்*

கேள்விகளுக்கான பதில்கள் தேவனிடத்தில் மட்டுமே உள்ளது. தேவனுடைய வார்த்தை மட்டுமே தன் வாழ்க்கைப் பாதையில் அவனைப் பாதுகாக்கக் கூடும். அதுவே தன் பாதையில் எது சரி எது தவறு என்பதனைக் கண்டு கொள்ள அவனுடைய கண்களைத் திறக்கும். அவனுடைய பாதையில் உள்ள சோதனைகளை அவனுக்கு வெளிப்படுத்தி அவன் செல்ல வேண்டிய சரியான பாதையை காண்பிக்கும். வேதத்தில் காணப்படும் தெளிவான தேவ ஆலோசனைகளின்படி அவன் நடக்கும் போது மட்டுமே அவன் தன் வழிகளைக் காத்துக் கொள்வான்.

இஸ்ரவேல் மற்றும் யூத ராஜாக்களிடம் தேவன் எதிர்பார்த்தவைகளை உபாகமம் 17:14-20ல் வாசிக்கின்றோம். ராஜா என்னும் பதவி மிக முக்கியமான பதவியாகும். தன் தேசத்திற்கான ஞானமான தீர்மானங்களை ராஜா எப்படி எடுக்க முடியும்? உபாகமம் 17:18-19ல் உள்ள தேவனுடைய கட்டளையை கவனியுங்கள்:

> அவன் தன் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர் பேரில் மேட்டிமை கொள்ளாமலும், கற்பனையை விட்டு வலது புறம் இடது புறம் சாயாமலும், இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின் படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும் படி கற்றுக் கொள்ளும் பொருட்டு,....

இஸ்ரவேல் மற்றும் யூத ராஜாக்கள், ஒவ்வொரு நாளும் தேவ நியாயப் பிரமாணங்களை வாசிக்க வேண்டுமென்பதே அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை தேவையாக இருந்தது. சாதாரண மனிதர்கள் நியாயப்பிரமாணப் புத்தகத்தை தங்களுக்கென சொந்தமாக வைத்திருக்க முடியாத காலகட்டத்தில் ராஜாவுக்கென்று விசேஷ நியாயப்பிரமாண

புத்தகம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த நியாயப்பிரமாணப் புத்தகம் அக்காலத்திலிருந்த லேவிய வம்சத்தைச் சேர்ந்த ஆசாரியர்களிடமிருந்த மூலப்பிரதிக்கு ஒத்ததென அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது. இந்த நியாயப்பிரமாணங்களே ராஜாவின் சகல காரியங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கும். இந்த தேவ வார்த்தைகளை வாசித்து கற்றுக் கொள்வதன் மூலம், ராஜா எடுக்க வேண்டிய சரியான தீர்மானங்களுக்கு தேவையான வழிநடத்துதல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அவன் எடுக்கும் சகல தீர்மானங்களும் அவனுக்கென்று விசேஷமாக தயாரிக்கப்பட்ட நியாயப்பிரமாண பிரதியில் உள்ள தேவ ஆலோசனைகளின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள், தேவன் தன் ஜனங்களுக்கு கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரிக்க யோர்தானை கடந்த சம்பவத்தை யோசுவா 1ம் அதிகாரம் கூறுகின்றது. கடந்த நாற்பது வருடங்களாக வனாந்தரத்தில் தங்கள் வாழ்க்கையை நாடோடிகளாக வாழ்ந்த இந்த மக்களுக்கு இது எப்படிப்பட்ட மனநிலையை கொடுத்திருக்கக் கூடும் என கற்பனை செய்து பாருங்கள். அவர்களுக்கு முன்னாலிருந்த தேசத்தின் ஜனங்கள் தங்கள் தேசத்தைக் காப்பாற்றிக் கொள்ள யுத்தம் பண்ண ஆயத்தமுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் இஸ்ரவேலர்கள் ஏற்கனவே பல யுத்தங்களைச் சந்தித்து இப்பொழுது இந்த தேசத்தில் குடியமர்ந்து தங்களை ஒரு நாட்டுக் குடிமக்களாக ஏற்படுத்திக் கொள்ள இருந்தார்கள். ஆகவே இவர்களின் வழிநடத்துதலைத் தன் தோளில் ஏற்றிருந்த யோசுவாவின் பொறுப்பு எப்படிப்பட்டதாக இருக்கும் என யோசித்துப் பாருங்கள். இவன் தனக்கு முன் வைக்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்குரிய ஞானத்தை எங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும்?

யோசுவா தன் ஜனங்களை வழிநடத்த ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் தேவன் அவனிடம் கூறிய ஆலோசனையைக் கவனியுங்கள்.

> *6 பலங்கொண்டு திடமனதாயிரு; இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய்.*
>
> *7 என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின் படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திட மனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும் படிக்கு, அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருப்பாயாக.*
>
> *8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படி யெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய். (யோசுவா 1:6-8)*

இந்தப் பகுதியில் தேவன் யோசுவாவிடம் என்ன சொல்கின்றார் என்பதைக் கவனியுங்கள். யோசுவா தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பில் வெற்றியடைய வேண்டுமானால் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில் உள்ளவைகளின்படி செய்ய கவனமா யிருக்க வேண்டும். அவன் இதிலிருந்து வழிவிலகக் கூடாது. தன் ஜனங்களிடம் பேசும் அனைத்திலும் அந்த பிரமாணங்களே வெளிப்பட வேண்டும். இரவும் பகலும் அவன் அதைத் தியானிக்க வேண்டும். எழுதப்பட்ட இந்த நியாயப்பிரமாணங்களை அவனுடைய ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் இருக்க

வேண்டும். அந்த நியாயப்பிரமாணங்களே தேவனுடைய நோக்கத்தை அவனுடைய வாழ்க்கையிலும் அவனுடைய ஜனங்களின் வாழ்க்கையிலும் வெளிப்படுத்திக் காண்பிக்கும்.

தேவன் தன் ஜனத்தை வழி நடத்த தெரிந்து கொள்பவர்களின் வாழ்க்கையிலே தேவனுடைய வார்த்தையின் முக்கியத்துவத்துவத்தை காணமுடியும். இந்த நியாயப்பிரமாணங்களே அவர்களின் வழிகாட்டி. இந்த வேதவார்த்தைகளை புரிந்து கொள்ளவும் அதன் வழிகளில் நடக்கவும் அதற்கான நேரத்தை ஒதுக்குவதற்கு அவர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதே அவர்களுடைய தலைமைத்துவத்திற்கும் அவர்களுடைய தேசத்திற்குமான வெற்றியை நிர்ணயிக்கும்.

தேவனுடைய வார்த்தையின் மதிப்பை சங்கீதக்காரன் புரிந்து கொண்டபடியினால் தான் இவ்வாறு எழுதியுள்ளார்.

> உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்கீதம் 119:105)

தேவனுடைய வார்த்தை நம் கால்களுக்குத் தீபம். ஒரு மனிதன் இரவில் காட்டு வழியாக நடந்து செல்கின்றான் என கற்பனை செய்து கொள்வோம். அடுத்த அடியை எங்கே எடுத்து வைக்கப் போகிறேன் என்றோ அல்லது அவன் கால்கள் எதில் சிக்கிக் கொள்ளப் போகின்றது என்றோ அவனுக்குத் தெரியாது. தேவனுடைய வார்த்தையோ, ஒரு வெளிச்சத்தைப் போல, அவனுடைய வாழ்க்கைப் பாதையிலுள்ள தடைகளையும் அவன் விழக்கூடிய இடங்களையும் அவனுக்குக் காண்பித்துக் கொடுக்கும். நம் பாதையிலுள்ள ஆபத்துக்களை நமக்குக் காண்பித்துக் கொடுக்கும் நம் கால்களின் தீபம். இந்த வார்த்தைகள் நம் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கின்றது.

அது நம் கால்களின் கீழ் இருக்கும் ஆபத்தைக் காட்டிக் கொடுப்பது மட்டுமல்ல, நமக்கு முன்னாலுள்ள பாதையை

வெளிச்சமாக்கி நாம் எடுக்க வேண்டிய வழிகாட்டுதல்களை நமக்குக் காண்பிக்கும். அதுவே நம் வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டியும் பாதுகாப்பாகவும் இருக்கின்றது.

நம்மிடம் உள்ள வேதவசனம் சாதாரண மனிதர்களின் சிந்தனைகளல்ல. ஆனால் தேவன் தன் மக்கள் மூலமாக நம்முடன் பேசிய வார்த்தைகளாகும்:

*20 வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது.*

*21 தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2 பேதுரு 1:20, 21)*

ஆகவேதான் வேதவசனம் நம் வாழ்க்கையின் நிச்சய வழிகாட்டியாக இருக்க முடியும். வேதவசனம் நமக்கான தேவனுடைய வார்த்தைகளாகும். அவைகள் நம் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கத்தையும் வழிகாட்டுதலையும் நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதுகின்றார்:

*16 வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,*

*17 அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கிறது. (2 தீமோத்தேயு 3:16, 17)*

அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிட்டுள்ள வார்த்தைகளிலே சில முக்கியமான காரியங்களை நாம் கவனிக்க வேண்டும். முதலாவது, வேதவார்த்தைகள் எல்லாம் தேவனிடத்திலிருந்து வந்தவைகளாகும். அவரே இவற்றின் ஆக்கியோன். இரண்டாவதாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளா யிருக்கிறது.வேறு விதமாகச் சொல்லுவதானால் நாம் எவ்வாறு வாழ வேண்டுமென தேவன் விரும்புகின்றாரோ, அதற்காக நம்மை போதித்து நம்மை பயிற்றுவிக்கின்றது. நம் வாழ்க்கையின் முழு நிறைவை நாம் காணவேண்டுமானால், நாம் வேதவசனத்தைக் கற்றுக் கொள்ளும் மாணாக்கர்களாக மாறவேண்டும். இந்த வசனங்களில் தேவன் விரும்பும் வாழ்க்கையை வாழத் தேவையான தேவனுடைய ஆலோசனையை நாம் காண்கின்றோம். மூன்றாவதாக இந்த வேத வசனங்கள் நமக்கு ஆலோசனை சொல்லவும் வழிநடத்தவும் அனுமதிக்கப்படும் போது நாம் முழுமையடைந்த வர்களாகவும் நற்கிரியைகளைச் செய்ய தகுதியுள்ளவர்களாகவும் மாறுவோம் என பவுல் சொல்லுகின்றார்.

நான் எப்படி இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ அவ்வாறு என்னை உருவாக்க இந்த வேதவார்த்தைகளில் ஒன்றும் குறைவுபட்டவைகளாக இருக்கவில்லை என்பதையே இது காட்டுகின்றது. தேவன் எனக்கென்று வைத்திருக்கும் எல்லா வேலைகளையும் செய்து முடிக்க அது என்னை தகுதிப்படுத்துகின்றது

இதன் அர்த்தம் என்னவென்றால் நீதியின்படி நடக்க நான் அறிந்திருக்கத் தேவையானவைகள், தேவ ஆலோசனையில் காணப்படுகின்றவைகள் வேத வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. என் சபை, தேவன் எதிர்பார்க்கும் சபையாக இருப்பதற்காக நான் அறிந்திருக்க வேண்டிய அனைத்தும் வேத

வசனத்தில் காணப்படுகின்றது. ஒன்றும் குறைவாகவில்லை. வேதவசனங்களைப் பின்பற்றுபவர்களை அந்த வார்த்தைகள் முழுமையடையச் செய்வது மட்டுமல்ல, அவருடைய நாமத்தினால் நாம் பொறுப்பெடுக்கும் அனைத்தையும் செய்வதற்கு தகுதிப்படுத்தும் வண்ணம் தேவன் வேத வசனங்களை அருளூட்டியிருக்கிறார்.

வேத வசன ஆலோசனைகளை பின்பற்றுவதனால் வாழ்க்கையில் பிரச்சனை ஒன்றுமே இல்லாமல் இலகுவான வாழ்க்கையாக இருக்கும் என்பது இதன் அர்த்தமல்ல. இந்த வேத வசனங்களுக்கு மிக உண்மையுள்ளவர்களாக வாழ்ந்த அநேகர் மிகக் கடினமான சூழ்நிலைகளைச் சந்தித்திருக்கிறார்கள்.அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தபடியால் துன்பப்படுத்தப்பட்டார். அப்போஸ்தலனாகிய யோவான் வேதத்திலுள்ள சத்தியங்களை போதித்தபடியினால் நாடு கடத்தப்பட்டார்.

ஆனால் இப்படிப்பட்ட கடினமான சூழ்நிலைகளை நாம் சந்திக்கும்போதும் இந்த வேதவசனங்களே நமக்கு ஒத்தாசையாக நிற்கின்றன. நெருக்கப்படுகின்ற நேரங்களில் வேதம் நமக்கு ஆறுதலாக இருக்கின்றது என்பதனை பவுல் கூறுவதைக் கவனியுங்கள்:

> தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக் கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. (ரோமர் 15:4)

நம் சூழ்நிலைகளெல்லாம் கடினமாக மாறும்போது நாம் என்ன செய்கின்றோம்? கஷ்டமான சூழ்நிலைகளில் நமக்குத் தேவையான ஆலோசனைகளையும் உற்சாகத்தையும் எங்கிருந்து பெற்றுக் கொள்கின்றோம்? வேதவசனங்களே

நமக்குத் தேவையான உற்சாகத்தை நமக்குத் தருகின்றது என பவுல் கூறுகின்றார். அந்த வசனங்களின் ஆலோசனைகளே நமக்கு நம்பிக்கை.

நம் ஊழியத்தையும் நம் வாழ்க்கையையும் நாம் கட்டியெழுப்பக் கூடிய உறுதியான அஸ்திபாரத்தை வேத வசனத்திலுள்ள தேவ ஆலோசனைகளும் ஞானமும் நமக்குத் தருகின்றது, அவைகள் நமக்கு ஸ்திரத்தன்மையையும் தெளிவான வழிநடத்துதலையும் நமக்குத் தருகின்றது. பவுல் எபேசிய சபைகளுக்கு எழுதும் போது இவ்வாறு எழுதுகின்றார்:

> *ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,*
>
> *அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார் (எபேசியர் 2:19-20)*

எபேசிய சபைகள் அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் என்பவர்களின் அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்கள் என அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதைக் கவனியுங்கள். அதாவது எபேசிய சபைகளின் விசுவாசம் வேதாகமத்தில் காணப்படுவதைப் போல அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைகளில் அஸ்திபாரமிடப்பட்டதாக காணப்பட்டது. இவர்கள் தேவனால் அருளூட்டப்பட்டு எழுதினார்கள். இவர்களுடைய அஸ்திபாரம் உறுதியானதாகவும் பாதுகாப்பானதாகவும் காணப்பட்டது.

அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்திலுள்ள ஆதி சபையின் வெற்றிக்கான ஒரு முக்கிய காரணம் அப்போஸ்தலர் 2:42ல் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் அப்போஸ்தல உபதேசத்திலும் அந்நியோன்னியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபத்திலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்.

ஆதி சபை உறுதியாய் தரித்திருந்தவைகளில் ஒரு முக்கிய காரணி அப்போஸ்தலருடைய உபதேசமாகும். இவர்களுடைய உபதேசங்கள் நமக்காக புதிய ஏற்பாட்டு வேதபகுதிகளில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தங்களை அர்ப்பணித்திருந்தது அவர்களுக்கு பெலத்தைக் கொடுத்ததுடன் தங்கள் சமுதாயத்தினர் மத்தியிலும் அவர்கள் தயவு பெற்றவர்களாக இருந்தார்கள். அந்நாட்களில் அவர்களுடைய வாழ்க்கை முறை மற்றவர்களில் ஒரு தாக்கத்தைக் கொண்டு வந்தது. அந்நாட்களில் தேவனுடைய செயல்கள் மிக வல்லமையுள்ளதாக இருந்ததற்கான காரணம் என்ன? ஏனெனில் அந்நாட்களில் சபை வேதத்தில் கூறப்பட்டுள்ள தேவனுடைய ஆலோசனையை தேடுவதற்கு தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். விசுவாசிகள் வேதம் கற்றுத் தந்த படி வாழ்ந்தார்கள். வேதம் கற்றுத் தந்தபடி அவர்கள் தேவனுடைய இருதயத்தைத் தேடினார்கள். அதன் விளைவாக அவர்கள் சமுதாயத்தில் தேவனுடைய கிரியைகள் பலமாக வெளிப்பட்டது.

இந்த பகுதியின் மூலமாக நாம் என்ன கற்றுக் கொள்கின்றோம்? தேவ ஆலோசனைகள் வேத வார்த்தைகளில் காணப்படுகின்றது என்பதைப் பார்த்தோம். தேவன் நமக்கு வழிகாட்டியாக மற்றும் நம் பாதைகளை காண்பிப்பதற்காக தம்முடைய வார்த்தைகளை நமக்கு கொடுத்திருக்கின்றார். அவருடைய வார்த்தைகள் தேவனைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியவைகளையும் மற்றும் அவருடைய ஆசீர்வாதங்களின் கீழ் நாம் எவ்வாறு வாழ்வது என்பது பற்றியும்

நமக்குக் காட்டித் தருகின்றது. தேவன் இராஜாக்களுக்கும் தேசத்தை ஆண்ட தலைவர்களுக்கும் வேதத்தை தினந்தோறும் வாசித்து தியானம் செய்வது மட்டுமே அவர்களின் எல்லா சூழ்நிலைகளிலும் வழிநடத்துதலை பெற்றுக் கொள்ள வழிவகுக்கும் என கட்டளையிட்டிருக்கின்றபடியால் அது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

வேதாகமத்திற்கு வெளியில் ஆலோசனைகளை தேடுவதற்கு நாம் முயற்சிப்பதற்கு எல்லா வாய்ப்புகளும் உண்டு. ஆகவேதான் தேவனுடைய வார்த்தையின் போதனைகளுக்கு உண்மையாக இருக்கும்படி அவர் சொல்கின்றார், தேவனுடைய வார்த்தையை அறிந்து கொள்வதையும், என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் அந்த வார்த்தைக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து வாழ்வதனை தங்கள் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாக விசுவாசிகள் ஏற்றுக் கொள்வார்களானால் எப்படி இருக்கும் என சற்று கற்பனை செய்து பாருங்கள். நம்முடைய சபையிலும் சமுதாயத்திலும் என்ன நடந்திருக்கக் கூடும்? நம் சமுதாயம் மாற்றமடைந்திருக்காதா? தேவனுடைய ஆலோசனையை வேத வார்த்தைகளின் மூலம் அறிந்து கொள்ள முடியும். அந்த ஆலோசனைகளின் படி நடப்பது என்பது தேவனுடைய ஆசீர்வாதத்தை அறிந்து கொள்வதும் அவர் நமக்கு வைத்திருக்கின்ற வாழ்க்கையை அனுபவிப்பதுமாகும்.

## கவனத்திற்கு:

- நம் வாழ்க்கையில் வேதாகமத்தின் பங்கு என்ன?

- இஸ்ரவேல் மற்றும் யூத இராஜாக்களின் வாழ்க்கையில் வேதம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது?இந்த இராஜாக்கள் தேவனுடைய வார்த்தையை என்ன செய்ய வேண்டும் என தேவன் எதிர்பார்த்தார்?

- நம் வாழ்க்கைக்கு தேவனுடைய வார்த்தை எவ்வாறு வெளிச்சமாக இருக்க முடியும்? உங்கள் வாழ்க்கையில்

*தேவனுடைய வார்த்தை வெளிச்சமாக இருந்ததை ஒரு எடுத்துக் காட்டுடன் விளக்க முடியுமா?*

- *வேதத்தின் உண்மையான எழுத்தாளர் யார்? 2 தீமோத்தேயு 3:16-17ல் பவுல் கூறியுள்ளபடி வேதாகமத்தைக் கொடுத்ததன் தேவ நோக்கம் என்ன?*

- *ஒவ்வொரு விசுவாசியும் வேதத்தில் காணப்படுகின்றவாறு தேவ ஆலோசனையைத் தேடுவதற்கு முக்கியத்துவம் கொடுத்தால் உங்கள் சமுதாயத்தில் அல்லது சபையில் என்ன மாற்றங்கள் ஏற்படும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?*

## ஜெபத்திற்கு:

- *நம் வாழ்க்கைப் பாதையில் நமக்கு ஆலோசனை தரவும் நம்மை வழிநடத்தவும் வேதத்தை நமக்குத் தேவன் தந்திருப்பதற்காக அவருக்கு நன்றி சொல்ல சிறிது நேரம் எடுக்கவும்*

- *வேதத்தை கற்றுக் கொள்வதில் இன்னும் அதிக உண்மையாக இருக்க உதவி செய்யுமாறு ஜெபியுங்கள். அந்த வார்த்தைகளின் மூலம் தேவன் அவருடைய நோக்கத்தை வெளிப்படுத்தித் தரும்படி ஜெபியுங்கள்.*

- *தேவனுடைய வார்த்தையின் போதனைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பதற்கு தேவையான விருப்பத்தை தேவன் உங்களுக்குத் தருமாறு ஜெபியுங்கள்.*

- *உங்கள் சபையிலும் சமுதாயத்திலும் தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களுக்கு இன்னும் ஆழமான தாகத்தை தேவன் தூண்டிவிடும்படியாக ஜெபியுங்கள்.*

*தேவனுடைய வார்த்தையில் இன்னும் தீவிரமாக கவனம் செலுத்தாமலிருந்ததை தேவன் மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள்.*

அதிகாரம் 5

# வேதாகமமும் தேவனுடைய ஆவியானவரும்

கடைசி அதிகாரத்திலே வேதாகமத்தில் காணப்படும் தேவ ஆலோசனைகளைக் குறித்துப் பார்த்தோம். இந்த அதிகாரத்திலே பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆலோசனையைக் குறித்துப் பார்க்கப் போகிறோம்.

கிறிஸ்தவ சபையின் சரித்திரத்திலே, வேதாகம வார்த்தைகள் அதை மொழிபெயர்ப்பவரின் பாவ இச்சைகளுக்கேற்ப அவர்களின் தேவைகளைச் சந்திக்கும் விதத்தில் தவறாக பயன்பட்டதைக் குறித்து கவனிக்க முடியும். வேதாகம வார்த்தைகள் அது எழுதப்பட்டுள்ளதன் நோக்கத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு மக்கள் செய்த யுத்தங்களை நியாயப்படுத்தவும் மற்றும் பலவித அநியாயங்களை செய்வதற்கும் தவறாகப் பயன்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் முன்னர் வேதவார்த்தைகளை நீங்கள் எப்படி புரிந்து கொண்டீர்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். வேதாகமத்தை எந்த அளவு உங்களால் புரிந்து கொள்ள முடிந்தது?அதிலிருந்த அநேக சத்தியங்கள் உங்களுக்கு மறைக்கப்பட்டதாக இருக்க வில்லையா? சுவிசேஷ புத்தகங்களில் இயேசுவின் சீஷர்களைக் குறித்த சம்பவங்களை கவனிப்போமானால், இயேசு தன் போதனைகளில் அவர்களோடு பேசினவைகளை புரிந்து கொள்வதில் அவர்கள் மீண்டும் மீண்டும் தவறினவர்களாக இருந்தார்கள் என்பதனைக்

காணமுடியும். இயேசுவின் போதனைகளுக்கு சீஷர்களின் பதிலை மாற்கு சுவிசேஷத்தில் இவ்வாறு நாம் பார்க்க முடியும்.

> *30 பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவைக் கடந்து போனார்கள்; அதை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார்.*
> *31 ஏனெனில், மனுஷகுமாரன் மனுஷர்கைகளில் ஒப்புக்கொடுக்கப் படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்றும்; கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றும் அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதகம் பண்ணிச் சொல்லியிருந்தார்.*
> *32 அவர்களோ அந்த வார்த்தையை அறிந்து கொள்ளவில்லை, அதைக் குறித்து அவரிடத்தில் கேட்கவும் பயந்தார்கள். (மாற்கு 9:30-32)*

இயேசு சீஷர்களுக்கு என்ன போதிக்கின்றாரோ அதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை என்பதைக் கவனிக்கவும். இந்த சம்பவத்தில் மட்டும் இது நடைபெறவில்லை. அநேக தடவைகளில் இயேசு போதித்தவைகளை சீஷர்கள் அறிந்து கொள்ளவில்லை என்பதனை வேதத்தில் பல இடங்களில் நாம் கவனிக்க முடியும். (பார்க்க மத்தேயு 16:11; மாற்கு 6:52; லூக்கா 2:50; 9:45; யோவான் 8:27; 10:6; 12:16)

யோவான் 20:8-9 ஆகிய வசனங்கள் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த பின்னர் கல்லறைக்குச் சென்ற சீஷர்களைப் பற்றி கூறியுள்ளதைக் கவனியுங்கள்.

> *8 முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்தமற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான்.*
> *9 அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்கிற வேத வாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள்.*

வேதபகுதிகள் இருந்தது. ஆனால் இயேசுவைக் குறித்த பல வேதசத்தியங்கள் அவர்களின் கண்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது. தேவன் வேதவசனத்தின் மூலம் என்ன சொல்கின்றார் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. பாவசுபாவத்தால் நிறைந்துள்ள மனிதர்கள் தங்களுடைய மட்டுப்படுத்தப்பட்ட புரிந்து கொள்ளுதலின்மூலம் தேவனுடைய வார்த்தையிலுள்ள சத்தியங்களை புரிந்து கொண்டு அவற்றை தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்ப்பது சரியானதா?அநேக முறைகளில் அவருடைய வார்த்தை நம்முடைய புரிந்து கொள்ளலுக்கும் தர்க்கங்களுக்கும் முரண்பட்டதாகவே காணப்படும்.

இயேசு தன் பிதாவினிடத்திற்கு போகுமுன்னர் தன் சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் ஒன்றைக் கொடுத்தார்.

> *25 நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.*
>
> *26 என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லா வற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:25-26)*

தன் பிதாவானவர் அவர்களிடம் பரிசுத்த ஆவியை அனுப்புவார் என இயேசு தன் சீஷர்களிடம் சொன்னார். அந்த பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குப் போதிப்பதுடன் இயேசு சொன்ன எல்லாவற்றையும் தேவையான போது அவர்களுக்கு நினைப்பூட்டுவார். ஆகவே அவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ளத் தேவையில்லை.இயேசு என்னவெல்லாம் கற்றுக் கொடுத்தாரோ அவைகளை விளங்கப்படுத்தி தங்கள் வாழ்க்கையில் அவைகளை உபயோகிக்க தேவன் தன் பரிசுத்த ஆவியை அவர்களிடம் அனுப்புவார்.

அதன் பின்னர் யோவான் சுவிசேஷ புத்தகத்திலே இயேசு தன் சீஷர்களிடம் கூறியதை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

*12 இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.*

*13 சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள்யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான் 16:12-13)*

இயேசு தன் சீஷர்களிடம் ஊழியம் செய்து அவர்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த பொழுது, தான் சொல்ல விரும்பிய சத்தியங்களை புரிந்து கொள்ளும் பக்குவம் அவர்களிடம் இல்லை என்பதனை அவர் புரிந்து கொண்டார். அவருடைய வார்த்தைகளை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் அவற்றை வெளிப்படுத்த அவர்களுக்கு பரிசுத்தாவியானவரின் ஒத்தாசை தேவைப்பட்டது.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்திய சபைக்கு எழுதும் பொழுது பின்வருமாறு எழுதுகின்றார்:

*ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1 கொரிந்தியர் 2:14)*

மனிதனின் செயல்களுக்கும் தேவனின் கிரியைகளுக்குமிடையில் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. தேவனுடைய வழிகளை நம்மால் புரிந்து கொள்ள முடியாது.

மனித ஆலோசனைகள் தேவனை கட்டுப்படுத்தி விட முடியாது. மனித தர்க்கங்கள் அவருக்குப் பொருந்தாது. தன் ஜனங்களை உலர்ந்த தரையின் வழியாக நடத்திச் செல்வதற்காக அவர் கடலையே இரண்டாகப் பிளந்தவர். தன் ஊழியக்காரன் எதிரிகளை மேற்கொள்ளும் வரை சூரியனை தன் பாதையில் நிறுத்தி வைத்தவர். தன் ஜனங்களின் தாகத்தைத் தீர்ப்பதற்காக வனாந்தரத்தில் கற்பாறையைப் பிளந்து தண்ணீரைக் கொடுத்தவர். ஒரு வாலிபனுடைய கூழாங்கல்லைக் கொண்டு இராட்சதனை வீழச் செய்தவர். தன் ஊழியக்காரன் சிங்கக் கெபியில் போடப்பட்ட பொழுது சிங்கங்களின் வாய்களைக் கட்டிப் போட்டவர். தேவன் செய்யும் கிரியைகளை விசுவாசிப்பதில் நமக்குப் பிரச்சனைகள் உண்டு. நம்முடைய புரிந்து கொள்ளுதலுக்கு அவைகள் பைத்தியமானவைகளாகத் தெரியும்.

ஒரு நாள் இராத்திரி வேளையில் நிக்கொதேமு என்னும் பரிசேயன் இயேசுவின் போதனைகளைக் கேட்பதற்காக அவரிடம் வந்தான். நீ மறுபடி பிறக்காமல் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காணமுடியாது என இயேசு அவனிடம் சொன்னார். (யோவான் 3:3) இதைக் கேட்ட நிக்கொதேமு இயேசு என்ன சொல்லுகின்றார் என்பதைப் புரிந்து கொள்ளாமல் குழப்பமடைந்தான்.

> அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர் வயதா யிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன்தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். (யோவான் 3:4)

ஆனால் இயேசு தொடர்ந்து அவனிடம், இரண்டு முறை ஒருவன் பிறக்க வேண்டும் என்பதைக் குறித்து போதித்தார். அவன் முதலாவது ஜலத்தின் மூலமாகவும் பின்னர் ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்பதனைக் குறித்துப் போதித்தார்.

மேலும் இயேசு அவனிடம் "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால்பிறப்பதுஆவியாயிருக்கும்"(யோவான் 3:6) என கூறினார். நிக்கொதேமுவிற்கு இந்தப் போதனை கடினமான ஒன்றாகத் தெரிந்தது. ஆகவே அவன் இயேசுவிடம் "இவைகள் எப்படியாகும்" (யோவான் 3:9) என்று கேட்கின்றான்.

*இதற்கு இயேசு இவ்வாறு பதில் கூறினார்:*

*10 நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?*
*11 மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை.*
*12 பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவான் 3:10-12)*

இயேசு சொன்னதை நிக்கோதேமுவினால் சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை. இயேசுவின் போதனை அவனுக்கு எந்த புரிந்து கொள்ளலையும் கொண்டுவரவில்லை.இயேசுவின் போதனைகளிலுள்ள முக்கியத்துவங்களை அவன் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் மனித திறமைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு புரிந்து கொள்ளல் அவனுக்கு தேவையாக இருந்தது.

லூக்கா 10:21-22ல் இயேசு பிதாவை நோக்கி ஜெபித்த ஜெபமொன்று காணப்படுகின்றது. ஆவிக்குரிய சத்தியங்களை புரிந்து கொள்ள தேவ ஆவியானவரின் கிரியைகள் நமக்கு எவ்வளவு அவசியம் என்பதை அந்த ஜெபத்தில் நாம் காணமுடியும்.

*21 அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து:*

*பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமா யிருந்தது.*

*22 சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான், குமாரனும், குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந்தவிர, வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான் என்றார். (லூக்கா 10:21-22)*

ஆவிக்குரிய உண்மைகள் ஞானிகளுக்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றது. ஏனென்றால் இந்த ஆவிக்குரிய உண்மைகளை மனித ஞானத்தின் மூலம் புரிந்து கொள்ள முடியாது. தேவன் சொல்லுபவைகளை தங்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் பெற்றோருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளும் சிறு குழந்தைகளைப் போல ஏற்றுக் கொள்பவர்களுக்கே தேவனுடைய சத்தியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றது.

நம்முடைய நாட்களில் விஞ்ஞானமும் மனித தர்க்கங்களும் மேலோங்கி நிற்பதனால் எல்லா சத்தியங்களும் அவற்றின் அளவிகோலாலேயே அளக்கப்படுகின்றது. ஆனாலும் தேவன் இவையெல்லாவற்றைப் பார்க்கிலும் மேலானவர். விஞ்ஞானமோ மனித தர்க்கங்களோ அவரைக் கட்டுப்படுத்த முடியாது. மனித திறமைகளினால் தேவனுடைய வழிகளை அறிந்து கொள்ள முடியாது. அவைகள் நமக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். தேவன் தம்மையும் அவரது நோக்கத்தையும் தம் வார்த்தைகளின் மூலமாக வெளிப்படுத்த ஆயத்தமாயிருக்கிறார். அத்துடன் இந்த ஆவிக்குரிய சத்தியங்களில் நம்மை வழிநடத்த தம் ஆவியானவரை நமக்குத் தந்திருக்கிறார்.

*இயேசு தன் பிதாவினிடம் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் தன் சீஷர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்: (யோவான் 14:15-17)*

> *15 நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.*
> *16 நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*
> *17 உலகம் அந்த ச்சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

*இந்த வசனங்களில் நாம் கவனிக்க வேண்டிய பல முக்கிய காரியங்கள் உண்டு. நீங்கள் என்னிடத்தில் அன்பா யிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்வீர்கள் என இயேசு தன் சீஷர்களிடம் கூறுவதை முதலாவதாக நாம் கவனிக்க வேண்டும். இன்னொரு விதமாகச் சொல்வதானால் தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைப் போல தேவ ஆலோசனையில் அவர்கள் நடப்பார்கள். இயேசுவின் போதனைகளை இந்த சீஷர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் எப்படி அவர்களால் கீழ்ப்படிந்து நடக்க முடியும்?*

*இதற்கான பதிலை வசனம் 16ல் இயேசு கூறுகின்றார். அதில் அவர் "உங்களுடனே என்றென்றும் இருக்கும்படிக்கு ஒரு தேற்றரவாளனை (உதவியாளரை) உங்களிடம் அனுப்புவேன் என கூறுகின்றார். இந்த உதவியாளரே பரிசுத்த ஆவியானவர். அவர் இந்த சீஷர்களில் தங்கி தேவன் எதிர்பார்ப்பவைகளை அவர்களுக்கு போதிக்கிறவர்.*

பரிசுத்த ஆவியானவரை நம்மால் காண முடியாதபடியால் இந்த உலகம் அவரைக் காணாது என இயேசு தன் சீஷர்களுக்கு போதிப்பதையும் இந்த வசனங்களில் கவனிக்க வேண்டும்.

மனிதனின் ஞானம் தான் காண்பவைகளை, முகர்ந்து பார்க்கக் கூடியவைகளை, தொட்டுப் பார்க்கக் கூடியவைகளை மற்றும் சுவைத்துப் பார்க்கக் கூடியவைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளக் கூடியது. ஆனால் பரிசுத்தாவியானவரின் கிரியைகள் அப்படிப்பட்ட சுபாவமுடையதல்ல. பரிசுத்தாவியானவரை நாம் பார்க்க முடியாது. பொதுவாக அவர் மனித குரலிலே பேசுவது இல்லை.

அவர் மென்மையாக நம் ஆவியுடனே பேசுகிறவர். இந்த உலகம் தான் காணாதவைகளை நம்பாது. ஆனால் ஒரு விசுவாசிக்கு தன் விசுவாசத்தின் மூலம் பரிசுத்தாவியானவரின் கிரியைகளை ஏற்றுக் கொண்டு அவருடைய பிரசன்னத்தையும் வழிநடத்துதலையும் உண்மையாகவே அனுபவிக்க முடியம்.

நம்மைச் சுற்றியுள்ள உலகம் தேவனுடைய ஆவியானவரின் கிரியைகளை புரிந்து கொள்ளாது. ஏன்! அநேக கிறிஸ்தவர்களும் கூட தேவனுடைய ஆவியானவரின் கிரியைகளை புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள் எனக் கூட நான் சொல்ல முடியும். வேதத்திலுள்ள சத்தியங்களை பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையில்லாமலேயே விளங்கப்படுத்திவிட முடியும் என எண்ணும் சிலரும் உண்டு. அப்படிப்பட்டவர்கள் ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கப்படுத்துவதற்கு மனித தர்க்க ரீதியான ஆராய்வுகளையும் புரிந்து கொள்ளலையும் சார்ந்து இருக்கிறார்கள். மனித ஞானத்தினால் புரிந்து கொள்ள முடியாத வேதத்திலுள்ள சத்தியங்களுக்கு நேராக நம் இருதயங்களை திறந்து விடுவதில் தேவனுடைய ஆவியானவரின் பங்கு என்ன என்பதனைப் பற்றியே இந்த அதிகாரத்தில் நாம் கவனித்தோம்.

வேதத்திலுள்ள சத்தியங்கள் ஆயிரக்கணக்கான வருட

பழமை வாய்ந்தது.அநேகர் அவற்றை வாசித்து கற்றுக் கொண்டார்கள். ஆனால் அவைகளால் எந்த மாற்றத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. இன்னும் சிலர் அவற்றை பிரசங்க பீடத்திலிருந்து பிரசங்கம் பண்ணினார்கள் அல்லது அந்த வார்த்தைகளை தங்கள் வாழ்க்கையின் அனுபவமாக்காமலேயே கற்றுக் கொடுத்தார்கள்.

இவர்களுடைய வாழ்க்கையில் சத்தியத்தை வாழ்க்கையின் உண்மையான அநுபவமாக்கித்தரக்கூடிய தேவனுடைய ஆவியானவரின் ஒத்தாசை என்ற ஒன்று குறைவாக இருந்ததே இதன் காரணமாகும். சத்தியம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையை மாற்றிவிட முடியாது. ஆனால் தேவனுடைய ஆவியானவரால் வல்லமை படுத்தப்பட்ட சத்தியமே வாழ்க்கையை மாற்றி விடக் கூடியது.

தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவ ஞானத்தை நாம் புரிந்து கொள்வதற்கு, பரிசுத்த ஆவியானவரின் கற்றுக் கொடுத்து வழிநடத்தும் ஊழியம் நமக்கு அவசியம். ஆவியானவரின் ஒத்தாசை எனக்குத் தேவை என்பதை அறிக்கை செய்து நம் இருதயங்களை அவருக்குத் திறந்து கொடுக்கும்போது வசனங்களை புதிய வெளிச்சத்துடன் நாம் பார்க்க முடியும். தேவனுடைய ஆவியானவர் வேதத்திலுள்ளவைகளை நமக்குக் கற்றுத் தர ஆரம்பித்து இதுவரை நாம் புரிந்து கொண்டிராத சத்தியங்களை நம் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த வழிகாட்டுவார். அநேக வேளைகளில் வேதத்திலுள்ள சத்தியங்களை புரிந்து கொள்ளவும் அவற்றை நம் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தவும் ஆவியானவரின் ஒத்தாசை நமக்கு அவசியம் என்பதை நாம் கண்டு கொள்ளத் தவறிவிடுகின்றோம். அவருடைய வார்த்தைகளை வாசிப்பதில், மொழிபெயர்த்து புரிந்து கொள்வதில் மற்றும் பிரசங்கிப்பதில் நாம் அவரை ஒதுக்கி வைக்கின்றோம். தேவனுடைய சத்தியங்களை நாம் புரிந்து

கொள்ள வேண்டுமென்றால் ஆவியானவரின் வழிநடத்துதல் மற்றும் அவரின் போதனைகளின் அவசியத்தை முதலாவதாக நாம் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்.

இந்த அதிகாரம், நாம் இதுவரை தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொண்ட விதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட விதத்தில் அதைக் கற்றுக் கொள்ளுவதற்கு நம்மை அழைக்கின்றது. தேவன் தம்முடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்களின் முழுமையை அறிந்து கொள்ளுமளவிற்கு நம் மனுஷீக புரிந்து கொள்ளல் இல்லாதபடியினால் நமக்கு பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலும் போதனைகளும் தேவை. சத்தியங்களை புரிந்து கொள்ளுவதில் நம்மை வழிநடத்த, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தாவியானவரை நமக்காக அனுப்பியிருக்கின்றார். வேதத்திலுள்ள மறைபொருள்களை அவர் நமக்குக் காண்பித்துத் தருவதற்கு நம் இருதயங்களை அவருக்கு திறந்து கொடுக்க வேண்டும் வேதத்தின் பக்கங்களை நாம் திருப்பும் போது நம்மைத் தாழ்த்தி பரிசுத்தாவியானவரின் உதவி நமக்குத் தேவை என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். பரிசுத்தாவியானவரைப் போல ஒரு ஆசிரியர் வேறு யாரும் இல்லை, அவருடைய போதனைகள் வாழ்க்கையை மாற்றக் கூடியது.

## கவனத்திற்கு:

- *இயேசு கற்றுக் கொடுத்தவைகளை அவருடைய சீஷர்கள் முழுமையாக புரிந்து கொண்டார்களா?*

- *இயேசு பரிசுத்தாவியானவரின் முக்கிய வேலைகளில் ஒன்றென எதைக் குறித்துக் கற்றுக் கொடுத்தார்?*

- *வேதத்திலுள்ளவைகளை புரிந்து கொள்ளவும் அவற்றை நம் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தவும் நமக்குள்ள அறிவு போதுமானதா? விளக்குக:*

- *தேவனுடைய ஆலோசனைகள் மனித சிந்தையால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருக்கின்றதா?*

- *பரிசுத்த ஆவியானவரின் போதிக்கும் ஊழியத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டியதன் அவசியம் என்ன? பரிசுத்த ஆவியானவரில்லாமல் தேவனுடைய வழிகளையும் அவருடைய ஆலோசனகளையும் நம்மால் புரிந்து கொள்ள முடியுமா?*

- *தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கும் போதும் கற்றுக் கொள்ளும் போதும், தேவனுடைய ஆவியானவரின் வழிநடத்துதல் அவசியம் என்பதனை எவ்வளவாய் உணருகின்றீர்கள்.?உங்கள் சொந்த புத்தியினாலே வேதவசனங்களை புரிந்து கொள்ள முயற்சிக்கின்றீர்களா அல்லது தேவ ஆவியானவரின் வழிநடத்துதலையும் ஆலோசனையையும் தேடுகின்றீர்களா?*

## ஜெபத்திற்கு:

- *தேவனுடைய சத்தியங்களுக்குள் நம்மை வழிநடத்த தேவன் தம் ஆவியானவரை நமகுத் தந்திருக்கின்றபடியால் அவருக்கு நன்றி செலுத்துவோம்.*

- *உங்கள் சொந்த ஞானத்தினால் கற்றுக் கொள்வதைப் பார்க்கிலும் தேவனுடைய ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்துபவைகளை அதிகமாக சார்ந்திருக்க தேவன் உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.*

- *உங்கள் மாம்ச சிந்தையின் அறிவினாலே ஆவிக்குரிய இரகசியங்களை புரிந்து கொள்ள முடியும் என்று நீங்கள் நினைத்ததை மன்னிக்கும்படியாக தேவனிடம் கேளுங்கள்.*

- *வேதத்திலுள்ள சத்தியங்களை உங்களுக்கப் போதிப்பதற்கு பரிசுத்தாவியானவரின் கிரியைகளுக்கு உங்களை இருதயங்களை திறந்து விட ஜெபியுங்கள்.*

அதிகாரம் 6

# ஆவியானவரின் ஆலோசனை

*5ம் அதிகாரத்தில் தேவனுடைய வார்த்தையை கற்றுத் தருவதில் தேவ ஆவியானவரின் பங்கைப் பற்றி நாம் ஆராய்ந்தோம். வேதாகமத்தில் உள்ளதைப் போலவேஅவர் தேவனுடைய ஆலோசனையை வெளிப்படுத்தித் தருகின்றார். இதில் நாம் புரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால்வேதத்திலுள்ள சத்தியங்களை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தித் தருவது மட்டுமல்லாமல், நாம் அநுதினமும் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அந்த சத்தியங்களின் அடிப்படையிலே செயல்பட உதவி செய்வதே அவரின் பங்காகும். பரிசுத்தாவியானவர் நமக்குப் போதிக்கும் சத்தியங்களை நம் வாழ்க்கையில் பயன்படுத்தும் சூழ்நிலைகளுக்குள் நம்மை வழிநடத்துவார் என்றே சொல்ல வேண்டும்.*

*எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் 8ம் அதிகாரத்தில் எசேக்கியேல் யூதாவின் மூப்பர்களுடன் அவருடைய வீட்டில் அமர்ந்திருப்பதைக் குறித்து எழுதியுள்ளதை வாசிக்கின்றோம். அந்த மூப்பர்கள் தேவனுடைய ஆலோசனையைக் கேட்பதற்காகவே வந்திருந்தனர். அவ்வாறு அவர்கள் உட்கார்ந்திருந்த பொழுது கர்த்தருடைய கரம் தீர்க்கதரிசியின் மேல் அமர்ந்து அவர் ஒரு தரிசனத்தைப் பார்க்கின்றார். அந்தத் தரிசனத்தில் அவர் அக்கினிச்சாயலாய் தோன்றுகின்ற ஒருவரை, அவருடைய இடுப்புக் கீழெல்லாம் அக்கினியும் அவருடைய இடுப்புக்கு மேலெல்லாம் சொகுசாவைப் போலவும் இருக்கக் காண்கின்றார் (எசேக்கியேல் 8:2) தொடர்ந்து என்ன நடந்து என்பதை எசேக்கியேல் பின்வருமாறு விவரிக்கின்றார்.*

*கைபோல் தோன்றினதை அவர் நீட்டி, என் தலைமயிரைப் பிடித்து என்னைத் தூக்கினார்; ஆவியானவர் என்னைப் பூமிக்கும் வானத்துக்கும் நடுவே கொண்டுபோய், தேவதரிசனத்திலே என்னை எருசலேமில் வடதிசைக்கு எதிரான உள்வாசலின் நடையிலே விட்டார்; அங்கே எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தின் ஸ்தானம் இருந்தது. (எசேக்கியேல் 8:3)*

அந்த நாளிலே இஸ்ரவேலரின் விசுவாச நிலையைக் குறித்து மறைவாயிருந்தவைகளை தேவன் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கின்றார். இஸ்ரவேலில் காணப்பட்ட விக்கிரக ஆராதனையையும் அதனால் தேவனுக்கு ஏற்பட்டுள்ள கோபத்தையும் குறித்து அந்த தரிசனத்திலே தேவன் அவருக்குக் காண்பிக்கின்றார். தேசத்தில் காணப்பட்ட இந்த பயங்கரமான பாவத்தினிமித்தம் அவர்களுக்கு செவிகொடுக்கமாட்டேனென்றும் அவர்களுடைய கதறலைக் கேட்கமாட்டேனென்றும் அங்கே வந்திருந்த மூப்பர்களிடம் கூறினார். தன் ஜனத்தில் மறைந்து காணப்பட்ட பாவங்களை தேவன் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்துகின்றார்.

எசேக்கியேலிடம் வெளிப்படுத்தப்பட்டபடியே புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலன் யோவானிடமும் வெளிப்படுத்தப்பட்டது.

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் தேவனுடைய நோக்கத்தை வெளிப்படுத்துவதிலே ஆவியானவரின் கிரியைகளைக் குறித்த பல வசனங்களை உள்ளடக்கியுள்ளது.

*கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்.*
*அது: நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு*

*புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது. (வெளி. 1:10-11)*

ஆவிக்குள்ளானேன் என வெளி. 1:10ல் குறிப்பிட்டுள்ளதை கவனிக்க வேண்டும். தேவனுடைய ஆவியானவரே இந்த சத்தியங்களை யோவானுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார் என்பதை நாம் இந்த பகுதியில் புரிந்து கொள்ளவேண்டும். "ஏழு சபைகளின் நன்மைக்காக நான் உனக்கு காண்பிக்கும் அனைத்தையும் எழுதி வை என அவர் யோவானிடம் சொல்லுகின்றார். "ஆவிக்குள்ளானேன்" என்னும் வார்த்தை வெளிப்படுத்தல் புத்தகத்திலே பலதடவைகள் காணப்படுகின்றது. யோவான் கண்ட தரிசனங்கள் அவனுடைய சொந்த கற்பனையில் ஏற்பட்டவைகளல்ல, பதிலாக அவைகள் தேவனுடைய பரிசுத்தாவியானவரால் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளானபடியால் 'ஆவிக்குள்ளானேன்' என்னும் வார்த்தை முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையாகும்.

எசேக்கியேல் மற்றும் யோவான் ஆகிய இருவரும் கண்ட தரிசனங்கள் தேவனால் வெளிப்படுத்தப்பட்டவைகள் என்பதை நாம் தெளிவாகக் காண்கின்றோம்.வேதத்திலுள்ள தீர்க்கதரிசனெங்களெல்லாம் தேவனுடைய ஆவியினாலே சொல்லப்பட்டதாக பேதுரு எழுதியுள்ளார்:

*20 வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது.*
*21 தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்தமனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (1 பேதுரு 1:20-21)*

தேவனுடைய ஆவியானவர், தேவனுடைய இருதயத்தையும் சிந்தையையும் ஜனங்களுடன் பகிர்ந்து கொள்ள தம் ஊழியர்களையும், தம் தீர்க்கதரிசிகளையும் பயன்படுத்தினார். மனித கண்களால் காண முடியாதவைகளை தேவன்அவர்களுக்கு வெளிப்படுத்தினார். தேவனுடைய ஞானத்தை அவர் இந்தத் தீர்க்கதரிசிகளுக்கு பகிர்ந்தளித்தார். வேதத்தை எழுதிய தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையிலே இது எவ்வளவு உண்மையாக இருந்ததோ அதுபோலவே இஸ்ரவேலிலிருந்த சாதாரண மக்களின் வாழ்க்கையிலும் அது உண்மையாகவே இருந்தது.

லூக்கா *2:25-26*ல் சிமியோன் என்னும் பேருள்ள ஒரு அர்ப்பணிப்புள்ள மனிதனைக் குறித்து வாசிக்கின்றோம். லூக்கா *2:26* இவ்வாறு சொல்லுகின்றது:

> கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப் பட்டுமிருந்தது.

இங்கும் சிமியோன் மேசியாவைக் காணும் வரை மரணமடையமாட்டான் என தேவனுடைய ஆவியானவர் அவனுக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பதை கவனிக்க வேண்டும். மேசியா ஒருவர் வருவார் என வேதாகம வசனங்கள் மூலம் சிமியோன் அறிந்திருந்தாலும், அந்த வசனங்கள் சிமியோன் அந்த மேசியவைக் காண்பான் என குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இந்த வெளிப்பாடு தேவனுடைய ஆவியானவரிடமிருந்து அவனுக்கென்று கொடுக்கப்படுகின்றது., ஒருநாள் இயேசு தன் பெற்றோரால் தேவாலயத்திற்கு கொண்டு வரப்பட்டபொழுது சிமியோன் அவரைத் தன் கைகளில் ஏந்தி அவரைக் காணும் சிலாக்கியத்தை தேவன் கொடுத்ததற்காக தேவனுக்கு நன்றி சொல்கின்றார்.

பிலிப்பு என்னும் சுவிசேஷகன் அந்த மகாபெரிய எழுப்புதலின் நாட்களில் சமாரியாவின் பகுதிகளில் இருந்தார். அப்பொழுது ஒரு தேவதூதன் அவனிடம் வந்து சமாரியாவை

விட்டு காசா வனாந்திரபகுதிக்கு செல்லும்படி கூறினான். பிலிப்பு தூதன் சொன்ன வார்த்தையைக் கேட்டு காசா வனாந்திரத்திற்கு செல்லும் போது எத்தியோப்பிய மந்திரி ஒருவன் தன் இரதத்தில் பிரயாணம் பண்ணிக் கொண்டிருப்பதைக் கண்டான். அப்போஸ்தலர் 8:29-31 இவ்வாறு கூறுகின்றது.

> *29 ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடனே சொன்னார்.*
> *30 அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்.*
> *31 அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும் படி அவனை வேண்டிக்கொண்டான்.*

அன்றைய தினம் ஒரு எத்தியோப்பிய மனிதனுக்கு இயேசுவைப் பற்றிய சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ள பிலிப்புவிற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இது எவ்வாறு நடந்தது என்பதனை கவனியுங்கள். ஒரு தேவதூதன் பிலிப்புவை காசா வனாந்திரத்துக்கு போகும்படி சொல்லுகின்றான். பின்பு தேவனுடைய ஆவியானவர் அவனை அந்த இரதத்துடன் இணைந்து கொள்ளும்படி கூறுகின்றார். எத்தியோப்பிய மந்திரி ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தைப் புரிந்து கொண்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்காகவே தேவன் குறிப்பாக பிலிப்புவை அவருக்கு ஊழியம் செய்ய வழிநடத்தினார்.

தேவனுடைய ஆவியானவர் மற்றும் தேவதூதனுடைய குறிப்பான வழிநடத்துதலில் நம் கவனத்தை அதிகம் செலுத்தி பிலிப்பு எவ்வாறு எழுதப்பட்ட வேதவார்த்தையினால் வழிநடத்தப்பட்டார் என்பதை மறந்து விடக்கூடிய வாய்ப்புக்கள்

அதிகம் உண்டு. எத்தியோப்பிய மந்திரி வேதவார்த்தைகளை வாசித்துக் கொண்டிருந்தார் என்பதை கவனியுங்கள். பிலிப்பு அவருக்கு விளக்கப்படுத்திக் காண்பித்ததும் அந்த வேத வார்த்தைகளையே. எழுதப்பட்ட வேத வார்த்தைகளை வெளிப்படுத்த பிலிப்புவை தேவனுடைய ஆவியானவர் பயன்படுத்தியதால் அந்த மந்திரி மேசியாவை ஏற்றுக் கொண்டார். தேவனுடைய குறிப்பான வழிநடத்துதலும் வேதவார்த்தையின் ஆலோசனையும் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட்டு ஒரு மந்திரியின் வாழ்க்கையில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றியது. காசா வனாந்தரத்திலே சத்தியத்தைத் தேடிக்கொண்டிருந்த மந்திரிக்கு தேவனுடைய வார்த்தையை திறந்து கொடுக்க பரிசுத்தாவியானவர் பிலிப்புவை வழிநடத்தினார்.

அப்போஸ்தலர் 11:28-30 வரையுள்ள பகுதி அகபு என்னும் தீர்க்கதரிசி ஒருவரைக் குறித்துப் பேசுகின்றது. 28ம் வசனம் ஆவியானவராலே இந்த உலகத்தில் கொடிய பஞ்சம் உண்டாகும் என முன்னறிவித்தான். வேதவசனம் இந்த பஞ் சத்தைப் பற்றி அறிவிக்கவில்லை, ஆனால் அது குறிப்பாக அகபு என்னும் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தப்பட்டது. இதன் விளைவை அப். 11:29ல் வாசிக்க முடியும்.

> அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள்.
> (அப். 11:29)

இந்த பஞ்சத்தைக் குறித்த உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்பது பரிசுத்தாவியானவரின் நோக்கமாகும். இதன் மூலம் சபை வேதத்திலுள்ள போதனையின்படி கிறிஸ்துவுக்குள்ளான தங்கள் சகோதர சகோதரிகளுக்கு இரக்கத்தையும் தயாள குணத்தையும் காண்பிக்க விரும்பினார்.

சபையின் ஆரம்ப காலங்களில் விசுவாசிகள் யூத மக்களுக்கு மாத்திரம் ஊழியம் செய்தனர்.அப்போது இரட்சிப்பு புறஜாதிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதைச் சரிப்படுத்துவதற்காக தேவனுடைய ஆவியானவர் புறஜாதிகளும் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்கள்தான் என்பதை வெளிப்படுத்த ஆரம்பித்தார். ஒரு குறிப்பிட்ட நாளிலே பேதுரு ஒரு வீட்டின் மேல் அறையிலே இருந்தபொழுது ஆண்டவர் அவனுக்கு ஒரு தரிசனத்தை கொடுத்தார். அந்த தரிசனத்திலே ஒரு துப்பட்டி அசுத்தமான மிருகங்களால் நிறைந்திருந்ததாக கீழே இறங்கி வந்தது. அப்பொழுது வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி பேதுருவே எழுந்து இதை அடித்துப் புசி என்று சொல்லியது. இந்த தரிசனத்தினால் பேதுரு குழப்பமடைந்து இருக்கும் போது தேவ ஆவியானவர் அவனுடன் பேசினார்:

> *19 பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்.*
>
> *20 நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார். (அப். 10:19-20)*

பேதுருவை அழைத்துக் கொண்டு செல்ல வந்த மனிதர்கள் அவனை கொர்நேலியு என்னும் புறஜாதி மனிதனிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.இந்த கொர்நேலியுவும், பேதுரு என்னும் ஒருவனிடத்திற்கு ஆள் அனுப்பி வரச் சொல்லவும் அவன் வந்து கொர்நேலியு என்ன செய்ய வேண்டும் என்பதனை அவனுக்கு தெரியப்படுத்துவான் என்றும் ஒரு தரிசனத்தில் கண்டிருந்தான். அந்த நாளிலே பேதுரு கொர்நேலியுவின் குடும்பத்தாருடன் நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டார். அவர்கள் அனைவரும் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். அப்பொழுது

தேவனுடைய ஆவியானவர் அவர்கள் அனைவர் மேலும் வந்து இறங்கினார். அப்பொழுதுதான் தேவன் தன் குடும்பத்தில் புறஜாதிகளையும் ஏற்றுக் கொள்கின்றார் என்பதனை பேதுரு புரிந்து கொண்டான்.

இந்த பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதல் சபையை அசைத்தது.

ஒரு புறஜாதி மனிதன் இயேசுவைப் பின்பற்றுபவராக மாறினால் அவர் யூதனாக மாறி மோசேயின் நியாயப் பிரமாணங்களைப் பின்பற்றுபராகவும் மாறவேண்டும் என சிலர் நம்பினர். உண்மையில் சொல்லப்போனால் இந்த பிரச்சனை யினால் கருத்து வேறுபாடு உண்டானபடியால், இதைக் குறித்து விவாதிக்க எருசலேமிலே அவர்கள் எல்லோரும் ஒன்றாக கூடினார்கள். இதன் விளைவாக எருசலேம் சங்கத்தினரிடமிருந்து புறஜாதி விசுவாசிகளுக்கு கீழ்கண்டவாறு கடிதம் ஒன்று எழுதப்பட்டது:

> *28 எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகி யிருக்க வேண்டுமென்பதே.*
>
> *29 அவசியமான இவைகளையல்லாமல் பாரமானவேறொன்றையும் உங்கள் மேல்சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக்கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள். (அப்போஸ்தலர் 15:28-29)*

இதில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்பு என்னவென்றால் இந்தத் தீர்மானத்தை சபை எடுப்பதற்கு அவர்களை பரிசுத்தாவியானவர் வழிநடத்தினார் என்பதேயாகும்.

பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக்கண்டது என்றே அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

பேதுருவுக்கும் கொர்நேலியுவுக்கும் ஒரே தரிசனத்தைக் கொடுத்ததன் மூலம், பரிசுத்தாவியானவர் தேவனுடைய இருதயத்தை ஆதிசபைக்கு வெளிப்படுத்திக் கொடுத்தார். எருசலேமிலிருந்த அப்போஸ்தலர் தங்கள் இறுதி முடிவை எடுக்கும்போது அந்த முடிவு பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்த ஒன்று என்று உணர்ந்து கொள்ளும் விதத்தில் அவர் பேசினார் *(அப். 2:28).*

அப்போஸ்தலர் *13*ல் அந்தியோகியாவிலுள்ள சபை ஜெபத்திற்காக கூடி வந்தது. அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்த போது தேவனுடைய ஆவியானவர் அவர்களுடன் பேசினார்:

> *அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (அப்போஸ்தலர் 13:2)*

சவுலும் (பவுல்) பர்னபாவும்ஊழியத்திற்காக அனுப்ப பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாக இருந்த அது பரிசுத்தாவியானவர் மூலமாக சபைக்கு வெளிப்படுத்தப்பட்ட காரணத்தால் அவர்கள் இருவரும் முதல் மிஷனரி பிரயாணத்தில் அனுப்பப்பட்டார்கள். இந்த சத்தியங்கள் அன்று அவர்களிடம் இருந்த வேத வார்த்தைகளில் காணப்படவில்லையென்றாலும், இவர்கள் தேவனால் தெளிவாக வழிநடத்தப்படுகின்றோம் என்னும் நிச்சயத்துடன் சென்றார்கள். புறஜாதிகள் மத்தியில் பல சபைகளை நிறுவுவதற்காக ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றோம் என்னும் உறுதியுடன் சென்றார்கள். அவர்களின் பல மிஷனரி பிரயாணங்களிலே அவர்கள் தொடர்ந்து தேவ ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு வேத

சத்தியங்களை கேட்க ஆயத்தமாக இருந்த ஜனங்களுக்கு அவற்றைப் போதித்தார்கள். அப்போஸ்தலர் 16:6-9 இவ்வாறு சொல்கின்றது:

> 6 அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு,
> 7 மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப்பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.
> 8 அப்பொழுது அவர்கள் மீசியாபக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள்.
> 9 அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது.

பரிசுத்தாவியானவர் அவர்களை ஆசியாவுக்குப் போகாமல் தடைபண்ணினார் என்பதைக் கவனிக்கவும். பித்தினியா நாட்டிற்கும் போகவும் தடை பண்ணினார், ஆனால் அவர் பவுலிடம் ஒரு தரிசனத்தின் மூலமாக மக்கெதோனியா போக வழிநடத்தினார். இந்த அப்போஸ்தலர்கள் பரிசுத்தாவியின் வழிநடத்துதலுக்கும் வழிகாட்டுதலுக்கும் மிகவும் கவனமாக செவி கொடுக்கிறவர்களாயிருந்தார்கள். சிலவேளைகளில் இந்த வழிநடத்துதல்கள் அவர்களின் திட்டத்திற்கு எதிரானதாக காணப்பட்டது. அவர்களின் திட்டப்படி அவர்கள் ஆசியாவிற்கும் பித்தினியாவிற்கும் போக இருந்தார்கள், ஆனால் தேவ ஆவியானவர் மக்கெதோனியாவிலே அவர்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை வைத்திருந்தார். அந்த திட்டத்தை அவர்களும் பின்பற்றினார்கள்.

சிலவேளைகளில் தேவ ஆவியானவரின் வழிநடத்துதல் அவர்களை கடினமான பாதைகளில் நடத்தியது. அப்போஸ்தலர் 20:22-23ல் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்.

22 இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்.
23 கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்.

பவுல் எருசலேமுக்குப் போக ஆவியிலே கட்டப்பட்டிருந்தார். தன் வாழ்க்கையிலே இது தேவ ஆவியானவரின் வழிநடத்துதல் என பவுல் அறிந்திருந்தார், அத்துடன் எருசலேமுக்குப் போகும் பிரயாணத்திலே அவருக்கு மிகுந்த உபத்திரவங்கள் காத்திருக்கின்றது என்பதனையும் அவர் அறிந்திருந்தார். ஆனாலும் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு தன்னை ஒப்புக் கொடுத்தார்.

தேவ ஆவியானவரின் வழிநடத்துதலை அறிவதும் அதனைப் பின்பற்றுவதும் இந்த அப்போஸ்தலர்களுடைய ஊழிய பாதையில் முக்கிய கருவியாக காணப்பட்டது. அவர்களிடம் நீண்ட கால ஊழிய திட்டங்கள் இருக்கவில்லை. என்ன நேர்ந்தாலும் பரிசுத்தாவியானவரின் வழிநடத்துலுக்கு கீழ்ப்படிந்து நடப்பதன் மூலம் தேவனை கனப்படுத்துவது அவர்களுடைய முதன்மையான குறிக்கோளாக இருந்தது. அவர்கள் தங்கள் ஞானத்தையும் தங்கள் அனுபவங்களையும் சார்ந்திருக்கவில்லை. ஆனால் வேத சத்தியத்தில் காணப்படுகின்ற தேவ ஆலோசனையை எந்த கலப்படமும் செய்யாமல் போதித்து அதன்படி வாழ்ந்தும் காட்டினார்கள். தேவ ஆவியானவர் என்ன ஆலோசனை கொடுத்தாரோ அதனைப் பின்பற்றி நடந்தார்கள்.

ஆவியானவரின் ஆலோசனையையும் வழிநடத்துலையும் பின்பற்றுவது இயேசுவுக்கும் முக்கியமானதாக காணப்பட்டதனால்தான் அப்போஸ்தலர் 1:4ல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தாவியானவரை பெற்றுக் கொள்ளும் வரை எருசேலேமை விட்டு புறப்படவேண்டாம் என்று தன் சீஷர்களிடம் கட்டளையிட்டிருந்தார். ஏனென்றால் அவர்களுக்கிருந்த திறமையும் புரிந்து கொள்ளுதலும் அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளுக்கு போதுமானதில்லை என்பதனை அறிந்திருந்தார். தேவன் அவர்களை அழைத்த அழைப்பிலுள்ள வேலைகளை செய்து முடிப்பதற்கு அவர்களுக்கு தேவ ஞானம் அவசியமாக இருந்தது.

வேத வார்த்தையின் மூலமாகவும் ஆவியானவர் மூலமாகவும் இவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ ஆலோசனை யில்லாமல் இந்த நபர்கள் குருடர்களைப் போலவும் உதவியற்றவர்களைப் போலவுமே இருந்திருப்பார்கள். படிப்படியாக அவர்கள் வழிநடத்தப்பட பரிசுத்தாவியானவரின் ஒத்தாசை அவர்களுக்குத் தேவைப்பட்டது. இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிற மக்களிடம் அவர்களை நடத்தினார். அவர்களின் சிறந்த தலைவர்களை மிஷனரி பயணத்தில் அனுப்பினார். சில இடங்களுக்குப் போவதை தடை செய்து அவர் விரும்பும் இடங்களுக்குப் போக அவர்களை வழிநடத்தினார்.

இவையெல்லாவற்றிலும் தேவனுடைய ஆவியானவர் தன் ஜனங்களுக்கு ஆலோசனை கொடுத்து தேவனுடைய சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்திக் கொடுத்தார்.இந்த அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் நடந்த அதே காரியம் விசுவாசிகளாகிய நமக்கும் இன்றும் உண்மையுள்ளதாக இருக்கின்றது. தேவனுக்குரியவர்கள் தேவனுடைய ஆவியால் வழிநடத்தப்படுகின்றார்கள் என அப்போஸ்தலன் பவுல் கற்றுக் கொடுத்தார்.

*மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள்தேவனுடைய புத்திரரா யிருக்கிறார்கள். (ரோமர் 8:14)*

இதிலிருந்து தேவனுடைய மகனாக மற்றும் மகளாக இருக்கும் நாமும் இன்றும் தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்படுகின்றோம் என்பதனை புரிந்து கொள்ள முடியும்.தேவனுடைய சத்தியங்களை நம் வாழ்க்கையில் பிரயோகிக்கும் விதத்தில் அவர் நம்மை நடத்த விரும்புகின்றார்.தேவனுடைய ஆவியால் நடத்தப்படும் மக்களாக இருப்பது நமக்குக் கிடைத்த சிலாக்கியம் மட்டுமல்ல, அது நம்மேல் விழுந்த கடமையுமாகும்.

*அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். (ரோமர் 8:26)*

என அப்போஸ்தலர் பவுல் எழுதும் போது ரோம விசுவாசிகளுக்கு ஆவியானவரின் அவசியத்தை அவர் ஞாபகப்படுத்துகின்றார்.

இந்தப் பகுதியிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன? தேவனுடைய சித்தத்திற்குள் நம்மை வழிநடத்துவதும் வழிகாட்டுவதுமே தேவனுடைய ஆவியானவரின் செயலாகும் என்பதனை அறியலாம். நமக்கான பிதாவின் குறிப்பிட்ட நோக்கத்தை அவர் நமக்கு வெளிப்படுத்துவார். வேத வார்த்தைகளை அருளூட்டியவர் அவற்றைநாம் எப்படி பிரயோகிப்பது எனவும் வழிநடத்துவார். தேவ ஆவியானவர் நம் ஆலோசகர். எப்படி ஜெபிக்க வேண்டும் என நமக்குத் தெரியாது ஆனால் ஜெபத்தில் அவர் நம்மை நடத்துவார். நம் வாழ்க்கையில் தேவன் நிறைவேற்றப் போவது என்ன

என நமக்குத் தெரியாது, ஆனால் அது நிறைவேற்றப்படும் திசையில் அவர் நம்மை வழிநடத்திச் செல்வார். நாம் பேச வேண்டியது இன்னதென்று நமக்குத் தெரியாது, ஆனால் அவர் நமக்கு ஆலோசனை தந்து அந்த வார்த்தைகளையும் நமக்குத் தருவார்.

தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் வேலையை நம்மால் தனியாக செய்ய முடியாது, ஆனாலும் நாம் அதில் முயற்சிப்போம். நம் ஞானமும் நமக்குக் கிடைத்திருக்கும் பயிற்சிகளும் அதற்குப் போதுமென நினைத்து அவற்றைச் சார்ந்திருப்போம். ஆனால் உண்மை என்னவென்றால், தேவனுடைய ஆலோசனைக்கு செவிகொடுக்க ஆயத்தமாகி ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு நம்மை ஒப்புக் கொடுக்கும் வரை, நாம் தேவனுடைய ராஜ்யத்தின் வேலைகளுக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்குப் பதிலாக தடையாகவே இருப்போம். இதில் சகரியா தீர்க்கதரிசியின் வார்த்தைகள் நமக்கு முக்கியமானவைகள். செருபாபேலுக்கு ஆண்டவர் பேசும்போது அவர் இவ்வாறு சொன்னார்:

> *6 அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும்அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*
>
> *7 பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார். (சகரியா 4:6-7)*

செருபாபேலுக்கு கொடுக்கப்பட்ட தேவ ஆலோசனை இன்று நமக்கும் உள்ளதாக இருக்கின்றது. நமது பெலத்தினாலோ

அல்லது நமது பராக்கிரமத்தினாலோ தேவனுடைய வேலையை செயல்படுத்தி முடிக்க முடியாது. ஆனால் தேவனுடைய ஆவியானவர் தம் ஆலோசனைகளை நமக்குத் தந்து நம்மைத் தகுதிப்படுத்துவதன் மூலமே நடைபெறமுடியும். நமக்கு முன்னால் என்ன இருக்கின்றது என்பது நமக்குத் தெரியாமலிருக்கலாம். நாம் புரிந்து கொள்ளாத ஒன்றைப் பின்பற்றிப் போவதைப் போல நமக்குத் தோன்றலாம். ஆனாலும் நாம் தேவனுடைய ஆவியானவரின் சத்தத்திற்கு செவிகொடுக்க விருப்பமுள்ளவர்களாயிருந்தால் அவர் நம்மை நடத்தி நமக்கு ஆலோசனை சொல்லுவார். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்டு அவரின் வழிநடத்துதலைப் பின்பற்றத் தேவையான கிருபைகளை தேவன் நமக்குத் தந்தருள்வாராக.

## கவனத்திற்கு:

- அப்போஸ்தலர்களுக்கு தேவனுடைய சத்தியங்களை வெளிப்படுத்துவதில் தேவனுடைய ஆவியானவரின் பங்கு என்ன?

- பிலிப்பு மற்றும் சீமோனுக்கு தேவனுடைய குறிப்பிட்ட நோக்கத்தை தேவனுடைய ஆவியானவர் எவ்வாறு வெளிப்படுத்தினார்?இன்றும் தேவ ஆவியானவர் இவ்வாறு வெளிப்படுத்துகின்றார?

- தேவனுடைய ராஜ்யத்தை விரிவாக்கும் பணியை கவனத்தில் எடுத்துக் கொள்வோம். இதில் தேவனுடைய ஆவியானவரின் வழிநடத்துதலை பின்பற்றுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? தேவனுடைய நோக்கத்தைப் புரிந்து கொள்ளுமளவிற்கு நமக்கு போதுமான ஞானம் இருக்கின்றதா?

- தேவ ஆவியானவர் உங்களை எவ்வாறு வழிநடத்துகின்றார்?

## ஜெபத்திற்கு:

- பரிசுத்தாவியானவரே தீர்க்கதரிசனங்களை ஆக்கியோனாகவும் தேவனுடைய சத்தியங்களை தன் ஊழியர்களுக்கு வெளிப்படுத்துவதற்காகவும் நன்றி சொல்ல சிறிது நேரமெடுங்கள்.

- நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள பொறுப்பு மிகப் பெரியதாக இருந்தாலும், தேவன் தன் ஆவியானவரை நம்மை படிப்படியாக வழிநடத்துவதற்காக கொடுத்திருப்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

- தேவனுடைய இராஜ்ஜியத்தில் வெற்றிகரமான முறையில் வேலை செய்வதற்கு பரிசுத்தாவியானவரின் உந்துதல் மற்றும் வழிநடத்துதலை கற்றுக் கொள்ள தேவன் உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.

- உங்கள் சொந்த ஞானத்தை நம்பி, தேவ ஆவியானவரின் அவசியத்தை சார்ந்திராமல் போன நேரங்களை தேவன் மன்னிக்கும்படி ஜெபியுங்கள்.

அதிகாரம் 7

# நியாயப் பிரமாணமும் தேவனுடைய குறிப்பான வழிநடத்துதலும்

சில நாட்களுக்கு முன்னர், என் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். அந்த நாட்களில் நான் வெளிநாட்டுக்கு முதல் முறையாக மிஷனரி பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். ஆகவே அந்த நண்பருடன் பேசும் பொழுது, "ஆண்டவர் என்னை மோரீஷியஸ் தீவுகளுக்கு போக வழிநடத்துகின்றார்" என கூறினேன். "தேவன் உன்னை மோரீஷியஸ் தீவுகளுக்குப் போக வழிநடத்துகின்றார் என்று என்ன அர்த்தத்துடன் சொல்லுகின்றாய்? " என என் நண்பர் என்னைப் பார்த்துக் கேட்டார். நான் "இதுதான் தேவன் என்னை வழிநடத்தும் விதமாக என் இருதயத்தில் உணருகின்றேன். அதிலும் இந்த குறிப்பிட்ட நாட்டிற்கு என்னை போகச் சொல்வதாகவும் உணருகின்றேன்" என்று கூறினேன். என் நண்பருடன் இவ்வாறு பேசிக் கொண்டிருந்த பொழுது, அவரோ இந்த திட்டத்தை தேவன் விரும்பவில்லை என என்னிடம் கூறினார். தேவன் தன் வார்த்தைகளினால் மட்டுமே வழிநடத்துவார் என அவர் நம்பினார். ஆனால் நாம் வசனத்தை வாசிக்கும் பொழுது உலகமெங்கும் செல்லுவதற்காக தேவன் அழைப்பதை நாம் காணமுடியும்.

அத்துடன் தன் ஊழியக்காரருக்கு தேவையான வரங்களையும் தருகின்றார் எனவும் காணமுடியும். என் நண்பரின் கருத்து என்னவென்றால் இவையெல்லாவற்றையும் நாம்ஆராய்ந்து பார்த்து, எங்கே நம் வரங்களையும் திறமைகளையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என

தீர்மானித்து அந்த இடத்திற்கு போக வேண்டும் என்பதாகும். ஆனால் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு போய் ஊழியத்தை செய்ய தேவன் எதிர்பார்ப்பார் என அவர் நம்பவில்லை. தேவ வார்த்தைகளின் போதனையின் அடிப்படையிலேயே ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவையான வரங்கள் மிகச்சிறப்பான முறை யிலே கொடுக்கப்படுகின்றது.

இதை நாம் ஆராயும்பொழுது ஒரு காரியத்தை தெளிவுபடுத்த விரும்புகின்றேன். தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கத்திற்கான வழிகாட்டி நம் வேதாகமமே.விசுவாசியின் வாழ்க்கையில் வேதவசனமே முழு அதிகாரம் உள்ளதாகவும் இந்த உலகத்தில் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் எல்லாவற்றிற்கும் வழிகாட்டியாகவும் இருக்கின்றது. நம் வாழ்க்கை வேத வசனத்தின் அஸ்திபாரத்திலேயே கட்டப்பட வேண்டும். வேதாகமம் எல்லா காலங்களுக்கும், எல்லா கலாச்சாரங்களுக்கும் பொருந்தக் கூடியது. தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தியுள்ள அவருடைய சித்தத்திற்குமாறான விதத்தில் அவர் நம்மை வழிநடத்த மாட்டார். எல்லா சத்தியங்களும், நாம் செய்யும் எல்லா காரியங்களும் தேவனுடைய வார்த்தை என்னும் அளவு கோலிலேயே அளக்கப்பட வேண்டும்.

நம் வாழ்க்கையில் வேதாகமத்தின் அதிகாரத்தை குறித்து எந்த சந்தேகமும் இல்லாத அதே நேரத்தில், நம் வாழ்க்கையைக் குறித்த பல தீர்மானங்களுக்கு தேவையான பதிலை வேதாகமத்திலிருந்து இலகுவாக பெற்றுக் கொள்ள முடியாது. ஒரு போதருக்கு வேறொரு சபையை பொறுப்பெடுக்க அழைப்பொன்று வருவதாக வைத்துக் கொள்வோம். அவர் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பதனை வேத வசனத்தின் அடிப்படையில் தீர்மானிக்க முடியுமா? ஒரு மிஷனரி எந்த பகுதியில் ஊழியம் செய்ய வேண்டுமென்பதை எவ்வாறு புரிந்து கொள்வது? ஒரு வாலிபன் தனக்கு கிடைத்திருக்கும் வேலையை ஏற்றுக் கொள்வதா அல்லது

வேறொரு இடத்தில் வேலை கிடைக்கும் வரை காத்திருப்பதா என எப்படி தீர்மானிப்பது? இப்படிப்பட்ட தீர்மானங்களை நாம் எவ்வாறு எடுக்க முடியும்?

இதற்கான பதில் நாம் வேதத்தை ஆராய்வதன் மூலமாகவும் நம்முடைய தனிப்பட்ட தீர்மானங்கள் மூலமாகவும் கிடைக்கின்றது என சொல்லும் நபர்கள் இருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக ஒரு போதகர் தன்னுடைய திறமைகளும் தாலந்துகளும் ஒரு சிறிய கிராமத்தில் பயன்படுவதைப் பார்க்கிலும் பட்டணத்தில் அதிகமாக பயன்படலாம் என நினைத்து அங்கிருந்து வரும் அழைப்பை ஏற்றுக் கொள்ளக்கூடும். சில நாட்களுக்கு முன்னர் அநேக வருடங்களாக ஒரு சபையில் ஊழியம் செய்த ஒரு போதகருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவரை வேறொரு சபை அழைப்பதாக என்னிடம் கூறினார். அப்பொழுது அவர் அந்த சபைக்கு தற்பொழுதுள்ள சபை மூலமாக தனக்கு கிடைக்கும் நன்மைகள் மற்றும் பணம் ஆகியவற்றையெல்லாம் குறிப்பிட்டு அதைவிட அதிகமான நன்மைகள் அந்த சபையில் கிடைக்குமா? என கேட்டு எழுதினாராம். நாம் எங்கே தேவனுடைய ஊழியத்தை செய்ய வேண்டுமென்பதனை இப்படிப்பட்டவைகள்தான் தீர்மானிக்கின்றனவா?

அநேக ஆண்களும் பெண்களும் தங்களிடமிருந்த எல்லாவற்றையும் விட்டு விட்டு தேவனைப் பின்பற்றிதைக் குறித்து சபை சரித்திரத்தில் நாம் காணமுடியும். இயேசு தன் சீஷர்களை தன்னை பின்பற்றிவர அழைத்த பொழுது அவர்கள் தங்கள் குடும்பத்தினரையும் மற்றைய எல்லாவற்றையும் விட்டு விட்டு அவரைப் பின்பற்றினார்கள். இந்த மனிதர்கள் தங்களுடைய அனைத்திற்கும் மரிக்க ஆயத்தமுள்ளவர்களாயிருந்தார்கள். தங்களுக்கு நல்ல வருமானங்களை தரக்கூடிய வேலைகளையும் தங்களுக்கு பாதுகாப்பை தரக்கூடிய குடும்பத்தையும் விட்டு விட்டு இராஜாதி இராஜாவுக்கு சேவை செய்ய தங்கள் வாழ்க்கையை பணயம் வைத்தார்கள்.

தங்களுடைய மனித ரீதியான காரணங்களையும் தங்கள் விருப்பங்களையும் விட பெரிதான ஒன்றினை அடைய அவர்கள் உந்தித் தள்ளப்பட்டார்கள். தங்கள் வாழ்க்கையில் அவர்களால் விடுபட முடியாத ஒரு அழைப்பு அவர்களுக்கு கிடைத்தது. அந்த அழைப்பிலிருந்து அவர்களும் தப்பிக்க விரும்பவில்லை.

தீர்க்கதரிசியாகிய எரேமியா, தன் பிரசங்கத்தை கேட்க விரும்பாத ஒரு ஜனக்கூட்டத்திற்கு ஊழியம் செய்தவர். அவர் எந்த அளவிற்கு பிரசங்கித்தாரோ அந்த அளவிற்கு அவர் உபத்திரவப்படுத்தப்பட்டார். ஒரு முறை அவர் தேவனிடம் இவ்வாறு கதறினார்:

> 7 கர்த்தாவே, என்னை இணங்கப்பண்ணினீர், நான் இணங்கினேன்; நீர் என்னிலும் பலத்தவராயிருந்து, என்னை மேற்கொண்டீர்; நாள்தோறும் நகைப்புக்கு இடமானேன்; எல்லாரும் என்னைப் பரிகாசம்பண்ணுகிறார்கள்.
> 8 நான் பேசினது முதற்கொண்டு கதறுகிறேன்; கொடுமையென்றும் பாழ்க்கடிப்பென்றும் சத்தமிட்டுக் கூறுகிறேன்; நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று.
> 9 ஆதலால் நான் அவரைப் பிரஸ்தாபம் பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக்கூடாமற்போயிற்று. (எரேமியா 20:7-9)

தேவனுடைய நாமத்தைப் பிரசங்கிக்கக் கூடாதென எரேமியா பல நேரங்களில் தீர்மானிக்கின்றார். ஆனாலும் அவரால் முடியவில்லை. சொல்லப்போனால் தேவன்

கொடுக்கும் சத்தியங்களை பிரசங்கிக்கக் கூடிய இன்னும் பல இடங்கள் இந்த காயப்பட்ட தீர்க்கதரிசிக்கு இருந்திருக்கும். அவர் பிரசங்கத்தை யாரும் கேட்க விரும்பவில்லை. அவருடைய ஊழியத்தில் எந்த பிரதிபலனையும் அவரால் பார்க்கமுடியவுமில்லை. இதைப் பார்க்கும்போது இந்த ஊழியத்தைச் செய்வதற்கு அவர் சரியான நபர்தானோ என நாம் நினைக்கத் தோன்றும். ஆனாலும் எரேமியாவின் வாழ்க்கையில் அவரை விட்டு விலகாத ஒரு அழைப்பு இருந்து கொண்டே இருந்தது. உபத்திரவங்கள், பரிகாசங்கள் மற்றும் நிந்தைகள் மத்தியிலும் தான் தேவையென்பதை அவர் அறிந்திருந்தார். மனுஷீகமாக அவர் இப்படிப்பட்ட ஒரு ஊழியத்தை தீர்மானிக்க விரும்பியிருக்க மாட்டார். ஆனாலும் தேவன் அவரை அழைத்த அழைப்பிற்கு அவர் உண்மையுள்ளவராக இருக்க விரும்பினார். எரேமியாவைப் போன்ற பல ஆண்களும் பெண்களும் தங்கள் தனிப்பட்ட முன்னுரிமைகளை ஒதுக்கி விட்டு தேவன் தங்களுக்கு கொடுக்கும் அழைப்பு என தாங்கள் விசுவாசித்த அழைப்பிற்காக வெளியேறியதைக் குறித்து வேதத்தில் திரும்பத் திரும்ப பார்க்க முடியும். அந்த குறிப்பிட்ட அழைப்பைக் குறித்து வேதாகமத்திலே அவர்களுக்காக எழுதப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் அதற்குக் கீழ்ப்படியாவிட்டால் அவர்கள் தேவனுக்கே கீழ்ப்படியாதவர்கள் என்பதனை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

தேவன் நமக்காக அவர் ஆயத்தம் பண்ணியிருக்கிற இடங்கள் மற்றும் ஊழியங்களுக்கு தம்முடைய வார்த்தைகள் மூலமாக மட்டுமே நடத்துவாரா அல்லது வேறு வழிகளின் மூலமாக நம்மை குறிப்பாக நடத்துவாரா?

இதற்கு பதிலளிப்பதற்காக நாம் பழைய ஏற்பாட்டு காலத்திற்கு போகவேண்டுமென்று விரும்புகின்றேன். ஆதாம் ஏவாளின் காலத்தில் எழுதப்பட்ட வேத வார்த்தைகள் இல்லாமலிருந்தபடியால் தேவன் அவர்களை வழிநடத்த வேண்டி

யிருந்தது என்பதனை நாம் புரிந்து கொள்ளலாம். ஆகவே தேவன் தம் ஜனங்களுக்கு எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த மோசேயின் காலத்திற்கு செல்லுவோம்.

இனி வரப்போகும் சந்ததிகளின் விசுவாசத்திற்கு வழிகாட்டியாக இருப்பதற்காக தேவன் மோசேயிடம் நியாயப்பிரமாணத்தை எழுதி வைக்க கட்டளையிட்டார்.

> யாத்திராகமம் 34:27 பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த வார்த்தைகளை நீ எழுது; இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடன்படிக்கை பண்ணினேன் என்றார்.

தேவனுக்கு கீழ்ப்படியும்படிக்கு, தேவன் தன் ஜனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகளை மோசே பிரமாணங்களாக எழுதி வைத்தார். இந்த வார்த்தைகளின் அடிப்படையிலேயே மோசே தன் ஜனங்களை வழிநடத்தினார். அவைகள் தேவனுடைய இருதயத்தின் வெளிப்பாடுகளாகவும் தம்முடைய ஜனத்தைக் குறித்த அவருடைய நோக்கமாகவும் இருந்தன. தேவனுடைய ஜனங்கள் அந்த வார்த்தைகளுக்கு முழுமையாக கீழ்ப்படிய வேண்டும் என தேவன் எதிர்பார்த்தார். இந்த வார்த்தைகள் தேவனுடைய ஜனங்களுக்காகவே எழுதப்பட்டிருந்தாலும் அவைகள் மூலமாக மட்டுமே தேவன் தன் ஜனங்களை வழிநடத்தவில்லை. யாத்திராகமம் 13:21ஐக் கவனியுங்கள்.

> 13:21 அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.

தேவனுடைய ஜனங்கள் வனாந்திரத்தில் பிரயாணம் பண்ணுகையில் அவர்கள் எப்படி வாழ வேண்டும் என

வழிநடத்தப்பட எழுதப்பட்ட தேவ உடன்படிக்கைகளை அவர்களுடன் கொண்டு சென்றார்கள்.அதேநேரத்தில் அவர்கள் மேக ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தப்பட்டார்கள். அந்த மேக ஸ்தம்பம் எழும்பின பொழுது அவர்களும் பிரயணப்பட எழுந்தார்கள். மேக ஸ்தம்பம் நின்றபொழுது அவர்களும் அந்த இடத்தில் பாளயமிறங்கினார்கள்:

> *9:20 மேகம் சில நாள் மாத்திரம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, கர்த்தருடைய கட்டளை யின்படியே பாளயமிறங்கியிருந்து, கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணப்படுவார்கள்.*
> *9:21 மேகம் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் இருந்து, விடியற்காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாணப்படுவார்கள்; பகலிலாகிலும் இரவிலாகிலும் மேகம் எழும்பும்போது பிரயாணப்படுவார்கள்.*
> *9:22 மேகமானது இரண்டு நாளாவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணாமல் பாளயமிறங்கியிருப்பார்கள்; அது உயர எழும்பும்போதோ பிரயாணப்படுவார்கள். (எண்ணாகமம் 9:20-22)*

தேவன் எழுதப்பட்ட உடன்படிக்கைகள் மூலமாக தன் ஜனங்களை வழிநடத்தினார். அதேசமயம் மேக ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். இந்த வழிநடத்துதல் குறிப்பிட்ட வழிநடத்துதலாக இருந்தது. ஜனங்கள் எவ்வளவு தூரம் பிரயாணப்படுவார்கள், எந்த வழித்தடத்தை பயன்படுத்துவார்கள் மற்றும் எப்போது இளைப்பாறுவார்கள் போன்றனவற்றை தேவன் அவர்களுக்காக தீர்மானித்தார். தேவனுடைய ஜனங்கள் போகவேண்டிய வழித்தடத்தை நியாயப்பிரமாணத்தில் கண்டு கொள்ள முடியவில்லை. இதற்கு அவர்களுக்கு அக்கினிஸ்தம்பம் தேவைப்பட்டது.

யாத்திராகமம் 23:20-22ல் தன் ஜனங்களுடன் தேவன் இவ்வாறு பேசினார்:

> 23:20 வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக்கொண்டு போய்ச்சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்.
>
> 23:21 அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச்செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது.
>
> 23:22 நீ அவர் வாக்கை நன்றாய்க்கேட்டு, நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன்.

இஸ்ரவேல் ஜனத்தை பாதுகாக்கவும் அவர்களுக்கான வழியை ஆயத்தப்படுத்தவும் தம்முடைய தூதனை அவர்களுக்கு முன்பாக அனுப்புவேன் என்று தேவன் தெளிவாக அவர்களிடம் கூறினார். இஸ்ரவேலர் அந்த தூதனுக்கு செவிகொடுக்க வேண்டும் ஏனென்றால் தேவனுடைய நாமம் அவர் உள்ளத்தில் இருக்கின்றது என கூறுவதை குறிப்பாக கவனியுங்கள். அந்த தூதன் தேவ அதிகாரமுள்ளவராக இருந்தார்.

இந்த தூதன் அவர்களுக்குரிய பாதுகாப்பை உறுதி செய்து தேவன் அவர்களுக்கு ஆயத்தம் பண்ணியுள்ள ஸ்தலத்திற்கு அவர்களை வழிநடத்துவார். இந்த தூதனுடைய வார்த்தைகள் தேவ ஜனங்கள் சுமந்து சென்ற நியாயப் பிரமாணத்தில் காணப்படவில்லை. ஆனால் இந்த தூதனுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்க அவர்களுக்கு கட்டளை கொடுக்கப்பட்டது.

மோசேயின் நியாயப்பிரமாணங்களை நாம் ஆராயும் பொழுது ஊரீம் தும்மீம் என்னும் இரண்டு விசேஷ கற்களைஆசாரியர்கள் சுமந்து செல்ல வேண்டும் என தேவன் எதிர்ப்பார்த்ததை காணமுடியும். இதை நாம் யாத்திராகமம் 28:30ல் வாசிக்க முடியும்.

> *30 நியாயவிதி மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளை வைப்பாயாக; ஆரோன் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கும்போது, அவைகள் அவன் இருதயத்தின்மேல் இருக்க வேண்டும்; ஆரோன் தன் இருதயத்தின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய நியாயவி தியைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் எப்பொழுதும் தரித்துக்கொள்ளவேண்டும்.*

இந்த வசனங்களின்படி ஊரீம் தும்மீம் என்னும் இந்த இரண்டு கற்களும் இஸ்ரவேல் ஜனத்தின் நியாயத்தீர்ப்பிற்காக பயன்படுத்தப்பட்டது. அவைகள் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டது. எண்ணாகமம் 27:20-21ல் மோசே யோசுவாவுக்கு இதைக் குறித்து கட்டளை யிட்டதை நாம் காணமுடியும். அந்த நாளிலே தேவன் மோசேயை நோக்கி யோசுவாவை ஆசாரியர்களுக்கு முன்பாகவும் ஜனத்திற்கு முன்பாகவும் நிற்க கட்டளையிடச் சொன்னார். அந்த நேரத்தில் ஆசாரியர்கள் ஊரீம் மூலமாக தேவனுடைய சித்தத்தை அறிய வேண்டும் எனவும் கூறினார்.

> *21 அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்கக்கடவன்; அவனிமித்தம் அந்த ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன்; அவருடைய கட்டளையின்படியே, அவனும் அவனோடேகூட இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும் வேண்டியது என்றார். (எண்ணாகமம் 27:21)*

இந்த கல்லின் மூலமாக தேவன் யோசுவாவை மோசேக்கு அடுத்த தலைவனாக தெரிவுசெய்திருப்பதை தன் ஜனங்களுக்கு வெளிப்படுத்த ஆயத்தமாக இருந்தார்.

குறிப்பிட்ட காரியத்தில் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதில் இந்த கற்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதனை 1 சாமுவேல் 14:41 நமக்குத் தெளிவாக கூறுகின்றது.

அந்த நாட்களில் சவுல் இஸ்ரவேலை அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அப்போது பெலிஸ்தியருடன் யுத்தமொன்று நடந்தது. சவுல் இவ்வாறு யுத்தம் பண்ணிக்கொண்டிருக்கையில் தன் போர்வீரர்களுக்கு ஆணையிட்டு இவ்வாறு சொல்லி யிருந்தான்:

> இஸ்ரவேலர் அன்றைய தினம் மிகுந்த வருத்தம் அடைந்தார்கள்: நான் என் சத்துருக்கள் கையிலே பழிவாங்கவேண்டும், சாயங்காலமட்டும் பொறுக்காமல் எவன் போஜனம் செய்கிறானோ, அவன் சபிக்கப் பட்டவன் என்று சவுல் ஜனங்களுக்கு ஆணையிட்டுச் சொல்லி யிருந்தபடியால், ஜனங்களில் ஒருவரும்எவ்வளவேனும் போஜனம்பண்ணாதிருந்தார்கள். (1 சாமுவேல் 14:24)

இந்த ஆணையை சவுல் சொன்னபோது அவனுடைய மகன் யோனத்தான் அங்கிருக்கவில்லை, ஆகவே அன்றைய நாளில் அவன் வழியிலே ஒரு தேன் கூட்டைக் கண்டு அதை தன் கோலினாலே குத்தி சாப்பிட்டான். சவுலின் இராணுவம் அன்று பெலிஸ்தியர்களை தோற்கடித்தார்கள். சவுல் எதிரியின் பாளையத்திற்குள் சென்று அவர்களை முற்றிலும் அழித்து அவர்களை கொள்ளையிட விரும்பினான்.

ஆனாலும் அவ்வாறு அவன் செய்வதற்கு முன்னர் அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனுடைய சித்தத்தை அறிய விரும்பினான். ஆனால் தேவன் அவனுக்கு மறுமொழி கொடுக்கவில்லை.

இதனால் தன் கூட்டத்தில் இருந்த ஒருவன் தன் ஆணையை மீறியிருக்கிறான் என தீர்மானித்துக் கொண்டான். ஆகவே அந்த மனிதனை அடையாளம் காண ஊரீம் மற்றும் தும்மீமை சவுல் பயன்படுத்துகின்றான்.

> *14:41 அப்பொழுது சவுல் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நோக்கி: நிதானமாய்க் கட்டளையிட்டு யதார்த்தத்தை விளங்கப்பண்ணும் என்றான்; அப்பொழுது யோனத்தான் மேலும் சவுலின் மேலும் சீட்டுவிழுந்தது, ஜனங்களோதப்பினார்கள்.*
>
> *14:42 எனக்கும் என் குமாரனாகிய யோனத்தானுக்கும் சீட்டுப் போடுங்கள் என்று சவுல் சொன்னபோது, யோனத்தான் மேல் சீட்டு விழுந்தது.*
> *(1 சாமுவேல் 14:41-42)*

இந்த சம்பவத்தில் தேவனுக்கு முன்பாக குற்றவாளி யார் என்பதைக் கண்டு பிடிக்க ஊரீம் மற்றும் தும்மீம் பயன்படுத்தப்பட்டது. இந்த கற்கள் மனித சிந்தையினால் கண்டு பிடிக்கப்பட்ட சக்தி வாய்ந்த கற்களல்ல. மாறாக மோசேயின் நியாயப்பிரமாணத்தில் காணப்படுகின்ற தேவனுடைய கட்டளை யின்படி உருவாக்கப்பட்டவைகள். ஆசாரியர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்காக அவற்றை எப்பொழுதும் சுமந்து செல்ல வேண்டும் என கட்டளை பெற்றிருந்தனர்.

தேவனுடைய குறிப்பிட்ட சித்தத்தை அறிந்து கொள்ள ஊரீம் மற்றும் தும்மீம் மட்டும் பயன்படுத்தபடவில்லை. எண்ணாகமம் 5ம் அதிகாரத்திலே தன் மனைவி விபச்சாரம் செய்கின்றாள் என சந்தேகப்பட்ட ஒரு மனிதனுக்கான கட்டளையைக் குறித்து வாசிக்கின்றோம்.

இந்த சம்பவத்திலே தன் மனைவி விபச்சாரி என்பதனை அவனால் நிரூபிக்க முடியவில்லை. ஆனால் அவனுக்கு சந்தேகம் இருந்தது. மனைவி தான் குற்றவாளிதான என்பதனை

ஒப்புக்கொள்ள மனதில்லாதிருக்கிறாள். ஆகவே இந்தப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வர அந்த மனிதன் தன் மனைவியை ஆசாரியனிடம் கொண்டுவர வேண்டும். அப்பொழுது அந்த ஆசாரியன் தேவாலய வாசலிலிருக்கும் தரையிலிருந்து புழுதியை எடுத்து அதை தண்ணீரில் போட்டு அதை தேவனுடைய சந்நிதியில் வைக்க வேண்டும். அதன் பின்னர் ஆசாரியன் இந்த பெண்ணை தேவனுக்கு முன்பாக நிறுத்தி இவ்வாறு ஆணையிடுவிக்க வேண்டும்:

> *19 பின்பு ஆசாரியன் அவளை ஆணையிடுவித்து: ஒருவனும் உன்னோடே சயனியாமலும், உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ தீட்டுப்படத்தக்கதாய்ப் பிறர் முகம்பாராமலும் இருந்தால், சாபகாரணமான இந்தக் கசப்பானஜலத்தின் தோஷத்துக்கு நீங்கலா யிருப்பாய்.*
>
> *20 உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ பிறர் முகம்பார்த்து, உன் புருஷனோடேயன்றி அந்நியனோடே சம்யோகமாய் சயனித்துத்தீட்டுப்பட்டிருப்பாயானால்,*
>
> *21 கர்த்தர் உன் இடுப்பு சூம்பவும், உன் வயிறு வீங்கவும் பண்ணி, உன்னை உன் ஜனங்களுக்குள்ளே சாபமும் ஆணையிடுங்குறியுமாக வைப்பாராக.*
>
> *22 சாபகாரணமான இந்த ஜலம் உன் வயிறு வீங்கவும் இடுப்பு சூம்பவும் பண்ணும்படி, உன் குடலுக்குள் பிரவே சிக்கக்கடவது என்கிற சாபவார்த்தையாலே ஸ்திரீயை ஆணையிடுவித்துச் சொல்வானாக. அதற்கு அந்த ஸ்திரீ: ஆமென், ஆமென், என்று சொல்லக்கடவள். (எண்ணாகமம் 5:19-22)*

மோசேயின் நியாயப் பிரமாணம் ஜனங்கள் தேவனுக்கு முன்பாக எப்படிப்பட்ட குணநலன்கள் உள்ளவர்களாக காணப்பட வேண்டும் என்பதற்கான அறிவுரைகளை

தருகின்றது. இந்தக் குறிப்பிட்ட பிரச்சனையில் இந்தப் பெண் குற்றவாளியா இல்லையா என்பதனை சரியாக அறிந்து கொள்ள ஆசாரியனுக்கு தேவனிடமிருந்து மேலும் அதிக வெளிப்பாடு தேவைப்பட்டது. கொடுக்கப்பட்ட தண்ணீரை அவள் குடிக்கும் போது அவளுடைய கணவனுடைய சந்தேகம் உண்மையானதா இல்லையா என்பது நிரூபிக்கப்பட்டு அந்த பெண்ணுக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி தீர்ப்பு வழங்கப்படும். தேவனுடைய குறிப்பிட்ட வழிநடத்துதல்களை மற்றும் வாழ்க்கைக்கான அழைப்புகளை தேவனுடைய ஜனம் பின்பற்றுவதை எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பு எந்த விதத்திலும் தடை செய்யவில்லை. அத்துடன் நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்படாதவைகளில் தேவனுடைய குறிப்பிட்ட வழிநடத்துதல்களை பெற்றுக் கொள்வதனால் தேவனுடைய ஜனம் நியாயப்பிரமாணத்தை கற்றுக் கொள்வது தடை செய்யப்படவில்லை.

எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து தேவ ஜனம் நடக்க வேண்டும் என்பதே தேவனுடைய எதிர்ப்பார்ப்பாகும். ஆனால் வனாந்திர பாதையில் அவருடைய குறிப்பான வழிநடத்துதல்களையும் பின்பற்ற வேண்டும் என்பதும் அவருடைய எதிர்பார்ப்பாகும்.

நியாயப் பிரமாணத்தில் உள்ள விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான குறிப்பிட்ட வழிநடத்துதல்களை தேவன் ஆசாரியர்களுக்கு கொடுத்தார். தேவனுடைய பிரமாண விதிகளை நடைமுறைப்படுத்துவதில் நிச்சயமற்ற சூழல் உருவாகிய பொழுது, தேவ சித்தத்தை அறிந்து கொள்ள சில வழிமுறைகளை தேவன் உருவாக்கிக் கொடுத்தார். ஊரீம் மற்றும் தும்மீம் அல்லது விபச்சாரத்தில் சந்தேகப்பட்ட பெண்ணிற்கான ஆணையிடுதல் போன்றன குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எவ்வாறு தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார் என்பதனைக் காட்டுகின்றது.

மோசேக்கு அடுத்த தலைவனாக யோசுவா தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டான். இதை ஊரீம் மூலமாக தேவன் தன் ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார். எரேமியாவும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க தேவனால் அழைக்கப்பட்டான். சில சூழ்நிலைகளில் அவன் அதை விட்டு விட தீர்மானித்தாலும் தேவனுடைய அழைப்பு அவன் உள்ளத்திற்குள் எரிந்து கொண்டிருந்தபடியால் அவனால் விட்டு விட முடியவில்லை. தேவன் தன் வார்த்தையை எழுத்து வடிவில் கொடுத்த பின்னரும் கூட இன்னும் அவர் தன் ஜனங்களை வழிநடத்திக் கொண்டுதானிருக்கிறார்.

தேவனுடைய ஜனங்களை வழிநடத்த குறிப்பான வழிநடத்துல் என்னும் தேவையை தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை மாற்றிவிடவில்லை. எல்லா சூழ்நிலையிலும் அதன் தேவை அதிகரித்துக் கொண்டுதானிருந்தது. எழுதப்பட்ட வார்த்தைகள் மூலமாக தேவஜனம் தேவனுக்கு முன்பாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பைகளை மேலும் அதிகமாக புரிந்துகொள்ளும்போது, குறிப்பிட்ட சத்தியத்தை வாழ்க்கையில் பிரயோகிக்க தேவனுடைய வழிநடத்துல் அவர்களுக்கு இன்னும் அதிகமாக தேவை என உணர்ந்து கொள்வார்கள். அவருக்கு சாட்சிகளாக வாழ தேவன் நம்மை அழைக்கின்றார் என்பதனை அறிந்திருப்பது, நாம் எங்கே, எப்படி ஊழியம் செய்வது என்பதில் அவருடைய வழிநடத்துதலைத் தேட நம்மை கட்டாயப்படுத்துகின்றது. பரிசுத்தமுள்ளவர்களாக வாழ தேவன் நமக்கு கட்டளை கொடுத்திருக்கின்றார் என்பதனை அறிந்திருப்பது, எவ்வாறு நாம் பாவத்தை ஜெயித்து பரிசுத்த வாழ்க்கைப் பாதையிலே நம்மைக் காத்துக் கொள்ளலாம் என்பதற்கான குறிப்பிட்ட வழிநடத்துலை தேட நம் வாழ்க்கையில் ஒரு தேவையை உண்டு பண்ணுகின்றது. தன் பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்பதில் வழிநடத்துதலைத் தேடாத பெற்றோர்கள் உண்டா?

எழுதப்பட்ட தேவ வார்த்தை தேவனுடைய குறிப்பிட்ட வழிநடத்துதலுக்கான தேவையை நமக்கு உருவாக்கிக் கொடுக்கின்றது. தேவனுடைய சத்தியங்களை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதில் தேவனை இன்னும் ஆழமாக தேட நம்மை நடத்துகின்றது.இந்த சத்தியத்தை நாம் பிரயோகப்படுத்துவதில் நமக்கு உதவி செய்ய தேவன் ஆர்வமுள்ளவராக இருப்பதனால் நாம் அவருக்கு எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய ஆவியானவர் எழுதப்பட்ட வார்த்தைகளினால் மட்டுமல்ல, குறிப்பான வழிநடத்துதல்கள் மூலமாகவும் தேவ சத்தியங்களின்படி நடக்க நமக்கு கற்றுத் தருகின்றார்.

## கவனத்திற்கு:

- பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையில்லாமல் வேத சத்தியங்களை புரிந்து கொள்ளவும் அதை கடைபிடிக்கவும் நம்மால் கூடுமா?

- தேவன் நியாயப்பிரமாணத்தை அவருடைய ஜனத்திடம் கொடுத்த பின்னரும் வனாந்திரத்தில் அவர்களை எவ்வாறு வழிநடத்தினார்? இஸ்ரவேலருக்கு தேவனுடைய குறிப்பான வழிநடத்துதல் தேவையாக இருந்தது என்பதனைக் குறித்து இது நமக்கு என்ன கற்றுத் தருகின்றது?

- ஊரீம் மற்றும் தும்மீம் என்றால் என்ன? தன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலரை வழிநடத்துவதில் இவைகள் பயன்படுத்தப்படுவதைக் குறித்து தேவன் எவ்வாறு கட்டளை யிட்டிருந்தார்?

- தன் மனைவி விபச்சாரம் செய்தாள் என சந்தேகப்பட்ட கணவனுக்கு நியாயப்பிரமாணம் என்ன ஆலோசனைகளை கற்றுத் தருகின்றது? இந்த பிரச்சனையில் தேவனுடைய சித்தம் எவ்வாறு கண்டறியப்பட்டது?

• *எழுதப்பட்ட தேவ வார்தைகள் இருப்பதனால் தேவனுடைய குறிப்பிட்ட வழிநடத்துதல் நமக்கு அவசியமில்லையா?*

• *தேவனுடைய குறிப்பிட்ட வழிநடத்துதலின் அவசியத்தை தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை எவ்வாறு உருவாக்குகின்றது?*

## ஜெபத்திற்கு:

• *பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை நமக்கு வெளிப்படுத்தி அவற்றை நம் வாழ்க்கையில் பயன்படுத்துவதற்காக பரிசுத்தாவியானவரை நமக்கு தந்தருளி யிருப்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.*

• *தேவனுடைய குறிப்பிட்ட அழைப்பிற்குள்ளும் அவருடைய நோக்கத்திற்குள்ளும் தேவன் நம்மை தொடர்ந்து வழிநடத்திக் கொண்டிருப்பதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.*

• *எழுதப்பட்ட தேவ வார்த்தையிலுள்ள சத்தியங்களை உங்கள் வாழ்க்கையில் எவ்வாறு பிரயோகிப்பது என்பதை தேவனிடம் கேளுங்கள்.*

• *ஒவ்வொரு நாளிலும் தேவனுடைய ஆலோசனையும் வழிநடத்துதலும் தேவை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள தேவன் உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.*

*அவருடைய குறிப்பிட்ட வழிநடத்துதல்களுக்கு கவனமுள்ளவர்களாயிருக்க கற்றுத்தருமாறு ஜெபியுங்கள்.*

அதிகாரம் 8

# தேவ ஆலோசனையின் ஆசீர்வாதம்

கடந்த நான்கு அதிகாரங்களில் வேத வசனங்களில் காணப்படும் தேவ ஆலோசனையைக் குறித்தும் அவைகளை நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் பிரயோகப்படுத்துவதைக் குறித்தும் கவனித்தோம். இந்த ஆதாரங்கள் தேவனுக்குரிய எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டு, அவர்கள் செய்யும் எல்லாவற்றிலும் தேவ ஆலோசனையை தேடவேண்டுமென்ற கட்டளையையும் பெற்றிருக்கிறார்கள். நீதிமொழிகளை எழுதியவர், தங்கள் சொந்த ஞானத்தின் மேல் நம்பிக்கையை வைக்காமல் தேவ ஞானத்தையும் தேவ ஆலோசனையையும் பெற்றிருப்பவர்களைக் குறித்த சில வார்த்தைகளை எழுதி வைத்திருக்கிறார்.

> தன் பார்வைக்கு ஞானியாயிருப்பவனைக் கண்டாயானால், அவனைப் பார்க்கிலும் மூடனைக் குறித்து அதிக நம்பிக்கையாயிருக்கலாம். (நீதி. 26:12)
>
> தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான். (நீதி. 28:26)

இவைகள் பயங்கரமான வார்த்தைகள். தேவ வார்த்தை யின்படி, உங்கள் சொந்த ஞானத்தை நம்பினால் நீங்கள் மூடர்கள். மனித ஞானத்தினால் தேவனுடைய சிந்தையை புரிந்து கொள்ள முடியாது. சில காலங்களுக்கு முன்னர் ஒரு மனிதருடன் திரித்துவத்தைப் பற்றிய உபதேசத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். தேவன் மூன்று நபர்களாக இருந்தும் அதே சமயத்தில் ஒருவராக செயல்படுவதைக் குறித்து தன்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என அவர் என்னிடம் சொன்னார்.

இந்த உபதேசம் தனக்கு எந்த அர்த்தத்தையும் கொடுக்காதபடியினால் இதை நம்ப முடியவில்லை என அவர் மேலும் என்னிடம் கூறினார். இவருடன் விவாதம் பண்ணுவதனால் எந்தவித பயனுமில்லை என அறிந்த நான் “தேவனைக் குறித்த சில காரியங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதனை நினைத்து நான் சந்தோஷப்படுகின்றேன். தேவனைக் குறித்து நான் எல்லாவற்றையும் அறிந்திருந்தால் அவர் என் சிந்தையைப் பார்க்கிலும் பெரியவராக இருந்திருக்க மாட்டார். அவர் என்னைப் பார்க்கிலும் பெரியவர் என்பதில் நான் சந்தோஷப்படுகின்றேன். ஏனென்றால் அதுவே நான் அவரை நம்புவதற்குரிய தைரியத்தை எனக்குத் தருகின்றது.” என கூறினேன்.

தேவனைக் குறித்த எல்லாவற்றையும் நம்மால் புரிந்து கொள்ள முடியாது. நம் புரிந்து கொள்ளலையும் விட அவர் பெரியவர். அவரைக் குறித்த சில பகுதிகளை நம்மால் புரிந்து கொள்ள முடியும். நம் இறையியல் கல்வி அவரைப் பற்றி விளக்க முயற்சிக்கின்றது.ஆனால் அந்த இறையியல் கல்வியால் அதை விளக்கப்படுத்த முடியவில்லை. அவரைக் குறித்த முழுமையான விளக்கத்தை கொடுப்பதோ அல்லது அவரை முழுமையாக புரிந்து கொண்டேன் என்று சொல்வதோ தேவதூஷணம் என்று சொல்லும் அளவிற்கு நான் போகக் கூடும். அவரைக் குறித்த நம் எல்லா சிந்தனைகளையும் விட அவர் மிகப் பெரியவர்.

நம் சிந்தையால் விளக்கப்படுத்தக் கூடிய அளவிற்கு தேவனை குறைத்து மதிப்பிடுவது நம் இருதயத்தில் அவரை குறைத்து அளவிடுவதாகும். தேவனைக் குறித்து நம்மால் புரிந்து கொள்ள முடியாத பகுதிகள் எப்போதும் காணப்படும். அவர் மிகவும் பெரியவர். தேவனை நம்மால் புரிந்து கொள்ள முடியாவிட்டால் நாம் எவ்வாறு அவருடைய நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும்?

ஆனாலும் தேவனுக்கு என்ன வேண்டுமென நமக்குத் தெரியும் என்றும் நம் ஞானத்தினாலும் நம் சுய பெலத்தினாலும் அதை நிறைவேற்றிவிட முடியுமென்றும் நாம் நினைப்போம்.

இன்று தேவனைத் தேடுவதை அல்லது அவரது ஆலோசனை மற்றும் வழிநடத்துதலை தேடுவதைப்பார்க்கிலும் சபைகளையும் ஊழியங்களையும் கட்டுவதைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். இவற்றை நாம் தேவனுக்காகத்தான் செய்கின்றோம். ஆனாலும் நம் சொந்த ஞானத்தினால் செய்கின்றோம். நம் கல்வியறிவையும், பயிற்சிகளையுமே உயர்த்திக் காட்ட விரும்புகின்றோம். நம் தலைவர்களை அவர்களின் கல்வித்தகுதி மற்றும் அவர்களின் அனுபவங்களின் அடிப்படையிலேயே தெரிவு செய்கின்றோம். அப்படிப்பட்டவர்களே நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் நம்மை வழிநடத்தக் கூடியவர்கள் என நாம் நம்புகின்றோம்.

சிறந்த கல்வித்தகுதியுள்ள நம் தலைவர்களையும் அவர்களின் மனுஷீக திட்டங்களையும் தேவன் பார்க்கும் போது அவர் என்ன நினைப்பார்? நீதிமொழிகளை ஆக்கிய எழுத்தாளரின்படி அவர் தன் தலையை துலுக்கி அவர்களை மூடர்கள் என்றே சொல்லுவார். உண்மையான வெற்றிக்கான படிகள் நம் சொந்த ஞானம் மற்றும் புரிந்து கொள்ளுதலை சார்ந்ததல்ல. ஆனால் தேவ ஆலோசனையை தேடுவதிலேயே உள்ளது. இந்த அதிகாரத்தில் தேவனுடைய ஆலோசனையையும் அவருடைய வழிநடத்துதல்களையும் நம்புபவர்களுக்குரிய வாக்குத்தத்தங்களில் சிலவற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

> *19:7* கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமா யிருக்கிறது.
>
> *19:8* கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது;

*கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. (சங்கீதம் 19:7-8)*

இந்த சங்கீதக்காரன் தேவனுடைய வார்த்தையைக் குறித்து என்ன சொல்லுகின்றார் என்பதனை சற்று கவனிப்போம். தேவனுடைய வார்த்தைகள் நம் ஆத்துமாவை உயிர்ப்பிக்கின்றது. அது நம்மிடையேயுள்ள பேதையை ஞானியாக்குகின்றது. அது நம் இருதயத்தை களிகூறப்பண்ணுகின்றது. அது நம் கண்களைத் தெளிவிக்கின்றது. மனித ஞானத்தை நம்புவது முட்டாள்தனமானதாக இருக்கும் அதே நேரத்தில், தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுப்பதும், அதற்கு கீழ்ப்படிந்து நடப்பதும், எழுப்புதலையும், ஞானத்தையும், மகிழ்ச்சியையும், தெளிவையும் நமக்குக் கொண்டு வருகின்றது.

சங்கீதம் 34:8-10 கர்த்தரைத்தேடுபவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என கூறுகின்றது.

*34:8 கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*
*34:9 கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை.*
*34:10 சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத்தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது.*

நமக்கு என்ன தேவை என்பதனை தேவன் நன்றாக அறிந்திருக்கிறார். நாம் அவரிடம் வந்து அவருடைய நோக்கத்தை தேடும்போது நமக்குத் தேவையான எல்லாவற்றையும் பெற்றுக் கொள்கின்றோம். நம் மனுஷீக ஞானம் நம்மை தவறாக வழிநடத்திவிடும். நம் சமுதாயம் அவர்கள் நினைப்பதை நமக்கு சொல்லுவார்கள். ஆனால் தேவன் நம்மை அறிந்திருக்கிறார்.

நாம் அவரை தேடும்பொழுது அவர் நம்மை விசாரித்து நம் தேவைகளை சந்திப்பதனால் நமக்கு ஒன்றும் குறைவுபடாது. நம் சொந்த ஞானத்தினால் நாம் தவறாக வழிநடத்தப்படுவது எவ்வளவு சாத்தியமானது! ஆனாலும் நாம் கர்த்தரில் மகிழ்ந்திருந்தால் அவர் நம் கரங்களைப் பிடித்து நம் நடைகளை உறுதிப்படுத்துகின்றார் என சங்கீதக்காரன் கூறுகின்றார்.

> *37:23 நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.*
> *37:24 அவன் விழுந்தாலும் தள்ளுண்டுபோவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார். (சங்கீதம் 37:23-24)*

சங்கீதக்காரன் தேவனுடைய ஆலோசனையில் மிகுந்த மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைந்தார். சங்கீதம் 73:23-24ல் அவருடைய சாட்சியைக் கேளுங்கள்.

> *73:23 ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலது கையைப்பிடித்துத் தாங்குகிறீர்.*
> *73:24 உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.*

தேவனுடைய ஆலோசனையை அறிந்து கொள்வதில் சங்கீதக்காரனுக்கு இருந்த திடநம்பிக்கையை கவனியுங்கள். அவர் தேவ ஆலோசனையில் நடக்கும்பொழுது தேவன் அவரை மகிமையிலே நடத்துவார் என நன்றாக அறிந்திருந்தார். அவர் தேவ ஆலோசனையில் நடப்பதனால் அவருக்கு இந்த மகிமை வாக்களிக்கப்பட்டிருந்தது.

இதனால் வாழ்க்கையில் பாடுகள் ஒன்றும் இருக்கப்போவதில்லை என்பது அர்த்தமல்ல. தேவனைப் பின்பற்றுகிறவர்களான நமக்கு வாழ்க்கையில் போராட்டங்கள் காணப்படத்தான் செய்யும். பல எதிரிகள் நமக்கு உண்டாவார்கள்.

ஆனாலும் அவருக்கு செவி கொடுக்கிறவர்களுக்கான வாக்குத்தத்தத்தைக் கவனியுங்கள்:

> *81:13 ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! 81:14 நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என்கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத்திருப்புவேன். (சங்கீதம் 81:13-14)*

இஸ்ரவேல் தேவனுக்கு செவி கொடுப்பதற்கும் அவர்களின் எதிராளிகளை அவர்கள் தாழ்த்துவதற்குமிடையிலான தொடர்பை இந்த வசனத்தில் கவனியுங்கள். அவர்களின் எதிராளிகளை தாழ்த்துவது தேவனுக்கு பிரியமான ஒன்றாகும். இந்த விருப்பத்திற்கும் அவர்களுக்கும் இடையில் தடையாக நின்ற ஒரே காரியம் தேவனுக்கு செவிகொடுத்து அவருடைய வழிகளில் நடப்பதற்கு அவர்களுக்கு இருக்க வேண்டிய விருப்பம் மாத்திரமே. அவர்கள் மாத்திரம் தேவனுடைய ஆலோசனைக்கு செவி கொடுத்திருந்தால் அவர்களின் எதிராளிகளுக்கு மேல் அவர்கள் வெற்றிகளைக் கண்டிருப்பார்கள். அதற்கு பதிலாக அவர்கள் தங்கள் வழிகளில் செல்ல விரும்பினால் அவர்களால் வெற்றிகளை காண முடியாது.

தேவனுக்கு கீழ்ப்படிந்து அவருடைய ஆலோசனையைத் தேடுவது வெற்றிகளைக் கொண்டுவருவது மட்டுமல்ல, வாழ்க்கையில் ஆழமான திருப்தியையும் சந்தோஷத்தையும் அது கொண்டு வருகின்றது எனவும் சங்கீதக்காரன் கூறுகின்றார்.

> *உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக் கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி. (சங்கீதம் 119:111)*

தேவ ஆலோசனையில் நடக்கும் போது மட்டுமே இந்த மகிழ்ச்சியை நாம் காண முடியும். தேவனுடைய ஆலோசனையைக் கேட்பதனால் வரும் பலன் சமாதானம் என தீர்க்கதரிசி ஏசாயா வாக்குப்பண்ணியிருக்கிறார்.

*உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரணசமாதானத்துடன் காத்துக் கொள்வீர். (ஏசா. 26:3)*

தேவனுடைய வழிகளில் நாம் நடந்து அவரைப் பின்பற்ற நம் இருதயத்தைத் திடப்படுத்தி அவருடைய ஆலோசனைகளை கேட்க ஆரம்பிக்கும்போது நாம் இந்த பூரண சமாதானத்தை அனுபவிக்க முடியும். பூரண சமாதானம் நம் வாழ்வில் பிரச்சனையே இருக்காது என்னும் அர்த்தமல்ல. அப்போஸ்தலர் நடபடிகளில் ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படும்போதும் இந்த சமாதனத்தை அனுபவித்தார்.

பழைய ஏற்பாட்டில் தானியேல், தேவனை வணங்குவதையே தேர்ந்தெடுத்து சிங்கக் கெபியில் போடப்பட்ட பொழுதும் இந்த சமாதானத்தை அனுபவித்தார் என்றே நான் நம்புகின்றேன். நாம் பேசும் இந்த சமாதானம் தேவனுக்குக் கீழ்ப்படிவதனால் ஏற்படும் பலனும் அந்த கீழ்ப்படிதலினால் ஏற்படும் போராட்டங்களின் விளைவுமாகும். நாம் தேவ ஆலோசனையில் நடக்கின்றோம் என்பதனை அறிந்திருந்தோமானால் நம் வாழ்க்கையில் ஏற்படும் எல்லா உபத்திரவங்களையும் நாம் பூரண சமாதானத்துடன் சந்திக்க முடியும்.

தேவனுக்கு காத்திருந்து அவருடைய வழிகளை நம்பியிருக்கும் ஒரு நபரைக் குறித்து எரேமியா அநேக காரியங்களை எழுதியுள்ளார்.

*17:7 கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*

*17:8 அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களைவிடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையா யிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும்*

வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான். (எரேமியா 17:7-8)

தேவனுடைய ஆலோசனையில் நடந்து அவரை நம்பி யிருக்கிறவன், தண்ணீரண்டையில் நடப்பட்ட மரத்தைப் போலிருப்பான் என எரேமியா குறிப்பிடுகின்றார். மரமானது எவ்வாறு தண்ணீரினால் போஷிக்கப்பட்டு ஆரோக்கியமாக இருக்கிறதோ அதைப்போலவே இந்த மனிதனும் உபத்திரவத்தின் காலத்தில் ஆரோக்கியமாகவும் உற்சாகமுள்ளவனாகவும் காணப்படுவான். இந்த மனிதன் தேவ ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து நடப்பதனால் அதினால் போஷிக்கப்பட்டு ஆரோக்கியமுள்ளவனாக, ஆசீர்வதிக்கப்பட்டவனாக, பலன் கொடுப்பவனாக காணப்படுவான்

ஆண்டவாராகிய இயேசு கிறிஸ்துவும் இதையே மாற்கு 4ம் அதிகாரத்தில் விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் மூலம் கற்றுக் கொடுத்தார். நல்ல நிலத்தில் விழுந்த விதையைப் பற்றி அவர் கூறும் பொழுது:

4:20 வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார். (மாற்கு 4:20)

தேவனுடைய வசனத்தை கேட்டு அதனை ஏற்றுக் கொள்கின்றவர்களே இவ்விதமான பலனைக் கொடுப்பவர்கள் என்பதை கவனிக்கவேண்டும். நீங்களும் இவ்விதமாகமுப்பதும், அறுபதும், நூறுமான பலனை அனுபவிக்க விரும்புகின்றீர்களா? உங்கள் சுய நம்பிக்கை மற்றும் சுய ஞானம் ஆகியவற்றை ஒதுக்கி வைத்து விட்டு தேவ ஆலோசனையை தேடுவதே இவ்விதமான பலனை அனுபவிப்பதற்குள்ள ஒரே வழியாகும்.

யோவான் 8:31-32ல் தன்னை விசுவாசித்த யூதர்களிடம் இயேசு இவ்வாறு கூறினார்.

*8:31 இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;*
*8:32 சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.*

இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருப்பவர்களுக்கு மூன்று காரியங்களை குறிப்பிட்டுச் சொல்லுகின்றார். முதலாவது அவருடைய வார்த்தையில் நிலைத்திருப்பவர்கள் அவருடைய சீஷர்களாயிருப்பார்கள். நிலைத்திருப்பது என்றால் தேவனுடன் தொடர்ந்து தடையில்லாத உறவில் இருப்பதும், பரிசுத்தாவியானவரின் ஒத்தாசையுடன் தேவனுடைய ஆலோசனைக்கு உண்மையுடனும் கீழ்ப்படிதலுடனும் நடப்பதுமாகும்.

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அதில் நம்பிக்கைகொள்ளாமல் இருந்தால் நீங்கள் உண்மையான சீஷர்களல்ல. உண்மையாய் அவருக்குரியவர்கள் தங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து அவருடைய வார்த்தையை பின்பற்ற ஆர்வமுள்ளவர்களாயிருப்பார்கள்.

இரண்டாவதாக அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பவர்கள் சத்தியத்தை அறிவார்கள். இன்றைய நம்முடைய சபைகளிலும் நம் சமுதாயத்திலும் பலவித சத்தயங்கள் காணப்படுகின்றன. ஆனால் தேவனுடைய வார்த்தை மட்டுமேஉண்மையான சத்தியத்தை உடையது. அவருடைய வார்த்தையின் அடிப்படையிலேயே மற்றவை யாவும் நியாயந்தீர்க்கப்படும். ஞாயிற்றுக் கிழமைகளில் பிரசங்க பீடத்திலிருந்து நீங்கள் கேட்கும் அனைத்தும் தேவனுடைய வார்த்தையில் காணப்படுகின்றதன் அடிப்படையிலேயே நியாயந்தீர்க்கப்பட வேண்டும். இந்த விதிகளை நம் தலையறி விலே புரிந்து வைத்திருந்தாலும் மனித யோசனைகளினாலும்

திட்டங்களினாலும் நாம் வழிமாறிவிடுவதற்குரிய வாய்ப்புகள் அதிகமுண்டு.

இன்று நம் சபைகளிலுள்ள அநேகர், அனைத்து சத்தியங்களும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படை யிலேயே அளவிடப்பட வேண்டும் என்று விசுவாசித்தாலும் கூட, மனித யோசனைகள் மற்றும் வாழ்க்கைத் தத்துவங்களில் சிக்கிக் கொள்வதைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கின்றது.

கடைசியாக, கிறிஸ்துவின் வார்த்தையின் சத்தியங்கள் ஒரு உண்மையான விசுவாசியை விடுதலையாக்கும் என்பதனை கவனியுங்கள். அவன் தவறுகளிலிருந்து, பாவத் திலிருந்து, மற்றும் வாழ்க்கையின் அலைக்கழிப்புக்களிலிருந்து விடுதலையாக்கப்படுவான். வல்லமையற்ற ஊழிய வாழ்க்கை முறையிலிருந்து விடுதலை பெற்று வெற்றியும் மகிழ்ச்சியும் நிறைந்த பாதைக்குள் கடந்து செல்வான்.

வேதத்திலுள்ள இப்பகுதிகளை நாம் ஆராயும் போது, தேவனுடைய ஆலோசனையில் நடப்பவர்களை தேவன் ஆசீர்வதிக்க விரும்புகின்றார் என்பதைக் காண்கின்றோம். அவருடைய ஆலோசனையைத் தேடுபவர்களுக்கு எழுப்புதல், ஞானம், மகிழ்ச்சி, தெளிவு, தேவைகள் சந்திக்கப்படுதல், பாதுகாப்பு, வழிநடத்தல், மகிமை, வெற்றி, சமாதனம், ஆரோக்கியம், கனிநிறைந்த வாழ்வு, சத்தியம் மற்றும் விடுதலை போன்றனவற்றை வாக்குப் பண்ணுகின்றார்.

தங்கள் சொந்த ஞானத்தையும் புரிந்து கொள்ளலையும் பின்பற்றி நடப்பவர்களுக்குரிய எச்சரிப்புக்களின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும் போது இந்த வாக்குத்தத்தங்களை எளிதாக அலட்சியப்படுத்திவிட முடியாது.

உண்மையான வெற்றியும் திருப்தியும் தேவ ஆலோசனையில் மட்டுமே கிடைக்கின்றது. தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதன்

மூலமாகவும் அவருடைய வழிநடத்துதலினாலும் மட்டுமே இந்த வேத வார்த்தைகளில் அவர் வாக்குப் பண்ணியுள்ள நிறைவுகளை நாம் அனுபவிக்க முடியும்.

## கவனத்திற்கு:

- தேவனுடைய ஆலோசனையைத் தேடுவதைக் காட்டிலும் நம் சுய புரிந்து கொள்ளலை சார்ந்திருப்பது எவ்வளவு சாத்தியமானது?

- உங்கள் ஊழியம் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்காக தேவனுடைய வழிநடத்துலை தேடிக் கொண்டிருக்கின்றீர்களா? உங்கள் ஊழியம் மற்றும் உங்கள் வாழ்க்கையில் ஏதாவது பகுதிகள் இன்னும் தேவ ஆலோசனைக்கும் அவரது வழிநடத்துதலுக்கும் ஒப்புக் கொடுக்கப்படாமலிருக்கின்றதா?

- தேவனுடைய ஆலோசனையை பின்பற்றுபவர்களுக்கு அவர் கொடுக்கும் வாக்குத்தத்தங்கள் எவை? அவற்றை பட்டியலாக தயாரிக்கவும்.

- உங்கள் வாழ்க்கையில் இந்த வாக்குத்தத்தங்களின் நிறைவை அனுபவிக்கின்றீர்களா?

- தேவ ஆலோசனை நீங்கள் தேடுவதை தடை செய்கின்றது எது?

- கிறிஸ்துவின் வார்த்தையில் நிலைத்திருப்பது என்றால் என்ன?

- தேவ ஆலோசனையைத் தவிர்த்து உண்மையான பலனை நம்மால் எதிர்பார்க்க முடியுமா?

## ஜெபத்திற்கு:

- தேவனுடைய ஆலோசனையைத் தேடுபவர்களுக்கு அவர் வாக்குப் பண்ணியிருக்கும் ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

- உங்கள் வாழ்க்கையில் ஏதாவது பகுதிகளில் தேவனுடைய ஆசீர்வாதத்தை தேடாமலிருந்து அதன் மூலம் வரக்கூடிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளாமலிருக்கும் பகுதிகளை தேவன் காண்பித்துத் தருமாறு ஜெபியுங்கள்.

- தேவ ஞானத்தையும் தேவ ஆலோசனையையும் இன்னுமதிகமாக தேட கற்றுத் தருமாறு தேவனிடம் ஜெபியுங்கள். உங்கள் வாழ்க்கையை இன்னும் அவருக்கும் அவருடைய வழிநடத்துலுக்கும் ஒப்புக்கொடுக்க கற்றுத் தருமாறு ஜெபியுங்கள்.

- இவ்வாறு நீங்கள் அவருடைய நோக்கம், நேரம் மற்றும் திட்டத்தை தேட கற்றுக் கொள்ளும் போது. தேவன் உங்களை அவருடைய இராஜ்ஜியத்தில் கனிதருகின்ற நபராய் பயன்படுத்த ஜெபியுங்கள்.

அதிகாரம் 9

# தேவ ஆலோசனையும் மோசேயும்

*இந்த பாடதிட்டத்தை வேதாகமத்திலுள்ள சில உண்மையான எடுத்துக்காட்டுகளுடன் முடிக்க விரும்புகின்றேன். முதலாவது எடுத்துக்காட்டாக மோசேயை நாம் கவனிக்க விரும்புகின்றேன். யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம் ஆகிய புத்தகங்களில் கர்த்தர் "மோசேயை நோக்கி" என்னும் வார்த்தை 147 முறை எழுதப்பட்டுள்ளது. இது ஒரு முக்கியத்துவத்தை நமக்குக் காண்பிக்கின்றது. மோசே இடைவிடாமல் தேவனுடன் உறவு வைத்திருந்தார். அத்துடன் தேவனுடைய ஆலோசனையையும் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருந்தார்.*

*மோசேக்கு இது ஒரு இலகுவானதொன்றல்ல. தன் ஆரம்ப கால நிலைமையில் அவர் தன் சுய பெலத்தையும் தனக்கிருந்த செல்வாக்கையும் சார்ந்திருந்தார். தன் 40ம் வயதில் மோசே இஸ்ரவேலரை சந்திக்கச் செல்லும் பொழுது, எகிப்தியன் ஒருவன் இஸ்ரவேலரில் ஒருவனை துன்புறுத்துவதைக் கண்டார். இஸ்ரவேலனை காப்பாற்றுவதற்காக எகிப்தியனை கொன்றார். அப்போஸ்தலர் 7:25 இதற்குப் பின்னாலுள்ள காரணத்தை விளக்குகின்றது:*

> *7:25 தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை.*

*நாற்பதாவது வயதிலே மோசே தனக்குத் தேவையான அனைத்தையும் பெற்றிருந்தான். இஸ்ரவேலர் சார்பாக*

இருப்பதாக காட்டினால், எபிரேய மக்களின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதன் மூலம் இஸ்ரவேலரை விடுவிக்கின்ற ஒருவனாக தன்னை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் எனவும் அவன் நம்பினான். ஆனால் தேவன் அதற்குப் பதிலாக அந்த வாசலை அடைத்து விட்டு அவனை வனாந்திரத்திற்கு அனுப்பினார். அங்கே நாற்பது வருஷங்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அந்த நாட்களில் தேவனுடைய வேலையைச் செய்வதற்கு தன் சுய ஞானத்தையும் பெலத்தையும் இனிமேல் நம்பக்கூடாது என்று தன்னை தாழ்த்தியிருக்கக் கூடும். அவனுடைய எண்பதாவது வயதிலேயே முழுமையாக உடைக்கப்படவும் தன்னை தாழ்த்தவும் விட்டுக் கொடுத்தான். அப்பொழுதுதான் தேவன் தன் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க மீண்டும் எகிப்துக்கு போக அழைத்தார்.

தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்வதில் மோசே தயக்கம் காட்டினான். இதற்கு மேல் அவனால் தன் சொந்த ஞானத்தையும் பெலத்தையும் நம்ப முடியவில்லை.

எகிப்தில் முன்பு அவனுக்கிருந்த செல்வாக்கும் குறைந்து விட்டது. 40 வருடங்கள் எகிப்தை விட்டு தூரமாக வாழ்ந்தபடியால் முன்பு போல் அவனால் எகிப்திய பாஷையை சரளமாக பேச முடியவில்லை. எகிப்துக்குப் போக தேவன் மோசேயை அழைத்த பொழுது அவன் பயந்தான். யாத்திராகமம் 3ம் அதிகாரத்தில் இவ்வாறு வாசிக்கின்றோம்:

> *3:11 அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் என்றான். (யாத்திராகமம் 3:11)*

தன் எண்பதாவது வயதிலே அவன் எகிப்துக்குப் போகவோ அல்லது இந்த பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளவோ

அவன் தயங்கினான். ஆனாலும் தேவன் அவனை இந்த அழைப்பிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை. ஆகவே தேவ ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து அவன் எகிப்துக்குப் போனான். தேவன் அவனுடன் பேசி அவனைப் போகச் சொன்னதினாலே அவன் சென்றானேயல்லாமல் அவனுடைய சொந்த திட்டத்தின்படி அவன் போகவில்லை.

தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்த படியால் மோசே எகிப்து தேசத்திற்கு திரும்பி வந்தான். இப்பொழுது இஸ்ரவேல் அடிமைகளை போகச் செய்ய பார்வோனை இணங்கச் செய்வது எப்படி? இந்த பிரச்சனையை அவன் தேவனுக்கு முன்பாக கொண்டு அவருடைய ஆலோசனையைக் கேட்கின்றான் (யாத்திராகமம் 4:1-5) தேவ ஆலோசனை மோசே எதிர்பார்த்ததைப் போல இருக்கவில்லை. தேவன் அவனிடம் அவன் கையிலிருந்த கோலை தரையிலே போடச்சொல்கின்றார். மோசே கீழ்ப்படிந்து அதைச் செய்த பொழுது அந்த கோல் பாம்பாகியது. மோசே சர்வ வல்லமையுள்ள தேவனுடைய ஊழியக்காரன் என்பதனை பார்வோனுக்கு முன்பாக நிரூபிக்க இது ஒரு அடையாளமாக கொடுக்கப்பட்டது. மோசே இதற்கான காரணங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் இதை அவன் செய்வதற்கு முன்வந்திருக்கவே மாட்டான். இப்படிப்பட்ட ஒரு அடையாளத்தை பார்வோனின் முன்பாக செய்வதற்கு அவனுக்குள் ஒரு எண்ணம் உண்டாகியிருக்க வாய்பேயில்லை. தேவ ஆலோசனைகள் மனிதன் ஏற்படுத்தும் காரணங்களுடன் ஒத்துப் போகாது. ஆனால் மோசே கீழ்ப்படிந்தவுடன் தேவன் அற்புதமாக செயல்பட்டார்.

இதனைத் தொடர்ந்து வந்த வாரங்களிலும் மாதங்களிலும், பார்வோனிடம் என்ன பேச வேண்டும், அவனுக்கு முன்பாக என்ன செய்ய வேண்டும் என்பதனைக் குறித்தெல்லாம் தேவன் ஆலோசனை வழங்கினார். மோசேயின் மூலமாக தேவன் எகிப்பதியரை அடிபணிய வைக்கும்படியான பத்து

வாதைகளை அனுப்பினார். ஒவ்வொரு முறையும் ஒரு புதிய வாதை அனுப்பப்பட்ட பொழுது மோசே என்ன பேச வேண்டும் அல்லது என்ன செய்ய வேண்டும் என அவனுக்கு தேவன் ஆலோசனை கூறினார். மோசே அதற்கு கீழ்ப்படிந்த பொழுது தேவன் தன் வல்லமையை கட்டவிழ்த்து விட்டார். தேவன் தாமே எகிப்தியர் மேல் வெற்றியைப் பெற்றுத் தந்தார்.

இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்படும் போது, வனாந்திர பாதையில் இவர்களை எப்படி போஷிக்கப்போகிறேன் என மோசே கவலைப்பட்டிருக்கக் கூடும். இது அவனுக்கிருந்த திறமைகள் எல்லாவற்றைப் பார்க்கிலும் சவாலானதாக இருந்தது.

ஆனாலும் அவன் என்ன செய்ய வேண்டும் என தேவன் ஆலோசனை கூறினார். தேவன் மோசேயிடம், இஸ்ரவேலர் எகிப்தியரிடம் அவர்களிடமுள்ள அனைத்தையும் கேட்கும்படி சொல்ல கட்டளையிட்டார். அதற்கு அவர்கள் கீழ்ப்படிந்தபொழுது, எகிப்பதியரின் அனைத்து செல்வங்களும் இஸ்ரவேலரிடம் வந்தது. தேவனால் அழிவிற்குள்ளான ஒரு தேசம், இப்பொழுது தேவனுடைய ஜனத்தின் வழிப்பிரயாணத்திற்கு தேவையான அனைத்தையும் கொடுக்கின்றது. அடிமைகளான எபிரேய மக்களின் வேலைப் பளுவைச் சாரந்து வாழ்ந்திருந்த ஒரு தேசம் இப்பொழுது அவர்கள் போகும்பொழுது அசீர்வதித்து அனுப்புகின்றார்கள். மோசே தேவ ஆலோசனைக்கு செவி கொடுத்தபொழுது தேவ ஜனங்களுக்குத் தேவையான அனைத்தும் கொடுக்கப்படுகின்றது.

அவர்களின் பிரயாணம் முழுவதிலும் படிப்படியாக தேவன் அவர்களை வழிநடத்தினார். யாத்திராகமம் 13:21 தேவன் அவர்களுக்கு முன்பாக பகலில் மேக ஸ்தம்பமாகவும் இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் சென்றார் என கூறுகின்றது. வனாந்திர பாதையிலே தேவன் அவர்களுக்கு வழிகாட்டினார்.

ஆகவே அவர்கள் செல்ல வேண்டிய பாதை எது என மோசே தீர்மானிக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை. தேவன் ஏற்கனவே தீர்மானித்திருந்தபாதையில் அவர்களை வழிநடத்தும் எளிய வேலை மட்டும் தான் அவனுக்கிருந்தது.

ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தின் அருகில் வந்த பொழுது எல்லா பக்கங்களிலும் நெருக்கப்பட்டார்கள். பார்வோனின் சேனை அவர்களை பின்னாலிருந்து துரத்திவந்த அதேநேரத்தில் அவர்களால் முன்னேறிச் செல்லவும் முடியவில்லை. மீண்டும் அவர்கள் முடியாமை என்னும் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டார்கள். என்ன செய்வதென்று மோசேக்குத் தெரியவில்லை, ஆனால் தேவனுக்குத் தெரியும். தேவன் மோசேயை நோக்கி சிவந்த சமுத்திரத்தின் மேல் அவன் கையிலுள்ள கோலை நீட்டும்படி ஆலோசனை கூறினார். அவன் அவ்வாறு செய்தபொழுதுசிவந்த சமுத்திரத்தின் தண்ணீர் இரண்டாகப் பிளந்தது. தேவனுடைய ஜனங்கள் பாதுகாப்பாக அக்கரைக்கு செல்ல வழி திறந்தது. பார்வோனின் இரதங்கள் அவர்களை பின்தொடர்ந்த பொழுதோ சுவரைப் போல நின்றிருந்த தண்ணீர் மீண்டும் சேர்ந்து பார்வோனின் சேனையை அழித்துப் போட்டது. மனிதனின் எந்த ஆலோசனை இப்படிப்பட்ட முடிவை எடுக்க வைக்கக் கூடும்? தேவனுடைய ஆலோசனையை கேட்டபடியினால் மட்டுமே மோசே ஜனங்களை பாதுகாப்பாக சிவந்த சமுத்திரத்தை கடந்து கொண்டு சென்று விடுதலையாக்கினான்.

தேவனுடைய ஜனங்கள் முன்னேறிச் சென்றபொழுது, அவர்கள் சூர் என்னும் வனாந்திரத்திற்குள் வந்தார்கள். (யாத்திராகமம் 15:22) அவர்கள் மூன்று நாள் பிரயாணம் பண்ணின பின்பு குடிக்கத் தண்ணீரில்லாமலிருந்தது. மாரா என்னும் பகுதிக்குள் அவர்கள் வந்த பொழுது, கடைசியாக அங்கே தண்ணீரைக் கண்டார்கள். ஆனாலும் அந்த தண்ணீர் குடிக்க முடியாதபடி கசப்பானதாக இருந்தது. ஜனங்கள் முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது தேவன் மீண்டும்

மோசேக்கு ஆலோசனையை கொடுத்தார். தேவன் ஒரு மரத்தின் கிளையைக் காண்பித்து அதைத் தண்ணீரில் போடும்படி சொன்னார். மோசே அவ்வாறு செய்தபொழுது அந்த தண்ணீர் இனிப்பானதாக மாறியது. ஜனங்கள் தேவையான அளவு திருப்தியாக குடித்தார்கள்.

மீண்டும் ஜனங்கள் தங்களுக்கு சாப்பிட ஒன்றுமில்லையென மோசேயிடம் முறுமுறுத்தார்கள். மோசேக்கு என்ன செய்வது என தெரியவில்லை. அவர்களின் தேவைக்கு அவனிடம் பதிலிருக்கவில்லை. தேவன் மோசேயிடம் பேசி ஜனங்களுக்கு தேவையான அப்பத்தை வானத்திலிருந்து பொழியப் பண்ணுவேன் என சொன்னார். மோசே ஜனங்களிடம் என்ன பேச வேண்டும் என தேவன் ஆலோசனை கூறினார். அவர்களுக்கு எந்த அளவு தேவையோ அதை மட்டும் சேகரித்துக் கொள்ள வேண்டும் என கூறினார். அடுத்து வரப்போகும் நாற்பது வருடங்களுக்கு ஒவ்வொரு நாள் காலையிலும் வனாந்திர வெளியிலே அந்த மன்னா காணப்படப் போகின்றது. இஸ்ரவேலின் முழு தேசத்தாருக்கும் தேவையான பெலனை அந்த மன்னா கொடுக்கப்போகின்றது. இப்படிப்பட்ட ஒரு தேவை சந்திக்கப்படுவதற்கு எந்த மனிதனால் ஆலோசனை கொடுக்க முடியும்?

ரெவிதீம் என்னும் இடத்திலே தேவனுடைய ஜனங்களுக்கு மீண்டும் குடிக்க தண்ணீரில்லாமல் போயிற்று. மீண்டும் மோசேக்கு இந்த பிரச்சனைக்கு ஒரு பதிலில்லாமல் போனது. ஆனால் என்ன செய்ய வேண்டுமென தேவன் அவனுக்கு ஆலோசனை கூறினார். ஒரு குறிப்பிட்ட கற்பாரையைக் காண்பித்து அதனை அடிக்கும்படி கூறினார். மோசே அவ்வாறு செய்தவுடன் ஜனங்களுக்குத் தேவையான தண்ணீர் அந்த கற்பாறையிலிருந்த வந்தது. தேவனுடைய ஆலோசனையே பிரச்சனைக்குத் தேவையான பரிகாரத்தைத் தந்தது.

இஸ்ரவேலர் வனாந்திரத்தில் பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்த போதெல்லாம், மோசே தேவனுடைய சமூகத்தில் நேரத்தை செலவழித்து, அவர் சொல்வதையெல்லாம் கேட்டு அவருடைய கட்டளைகளையெல்லாம் ஜனங்களுக்காக எழுதி வைத்தான். மோசே தேவனுடைய சமூகத்தில் நேரம் செலவழித்ததன் விளைவாக பெறப்பட்ட கற்பனைகள் மனித ஆலோசனையினால் பெற்றவைகளல்ல. மாறாக அவைகள் தேவனுடைய ஆலோசனைக்காக மோசே காத்திருந்தபடியால் பெற்றுக் கொள்ளப்பட்டவைகள். ஆசரிப்புக் கூடாரத்தை கட்டுவதற்கான கட்டளையை மோசே பெற்றுக் கொண்ட பொழுது, அதற்குரிய சித்திர வேலைகளை யார் செய்ய வேண்டும் எனவும் தேவன் ஆலோசனை கூறினார். யாத்திராகமம் 31:16ல் அகோலியாப் மற்றும் பெசலேயலிடம் இந்த வேலைகளை பொறுப்பெடுக்குமாறு சொல்லும்படி மோசேக்கு தேவன் ஆலோசனை கூறினார் என வாசிக்கின்றோம். இந்த மனிதர்கள் மோசேயினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்ல, தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். தேவனுடைய ஆலோசனைக் கேட்டு தேவனுடைய எதிர்ப்பார்ப்பை அவர்களுக்கு அறிவிப்பது மட்டுமே மோசேயின் வேலையாக இருந்தது.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாகவும் மோசேக்கு விரோதமாகவும் முறுமுறுத்த பொழுது, தேவன் அவர்கள் மத்தியில் சர்ப்பங்களை அனுப்பினார். இந்த சர்ப்பங்கள் அவர்களைக் கடித்தபடியினால் அநேகர் மரித்தார்கள். ஜனங்கள் மோசேயிடம் வந்து தங்கள் குற்றத்தை அறிக்கையிட்டு, இந்த சர்ப்பங்களை தங்களை விட்டு அப்புறப்படுத்துமாறு தேவனிடம் அவர்களுக்காக மன்றாடுமாறு கேட்டுக் கொண்டனர். மோசே அவ்வாறு தேவனிடம் சென்று முறையிட்டபொழுது தேவன் மீண்டும் அவனுக்கு ஆலோசனை வழங்கினார். வெண்கலத்தினால் சர்ப்பம் ஒன்றை உண்டாக்கி அதை ஒரு மரத்தூணிலே உயர்த்தி வைக்கும்படி கூறினார்.

யாராவது சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டால் அவர்கள் இந்த மரத்திலே உயர்த்தி வைக்கப்பட்டுள்ள சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தால் அவர்கள் சுகமடைவார்கள். இப்படிப்பட்ட ஒரு ஆலோசனையை எந்த மனிதனால் கொடுக்க முடியும்? மருத்துவ ரீதியாகவோ. விஞ்ஞான ரீதியாகவோ இதற்கு அர்த்தம் கொடுக்க முடியாது. ஆனால் தேவனுடைய ஆலோசனக்கு தேவஜனங்கள் கீழ்ப்படிந்த பொழுது சுகம் உண்டாகியது.

மோசேயின் வாழ்க்கையிலிருந்து இன்னும் பல விளக்கங்களை நாம் காணமுடியும். ஆனாலும் நாம் இதுவரை கண்டவைகள் இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதற்குப் போதுமானது. மோசேயின் ஊழியத்தின் வெற்றிக்குக் காரணமாக இருந்தது எது? தனக்கு முன்னாலிருந்த இவ்வளவு பெரிய வேலையை நிறைவேற்றி முடிக்க அவனுக்கு எப்படி முடிந்தது? மோசே இடைவிடாமல் தேவ ஆலோசனையைத் தேடிக் கொண்டிருந்தான். தேவ ஆலோசனை மட்டும் இல்லையென்றால் மோசேக்கு என்ன நடந்திருக்கும்? தேவ ஆலோசனையில்லாமல், வனாந்திரத்தில் தேவ ஜனங்களை வழிநடத்தி வந்திருக்கக் கூடுமா? மோசேயின் ஊழியத்தின் வெற்றி அவனுடைய மனித ஞானத்திலோ, அவனுடைய பெலத்திலோ இருக்கவில்லை, மாறாக தேவனுடைய ஆலோசனையை கேட்கவும் அதைப் பின்பற்றவும் அவனுக்கிருந்த விருப்பத்திலும் ஆவலிலுமே இருந்தது.

## கவனத்திற்கு:

- நாற்பது வயதிலிருந்த மோசேயையும் எண்பது வாயதான மோசேயையும் கவனித்துப் பாருங்கள். இரண்டிற்குமிடையிலுள்ள வித்தியாசமென்ன? நாற்பது வயதில் மோசே ஜனங்களை எவ்வாறு வழிநடத்தியிருப்பான்? அவனுடைய நம்பிக்கை எதனைச் சார்ந்திருக்கக் கூடும்?

• மோசேயின் வாழ்க்கையில் தேவ ஆலோசனையைக் கவனியுங்கள். தேவ ஆலோசனை எப்போதும் மோசேக்கு அர்த்தமுள்ளதாக இருந்ததா? மோசே தன்னுடைய சுய ஆலோசனையினால் அவன் சந்தித்த பிரச்சனைகளுக்கு பதிலை கண்டிருக்க முடியுமா?

• தன்னுடைய ஊழியத்தில் தேவனுடைய ஆலோசனையை தேடுவது மோசேக்கு எவ்வளவு முக்கியத்துவமானது?

• தேவனுடைய ஆலோசனையையும் வழிநடத்துலையும் காணத்துதான் இன்றைய நம் சபைகள் வல்லமையிழந்து காணப்படுவதன் காரணமாக இருக்குமா?

## ஜெபத்திற்கு:

• உங்கள் வாழ்க்கை மற்றும் ஊழியத்திற்கான நம்பிக்கையின் ஆதாரத்தை புரிந்து கொள்ள தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படி ஜெபியுங்கள். உங்கள் சுய ஞானத்தை மற்றும் புரிந்து கொள்ளலை சார்ந்திருக்கிறீர்களா அல்லது தேவனை நம்பியிருக்கிறீர்களா என காண்பித்துத் தருமாறு ஜெபியுங்கள்.

• தேவனுடைய ஆலோசனை புரிந்து கொள்வதனைக் கற்றுக் கொள்வது மற்றும் அவரது வழிநடத்துதலை பின்பற்றுவதிலுள்ள முக்கியத்துவத்தை தேவன் காண்பித்துத் தருமாறு ஜெபியுங்கள்.

• தேவனுடைய ஆலோசனையில் வழிநடக்கத் தவறிய நேரங்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேளுங்கள்.

• தேவனுடைய ஆலோசனையை எல்லா சூழ்நிலையிலும் தேடிய மோசேயின் இருதயத்தைப் போன்ற ஒரு இருதயத்தைத் தருமாறு தேவனிடம் கேளுங்கள்.

அதிகாரம் 10

# யோசுவாவும் தேவ ஆலோசனையும்

இந்த அதிகாரத்திலே மோசேக்கு அடுத்த தலைவனாக ஏற்படுத்தப்பட்ட யோசுவாவின் வாழ்க்கையையும் அவனுடைய ஊழியத்தில் தேவ ஆலோசனையையும் கவனிப்போம். யோசுவா புத்தகத்திலே இந்த போர்வீரனைக் குறித்த சில தெளிவான எடுத்துக்காட்டுக்களை கவனிக்க முடியும். அவன் வேத வசனங்களுக்கு செவி கொடுத்தது மட்டுமல்லாமல், தேவனுடைய ஆலோசனைக்கும் செவி கொடுத்தான் எனவும் காணமுடியும்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் யோர்தான் நதியைக் கடந்து அழைத்துச் செல்லுவதே தலைவனாக யோசுவாவின் முதல் வேலையாகும். இது ஒரு இலகுவான வேலையல்ல. எகிப்பதை விட்டு வெளியேறிய இஸ்ரவேலரின் கூட்டம் ஒரு பெரிய கூட்டம் என்பதை மறந்து விடக்கூடாது. தனக்கு முன்னுள்ள வேலை மிகப் பெரியது என்பதனை யோசுவாவும் அறிந்திருந்தான். அவர்கள் பிரவேசிக்கப் போகின்ற தேசங்களிலுள்ளவர்கள் அவர்கள் வருகையை விரும்பப்போகின்றவர்கள் அல்ல. தங்கள் தேசத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யுத்தம் செய்யவும் தயங்காதவர்கள். யோசுவாவின் ஊழிய ஆரம்பத் திலிருந்து அவன் இரண்டு தயவுகளைப் பெற்றிருந்தான் அவனுடைய அழைப்பு மற்றும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள். யோசுவா 1:1-3ல் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்:

1:1 கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்த பின்பு,

*கர்த்தர் மோசேயின் ஊழியக்காரனான நூனின் குமாரன் யோசுவாவை நோக்கி:*

*1:2 என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக்கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப்போங்கள்.*

*1:3 நான் மோசேக்குச்சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்.*

அவனுடைய அழைப்பும் தேவன் கொடுத்த வாக்குத்தத்தமும் அவனுடைய ஊழியத்திற்கான தைரியத்தை அவனுக்குக் கொடுத்தது. தேவனுடைய தனிப்பட்ட அழைப்பு மட்டும் இல்லையென்றால் என் ஊழியத்தை தொடர்ந்து செய்திருப்பேனோ என நிச்சயமாக சொல்ல முடியாத அநேக சந்தர்ப்பங்கள் எனக்கும் இருந்ததுண்டு. தேவன் யோசுவாவிடம் பேசியபொழுது அவனுடைய வாழ்க்கையின் நோக்கத்தை குறித்து அவனிடம் தெளிவாக பேசினார். அதுமட்டுமல்ல அவனோடு தேவன் இருப்பதாகவும் அவனுக்கு வெற்றிகளை தருவதாகவும் உறுதியளிக்கிறார். யோசுவா இந்த ஊழியத்தை தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் தேவன் தன் ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வழிநடத்திச் செல்ல தன் பிரதிநிதியாக யோசுவாவை அழைத்தார். தேவ கட்டளை கேட்ட யோசுவா அதற்கு கீழ்ப்படிந்தான்.

அந்த நாட்களிலே யோசுவாவிற்கு பல கேள்விகள் இருந்திருக்கக் கூடும் என நான் நம்புகின்றேன். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலுள்ள ஜாதிகளை எப்படி மேற்கொள்ள கூடும்? இதைப் பற்றியும் தேவன் யோசுவாவிடம் தெளிவாகப் பேசினார்.

கர்த்தர் யோசுவாவை நோக்கி: நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை

இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன். (யோசுவா 3:7)

யோசுவா வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த பொழுது, தேவன் தன் பிரசன்னத்தை அவனுக்குக் காண்பித்து ஞாபகப்படுத்தினார். தனக்கு முன்னுள்ள இந்த வேலையைச் செய்து முடிப்பதற்கு தேவன் அவனைத் தகுதிப்படுத்தினார். தேவனிடமிருந்து இந்த வார்த்தைகளைப் பெற்றிருக்காவிட்டால் யோசுவா எங்கே இருந்திருப்பான் என்பதனை யோசித்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்குமல்லாவா?

தேவ ஜனங்களை நடத்திச் செல்லும் வேலைக்கு தேவன் அவனைஅழைத்து தகுதிப்படுத்தியபடியால் அவன் தைரியமாக அந்த வேலையைச் செய்தான். யோசுவா இந்த அழைப்பிற்கு கீழ்ப்படிந்தபொழுது தேவன் தொடர்ந்து அவனுக்கு ஆலோசனை கொடுத்து ஒவ்வொரு படியிலும் அவனை வழிநடத்தினார்.

யோசுவா தன் ஊழியத்தில் சந்தித்த முதல் தடைகளில் ஒன்று, தேவனுடைய ஜனங்களை யோர்தானைக் கடந்து கொண்டு செல்லுவதாகும். ஜனங்களைப் பாதுகாப்பாக எப்படி யோசுவா கொண்டு செல்லப் போகின்றான்? யோசுவா 4ம் அதிகாரத்தில் யோர்தான் நதி ஆழமானதும் அகலமானதுமானது என நாம் காணமுடியும். அங்கேயும் என்ன செய்ய வேண்டும் என யோசுவாவிற்கு தேவன் ஆலோசனை வழங்கினார். ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியை தோளில் சுமந்து கொண்டுதண்ணீரின் ஓரத்தில் வந்து நிற்கக் கட்டளையிடுமாறு தேவன் யோசுவாவிடம் கட்டளையிட்டார். (யோசுவா 3:8) ஆசாரியர்களின் கால்கள் யோர்தானின் தண்ணீரில் பட்ட மாத்திரத்தில் தண்ணீர் இரண்டாகப் பிளந்தது. ஜனங்கள்

உலர்ந்த தரையில் நடப்பது போல நடந்தார்கள். (யோசுவா 3:17). இப்படி ஒரு காரியம் நடக்குமென்று யோசுவாவினால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. இது தேவனுடைய தெளிவான வழிநடத்துதல். இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தானைக் கடந்து வந்தபொழுது, இந்தச் செய்தியை அப்பகுதியிலிருந்த ஜனங்கள் கேள்விப்பட்டார்கள். இப்பொழுது இஸ்ரவேலர் அந்த தேசத்தில் குடியிருந்த ஜனங்களுடன் யுத்தம் செய்ய ஆயத்தமாக வேண்டும்.

யுத்தத்திற்கு ஆயத்தப்படுதல் என்பது வெறும் யுத்த ஆயுதங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வது மட்டுமல்ல.இன்னுமொரு காரியமும் சந்திக்கப்பட வேண்டி யிருந்தது. இஸ்ரவேல் இராணுவம் வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள அவர்கள் தேவனுடன் சரியான உறவை வைத்திருப்பது அவசியமானதாகும். இஸ்ரவேலரில் வனாந்திரத்தில் பிறந்த ஆண்கள் விருத்த சேதனம் பண்ணப்பட்டிருக்கவில்லை. (யோசுவா 5:5) இந்த ஆண்களை யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்காக, அவர்கள் அனைவரையும் விருத்தசேதனம் செய்யும்படி கட்டளையிட்டார். கருக்கான கத்திகளை உண்டுபண்ணி இஸ்ரவேலிலுள்ள ஆண்களை விருத்தசேதனம் பண்ணி, தேவனுக்கு கீழ்ப்படிய தேவன் கூறின ஆலோசனையை குறித்து யோசுவா 5:2ல் வாசிக்கின்றோம். இதன் மூலம் ஜனங்கள் தங்கள் சரீரங்களிலும் தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்பினார். யோசுவா ஜனங்களை யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணிக் கொண்டிருந்தபடியால் இந்த முக்கியமான சட்டத்தை கவனிப்பதற்கு நேரமில்லை. தேவன் தனக்கென சில முன்னுரிமைகளை வைத்திருக்கின்றார்.

தேவனுடைய வழிகளுக்கும் நம் வழிகளுக்கும் வித்தியாசமுண்டு. இஸ்ரவேலின் இராணுவம் விருத்த சேதனம் செய்து கொள்வதனால் சிறந்த போர்வீரர்களாக செயல்பட முடியும் என மனுஷரீதியில் பார்க்க முடியாது.

ஆனால் தேவனுடைய பார்வையில் அது தேவனுடைய பிரமாணங்களுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தார்கள், ஆகவே தேவ ஆசீர்வாதம் அவர்களின் வாழ்க்கையில் வருவதற்கு அது வழியாக அமைந்தது. இந்தக்காரியத்தில் யோசுவா தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்காவிட்டால், தன் எதிரிகளிடம் நிச்சயம் தோற்றுப் போயிருப்பான். நாம் தேவனின் ஆலோசனைக்கு நம் செவிகளைத் திறக்கும்போது, அவர் எதற்கு முன்னுரிமை கொடுக்க விரும்புகின்றாரோ அதை நமக்கு ஞாபகப்படுத்துவார்.

எரிகோ பட்டணம்தான் யோசுவா முதலாவதாக ஜெயித்த பட்டணமாகும். இங்கேயும் தேவன் யோசுவாவிற்கு ஆலோசனை கூறி அவன் என்ன செய்ய வேண்டும் என தேவன் எதிர்பார்த்ததை கூறினார்:

> *6:2 கர்த்தர் யோசுவாவை நோக்கி: இதோ, எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்தவீரரையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்.*
> *6:3 யுத்த புருஷராகிய நீங்கள் அனைவரும் பட்டணத்தைச்சூழ்ந்து ஒரு தரம் சுற்றிவாருங்கள்; இப்படி ஆறு நாள் செய்யக்கடவீர்கள்.*
> *6:4 ஏழு ஆசாரியர் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக்கொண்டு போகவேண்டும்; ஏழாம் நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவர்கள்; ஆசாரியர் எக்காளங்களை ஊதவேண்டும்.*
> *6:5 அவர்கள் அந்தக்கொம்புகளினால் நெடுந்தொனி இடும்போதும், நீங்கள் எக்காள சத்தத்தைக்கேட்கும்போதும், ஜனங்கள் எல்லாரும் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக்கடவர்கள்; அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்துவிழும்; உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராக ஏறக்கடவர்கள் என்றார். (யோசுவா 6:2-5)*

இந்தத் திட்டம் யோசுவாவின் இராணுவ யுக்தியின் சிந்தைக்கு எந்த அர்த்தத்தையும் கொடுக்கவில்லை. தன் மக்களை எரிகோ மதிலைச் சுற்றி ஒவ்வொரு நாளும் நடக்கச் செய்வது என்பது எதிரியின் அம்புகளின் தாக்கத்திற்கு அவர்களை உள்ளாக்குவதாகும். எக்காளத்தை ஊதச் செய்வதனால் ஒரு பட்டணத்தின் அகலமான மதிலை கீழே விழத்தள்ள முடியுமா? ஆனால் இதுதான் தேவன் யோசுவாவிற்கு கொடுத்ததும், யோசுவா கீழ்ப்படியத் தீர்மானித்ததுமான ஆலோசனையாகும். தேவன் தான் சொன்ன வார்த்தையில் உண்மையுள்ளவராக பட்டணத்தின் மதிலை கீழே விழச் செய்து தன் ஜனத்திற்கு வெற்றியைக் கொடுத்தார். மீண்டும் தேவனுடைய ஆலோசனைக்கு கீழ்ப்படிய தீர்மானித்தபடியால் யோசுவா வெற்றியுள்ளவனானான்.

ஒருவேளை யோசுவா இந்த யுத்தத்தை திட்டம் பண்ணி யிருந்தால் பட்டணத்தை தாக்குவதற்கு அவன் வேறு விதமான ஒரு திட்டத்தையே பண்ணியிருப்பான் என நிச்சயம் நான் நம்புகின்றேன். யோசுவா எப்பொழுதும் தேவனுடைய ஆலோசனையைத் தேடிக் கொண்டிருக்கவில்லை. சில நேரங்களில் அவன் தன் சுய ஞானத்தை பயன்படுத்தினான்.

ஒரு சமயத்தில் ஆயி என்னும் சிறிய பட்டணமொன்றை வேவு பார்க்க ஆட்களை அனுப்பினான். அந்த வேவுகாரர் திரும்பி வந்து அந்த பட்டணம் சிறிய பட்டணம் என்றும் இரண்டா யிரம் அல்லது மூவாயிரம் வீரர்களை அனுப்பினாலேயே அந்த பட்டணத்தை தாக்கி எளிதாக ஜெயித்து விடலாம் என அவனிடம் சொன்னார்கள். யோசுவா தேவனுடைய ஆலோசனையைத் தேடாமல் அவர்களின் ஆலோசனைக்கு செவிகொடுத்தான். இதன் விளைவாக அந்த யுத்தத்திலே இஸ்ரவேல் இராணுவம் தோற்கடிக்கப்பட்டு, முப்பத்தாறு வீரர்கள் மடிந்தார்கள். இந்த மோசமான தோல்வியின் முடிவிலேதான் யோசுவா தேவனுடைய சமூகத்திற்குச் சென்று

தோல்விக்கான காரணத்தை தேடினான். அப்பொழுது தேவன் அந்தத் தோல்விக்கான காரணத்தை அவனிடம் கூறினார். எரிகோ பட்டணத்திலே தேவன் எடுக்க வேண்டாமென்று சொல்லிய சில பொருட்களை அவனுடைய இராணுவத்திலுள்ள ஒருவன் எடுத்திருக்கிறான் என்பதை அவனுக்குத் தெரியப்படுத்தினார். அவன் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவன் மற்றும் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன் மற்றும் இந்தக் குற்றத்தைச் செய்தவன் யாரென்பதனையும் அவனுக்குக் காண்பித்தார். ஆகான் என்னும் அந்த மனிதனின் கீழ்ப்படியாமைக்காக அவன் கல்லெறிந்து கொலைசெய்யப்பட்டான். இவ்வாறு தீமை இஸ்ரவேலிலிருந்து அகற்றப்பட்டது. தீமை செய்த ஆகானை யோசுவாவினால் கண்டு பிடித்திருக்க முடியாது. இந்தப் பாவத்தைக் குறித்து தேவனுக்கும் ஆகானுக்கும் மட்டுமே தெரியும்.

யோசுவா தேவனின் ஆலோசனையைக் கேட்காமல் ஆயி பட்டணத்திற்கு மேல் யுத்தம் பண்ணத் தீர்மானித்த பொழுது, பாளையம் தீட்டுப்பட்டிருந்த படியால் அவனுக்கு முன்பாக தோல்வியுண்டாகியது.

சரியான தீர்மானத்தை எடுப்பதற்கு அவனுக்கு தேவ ஆலோசனையும் தேவ ஞானமும் தேவைப்பட்டது. நமக்கும் அது போலவே தேவையான எல்லா ஆலோசனைகளும் இல்லாமலிருக்கும். தேவனுக்கு என்ன தெரியும் அல்லது தேவன் எவ்வாறு பார்க்கின்றார் என நமக்குத் தெரியாது. நமக்கு முன்னுள்ள யுத்தங்களில் நமக்கு வெற்றி வேண்டுமென்றால் தேவனின் ஞானம் மிக அவசியம். ஆகானின் மரணத்திற்கு பின்னர், தேவன் மீண்டும் ஆயி பட்டணத்திற்கு மேல் யுத்தம் பண்ண தேவன் ஆலோசனை கூறினார். இந்த முறை யோசுவா எவ்வாறு பட்டணத்தைத் தாக்க வேண்டுமென்று தெளிவாக கூறினார்:

*8:2 நீ எரிகோவுக்கும் அதின் ராஜாவுக்கும் செய்ததுபோல, ஆயிக்கும் அதின் ராஜாவுக்கும் செய்யக்கடவாய்; அதில் கொள்ளையிட்ட பொருள்களையும் மிருகஜீவன்களையும் உங்களுக்குக்கொள்ளையாக எடுத்துக்கொள்ளலாம், பட்டணத்துக்குப் பின்னாலே பதிவிடையை வை என்றார். (யோசுவா 8:2)*

தேவன் இஸ்ரவேலருக்கு ஆயி பட்டணத்தின் மேல் வெற்றியைக் கொடுத்தார். எதிரிகளை முன்பாக சென்று தாக்குவதற்கு பதிலாக அவர்களுக்கு பின்புறமாக பதிவிடை ஒன்றை வைக்க தேவன் யோசுவாவிடம் கூறினார்.

இது யோசுவாவின் திட்டமல்ல, ஆனால் தேவனின் இராணுவ ஆலோசனை திட்டமாகும். யோசுவா அந்தத் திட்டத்திற்கு கீழ்ப்படிந்த பொழுது தேவன் அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்தார். ஆயி பட்டணத்தை அவர்கள் கைப்பற்றினார்கள். ஆயி பட்டணத்தின் யுத்தம் முடிந்த பொழுது யோசுவா தேவனோடுள்ள உடன்படிக்கையை புதுப்பித்துக் கொண்டான். அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனுக்கு பலிகளைச் செலுத்தினான். யோசுவா 8:30-31ல் யோசுவா கட்டின பலிபீடத்தைக் குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என கவனித்துப் பாருங்கள்:

*8:30 அப்பொழுது யோசுவா: கர்த்தரின் தாசனாகிய மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளை யிட்டபடியும், மோசேயின் நியாயப்பிரமாணபுஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியும், ஏபால் பர்வதத்தில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு இருப்பாயுதம் படாத முழுக் கற்களால் ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.*

*8:31 அதின்மேல் கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலிகளைச் செலுத்தி, சமாதானபலிகளையும் இட்டார்கள்.*

மோசேயின் நியாயப்பிரமாண புத்தகத்தில் தேவனாகிய கர்த்தர் கட்டளையிட்டபடி பலிபீடத்தைக் கட்டுவதற்கு யோசுவா கவனமாக இருந்ததைக் குறித்து எழுதியிருப்பதே இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

யோசுவா வேத வார்த்தைகளை நன்றாக அறிந்திருந்தபடியால் பலிபீடத்தை கட்டும் பொழுதும் அந்த வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க கவனமுள்ளவனாயிருந்தான். இதற்கு மாறாக அவன் எதைச் செய்திருந்தாலும் அது அவனுடைய கீழ்ப்படியாமையையே காட்டியிருக்கும். எழுதப்பட்ட யோசுவாவின் இருதயம், தேவனுடைய வார்த்தையை பின்பற்ற கவனமுள்ளதாக இருந்தது.

தேவனுடைய ஆலோசனைக்கு காத்திருக்க கற்றுக் கொள்வது யோசுவாவுக்கு எளிதானதாக இருக்கவில்லை. ஆயி பட்டண யுத்தத்தில் மட்டும்தான் தேவனுடைய ஆலோசனையை கேட்கத் தவறினான் என்பதல்ல. யோசுவா 9ம் அதிகாரத்திற்கு வரும்போது கிபியோனியர் என்னும் கூட்டத்தினரைக் குறித்து வாசிக்கின்றோம். இந்த கூட்டத்தினர் யோசுவாவையும் இஸ்ரவேல் இராணுவத்தினரையும் மேற்கொள்வது முடியாதகாரியம் என்பதனை அறிந்து கொண்டனர்.

ஆகவே அவர்கள் வஞ்சகமாக செயல்பட தீர்மானித்தனர். பழைய உடைகளை அணிந்து கொண்டு கிழிந்த பைகளையும் பழைய உணவையும் எடுத்துக்கொண்டு தேவனுடைய ஜனங்கள் பாளையமிறங்கிய இடத்திற்கு சென்று தங்களை தூர தேசத்திலிருந்து வருபவர்களாக காட்டிக் கொண்டனர். இவ்வாறு வஞ்சகமாக செயல்பட்டு அவர்களுடன் உடன்படிக்கை ஒன்றை பண்ணிக் கொண்டனர். யோசுவா 9:14-15 வசனங்கள் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய பகுதியாகும்.

*9:14* அப்பொழுது இஸ்ரவேலர்: கர்த்தருடைய வாக்கைக்கேளாமல் அவர்களுடைய போஜன பதார்த்தத்தில் சிறிது வாங்கிக்கொண்டார்கள்.

*9:15* யோசுவா அவர்களோடே சமாதானம்பண்ணி, அவர்களை உயிரோடே காப்பாற்றும் உடன்படிக்கையை அவர்களோடே பண்ணினான்; அதற்காகச்சபையின் பிரபுக்கள் அவர்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்தார்கள்.

இஸ்ரவேலர் கர்த்தருடைய வாக்கைக் கேளாமல் அவர்களுடைய போஜனபதார்த்தத்தில் சிறிது வாங்கிக் கொண்டார்கள் என 14ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். இஸ்ரவேலர் தேவனுடைய ஆலோசனையைக் கேட்காத படியினால் ஏமாற்றப்பட்டார்கள். கிபியோனியரிடமிருந்த பழைய அப்பத்தையும் கிழிந்து போன துணிகளையும் பார்த்து அவர்களை நம்பி விட்டார்கள். அவர்கள் வஞ்சகமாக சொன்ன எல்லா காரியங்களும் நம்பும்படியானதாக இருந்தது.

இஸ்ரவேலர்கள் தங்கள் முன்னால் காட்டப்பட்ட பொருட்களை நம்பி முடிவெடுத்தார்கள். இதைப் போன்ற பல காரியங்கள் நம்முடைய வாழ்க்கையிலும் நடக்கின்றது. ஆனால் சாத்தான் பொய்களின் தகப்பன் என்பதனை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். (யோவான் 8:44) ஆதியிலே அவன் ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்தான். இன்றும் அவன் வஞ்சித்துக் கொண்டிருக்கின்றான்.

அவனுடைய பொய்கள் தேவனுடைய ஆலோசனையைத் தேடக் கூடாத அளவிற்கு உண்மையானதைப் போல நம்பக்கூடியதாக இருக்கும். இதுதான் யோசுவாவின் நாட்களில் கிபியோனியர் மூலமாகவும் நடந்தது. இன்றும் அதுதான் தொடர்கின்றது. எதிரிகளை மேற்கொள்வதற்கு தேவனுடைய ஆலோசனை யோசுவாவிற்கு தேவைப்பட்டது என்பதனை இந்த வசனங்களின் மூலம் கண்டு கொள்ள முடியும்.

அவனுடைய சொந்த ஆலோசனைகள் அவனை தவறாக வழிநடத்தியது. அவனுக்கிருந்த ஞானமும் புரிந்துகொள்ளுதலும் போதுமானதாக இருக்கவில்லை. ஆனால் அவன் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு செவி கொடுத்து தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்க ஆரம்பித்த பொழுது அவனுக்கு ஆச்சரியமான வெற்றிகள் கிடைத்தது. மோசேயின் மூலமாக இஸ்ரவேலருக்கு வாக்குப் பண்ணின தேசத்தை தேவன்அவன் மூலமாக பங்கிடப் பண்ணினார். தேவனுடைய ஆலோசனைக்குக் காத்திருத்தல் என்பதனைக் குறித்து யோசுவாவின் வாழ்க்கையின் மூலமாக நாம் கற்றுக் கொள்வதற்கு மிக முக்கியமான பாடமொன்றொண்டு.

## கவனத்திற்கு

- நம் வாழ்க்கையில் தேவனுடைய குறிப்பான அழைப்பை அறிந்து கொள்வது எவ்வாறு நமக்கு முன்னுள்ள யுத்தத்தைச் சந்திப்பதற்கான நம்பிக்கையையும் தைரியத்தையும் தருகின்றது? உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட கஷ்டமான சூழ்நிலைகளை தேவனுடைய குறிப்பான அழைப்பு மேற்கொள்ள உதவி செய்த சம்பவங்கள் ஏதேனும் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?

- யோசுவாவிற்கு தேவனுடைய ஆலோசனை எப்போதும் பிரயோஜனமானதாக இருந்ததா? தேவ ஆலோசனை மனித யோசனைகளுக்கு மாறானது என்பதற்கு ஒரு உதாரணம் தருக.

- இஸ்ரவேல் இராணுவத்தினர் விருத்தசேதனத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதனை தேவன் யோசுவாவிற்கு ஞாபகப்படுத்தினார். நாம் முன்னுரிமை கொடுப்பவைகள் தேவனுக்குப் பிரியமானவைகளாக இருக்கின்றனவா? தேவனோடுள்ள உறவில் சரியாக இருப்பது, நாம் தேவனுடைய கருவிகளாக இருப்பதற்கு எவ்வளவு முக்கியமானது என்பதனைக் குறித்து இதன் மூலம் நாம் கற்றுக் கொள்வது என்ன?

• யோசுவாவிற்கு தேவையான அளவிற்கு தகவல்கள் கிடைக்காமலிருந்த பொழுது அவன் தேவனுடைய ஆலோசனையை தேடிய நேரங்களைக் குறித்த சில சந்தர்ப்பங்களைக் கூறுக.

• நமக்கு முன்னுள்ள ஆதாரங்களைக் கொண்டு நாம் தவறான முடிவுகளுக்கு வருவதற்கு வாய்ப்புகள் உண்டா? பொய்யின் பிதாவாகிய சாத்தான் எவ்வாறு நம்மை வஞ்சிக்க முடியும்? யோசுவா கிபியோனியரின் காரியத்தில் எவ்வாறு ஏமாற்றப்பட்டான்? நம் சுய ஆலோசனையை நம்பக் கூடாது என்பதனை இது எவ்வாறு நமக்குக் கற்றுத் தருகின்றது?

## ஜெபத்திற்கு:

• உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய அழைப்பைக் குறித்த நிச்சயத்தை தேவன் உங்களுக்குத் தருமாறு ஜெபியுங்கள்.

• நாம் ஏமாற்றப்படுவதன் மூலமாக தவறான தீர்மானங்களை எடுக்கும் அதே நேரத்தில் தேவன் சகலவற்றையும் அறிந்தவராக நமக்கு சரியான ஆலோசனை தருவதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

• நம் பாதையில் ஒவ்வொரு படியிலும் நம்மை வழிநடத்த அவர் ஆவலுள்ளவராக இருக்கின்றபடியால் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். நாம் தேவனுக்கும் அவருடைய வழிநடத்துலுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதனால் அவர் நமக்கு வெற்றிகளைத் தருவதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

• தேவனுடைய ஆலோசனையை கேட்கத் தவறின நேரங்களை மன்னிக்கும் படியாக தேவனிடம் ஜெபியுங்கள்.

அதிகாரம் 11

# சவுலும் தேவ ஆலோசனையும்

எல்லா தேவ மனிதர்களும் தேவ ஆலோசனையைத் தேடவில்லை. தேவ ஆலோசனைக்கு எதிர்த்து நின்று அவனுடைய வழியிலே செல்லத் தீர்மானித்தவர்களில் சவுல் ராஜா ஒரு எடுத்துக் காட்டான மனிதனாகும். சவுலை நாம் முதலாவதாக அவனுடைய வீட்டிலிருந்து காணாமல் போன கழுதையைத் தேடிப் போன சம்பவத்தில் நாம் சந்திக்கின்றோம். அவனுடைய தேடுதல் அவனைத் தீர்க்கதரிசியாகிய சாமுவேலை சந்திக்க வழிகாட்டும் என்றோ அவனுக்கு புதியதொரு பாதையை காட்டித்தருமென்றோ அவனுக்குத் தெரியவில்லை.

அவர்கள் சூப்பென்னும் நாட்டிற்கு வந்தபொழுது சவுலுடைய வேலைக்காரன் இந்தப் பட்டணத்தில் கனம் பெற்ற தீர்க்கதரிசியாகிய ஒரு மனிதன் இருக்கிறாரென்றும் அவர் சொல்லுவதெல்லாம் நிறைவேறும் என்றும் சொன்னான். (1 சாமுவேல் 9:6) சவுலின் வேலைக்காரன் அந்தத் தீர்க்கதரிசியினிடத்தில் போய் காணாமல் போன கழுதையைப் பற்றி விசாரிப்போம் என கூறினான். சவுலும் அதற்குச் சம்மதித்து அவர்கள் இருவரும் சாமுவேலைச் சந்திக்கச் சென்றனர். இவர்கள் இருவரும் வருமுன்பே தேவன் சாமுவேலுடன் பேசி இஸ்ரவேலின் இராஜாவாக சவுலைத் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் கூறினார். சவுல் சாமுவேலுக்கு முன்பாக வந்து நின்றபொழுது, தீர்க்கதரிசி சவுலிடம் அவன் தேடிச் சென்ற கழுதைகள் கிடைத்து விட்டது என்று கூறிவிட்டு மேலும் இவ்வாறு கூறினார்:

*9:20 இதல்லாமல் சகல இஸ்ரவேலின் அபேட்சையும் யாரை நாடுகிறது? உன்னையும் உன் வீட்டார் அனைவரையும் அல்லவா? என்றான்.*
*(1 சாமுவேல் 9:20)*

தீர்க்கதரிசி இந்த வார்த்தைகளைச் சொன்னபோது சவுல் அதிர்ச்சியடைந்து அவன் இஸ்ரவேலிலுள்ள மிகவும் தாழ்ந்த கோத்திரமாகிய பென்யமீன் கோத்திரத்தைச் சார்ந்தவன் என்பதை ஞாபகப்படுத்தினான். சாமுவேல் இவ்வாறு தன்னை கனப்படுத்திப் பேசினதன் காரணம் என்ன என்பதனை அவன் அறியாமலிருந்தான். சவுல் புறப்படுமுன்னர் சாமுவேல் ஒரு தைலக்குப்பியை எடுத்து சவுலை அபிஷேகம் பண்ணி அவனை இஸ்ரவேலின் இராஜாவாக அறிவித்தான். சவுல் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இராஜா என்பதனை நிரூபிக்க சவுல் திரும்பிப் போகும்போது தீர்க்கதரிசிகளின் கூட்டமொன்றை அவன் சந்திப்பான் என கூறினான்.

அவர்களைச் சந்திக்கும் போது தேவனுடைய ஆவியானவர் அவன் மேல் இறங்குவாரென்றும் அந்தத் தீர்க்கதரிசிகளைப் போலவே அவனும் தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பிப்பான் என்று சொன்னான். சாமுவேல் சொன்னபடியே எல்லாம் நடந்தது. வீட்டிற்கு வந்த பொழுது சவுலின் சிறிய தகப்பன் அவனைச் சந்தித்து அவன் எங்கே போய் வந்தான் எனக் கேட்டான். அவனும் தீர்க்கதரிசியாகிய சாமுவேலைச் சந்தித்து விட்டு வந்ததாக கூறினான். அப்பொழுது அவனுடைய சிறிய தகப்பன் சாமுவேல் என்ன சொன்னான் எனக் கேட்டான்.

சவுலோ காணாமற் போன கழுதைகள் கண்டுபிடிக்கப்பட்டது என சொன்னான் என்பதை மட்டும் சொன்னான். சாமுவேல் அவனை இராஜாவாக அபிஷேகம் பண்ணியதைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. சில நாட்களுக்குப் பின்னர் சாமுவேல் சவுலை இராஜாவாக அறிவிக்க மிஸ்பாவிற்கு வந்த

பொழுது சவுல் அவனைப் பார்க்காமல் ஒளிந்து கொண்டான். (1 சாமுவேல் 10:20-24) தேவனுடைய ஆலோசனை சவுலுக்கு தெரிந்திருந்தாலும் அதில் நடப்பதா இல்லையா என்பதில் சவுல் தெளிவில்லாமலிருந்தான்.

இராஜாவாக சவுல் தன்னுடைய ஆட்சியின் ஆரம்பத்தில் தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவித்தான். ஆனாலும் பொறுமையாக இருப்பதில் அவனுக்கு ஒரு பிரச்சனை இருந்தபடியால் தேவனுக்குக் காத்திருப்பதில் கஷ்டப்பட்டான். 1 சாமுவேல் 13ம் அதிகாரத்தில் பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலருக்கு எதிராக யுத்தம் பண்ண புறப்பட்டு வந்ததைக் குறித்து வாசிக்கின்றோம். 1 சாமுவேல் 13:5ல் பெலிஸ்தியர் 30,000 இரதங்களோடும் 6,000 குதிரைவீரர்களோடும் கடற்கரை மணலத்தனையான சேனையோடும் வந்தார்கள் என பார்க்கின்றோம். பெலிஸ்தியர்களைக் கண்ட இஸ்ரவேலர்கள் மிகவும் பயந்தார்கள். சவுலின் போர்வீரர்களில் சிலர் பின்வாங்க ஆரம்பித்தார்கள்.

யுத்தத்திற்கு போகுமுன்னர் இஸ்ரவேல் இராணுவம் தேவனுக்கு பலி செலுத்துவது வழக்கம். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி இந்தப் பலிகள் ஆசாரியர்களால் செலுத்தப்படவேண்டும். இந்தப் பலியை சாமுவேல்தான் செலுத்தவேண்டும். ஆனால் பலி செலுத்தவேண்டிய நாளையும் தாண்டி ஏழு நாட்கள் முடிந்தும் சாமுவேல் வரவில்லை. சவுல் மோசேயின் நியாயப் பிரமாணங்களை அறிந்தவன். ஆனாலும் அவனுடைய சேனையிலிருந்தவர்கள் அவனை கைவிட்டுப் போகின்றதையும் கவனித்தான். இந்த சூழ்நிலையில் சவுல் ஏதாவது செய்யவேண்டும் என தீர்மானித்து பலிகளைச் அவனே செலுத்தும்படியாக ஆயத்தம் பண்ணச் சொன்னான். அவனே பலிகளைச் செலுத்த தீர்மானித்தன் மூலம் மோசேயின் நியாயப் பிரமாணத்தை அவன் அலட்சியம் பண்ணினான். தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே அவன்

பலிகளை செலுத்த விரும்பினான். ஆனால் தேவனுக்காக காத்திருப்பதற்கு நேரமெடுக்க விரும்பாமல் பிரச்சனைகளைத் தன் கையிலே எடுத்துக் கொள்ள ஆரம்பித்தான். பலி செலுத்தப்பட்டது. ஆனால் அது தேவன் எதிர்பார்த்த விதத்தில் செலுத்தப்படவில்லை. அவனுடைய பொறுமையின்மை தேவனுடைய வழிகளில் காரியங்களைச் செய்வதிலிருந்து அவனைத் தடை செய்தது, இந்த முறைமட்டுமல்ல. அந்த நாட்களில் சவுலின் மகன் யோனத்தானும் அவனுடைய ஆயுததாரியும் தனியாக பெலிஸ்தியருக்கு எதிராக யுத்தமொன்றை நடப்பித்து பெலிஸ்தரின் பாளையத்திற்குள் பயத்தை உண்டு பண்ணினார்கள். ( பார்க்க 1 சாமுவேல் 14:6-15) இது சவுலுக்குத் தெரியாது. பெலிஸ்தரின் பாளையத்தில் ஏதோ நடந்தது என்பதனை மட்டும் சவுல் கேள்விப்பட்டு உடனே இந்த யுத்தத்தைக் குறித்து தேவனிடம் ஆலோசனை கேட்பதற்காக தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை கொண்டுவரும்படி கட்டளையிட்டான். உடன்படிக்கை கொண்டுவரப்பட்டு சவுலுக்கு முன்பாக ஆசாரியர்கள் நின்று தேவனுடைய ஆலோசனையைக் கேட்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் பெலிஸ்தியரின் பாளையத்திற்குள் குழப்பம் அதிகரித்தது. அந்த சத்தத்தைக் கேட்ட சவுல் பொறுமையிழந்தான்.

அவனுடைய இருதய குழப்பம் அதிகரித்தபொழுது அவன் ஆசாரியர்களிடத்திற்கு ஆளனுப்பி நீங்கள் உங்கள் கைகளை எடுத்துக் கொண்டு விலகிக் கொள்ளுங்கள் என்று கூறச் செய்தான். சவுலினால் அதற்கு மேலும் தேவனுக்கு காத்திருக்க முடியவில்லை. அந்த நாளிலே, சவுல் தேவனுடைய ஆலோசனைக்குக் காத்திருப்பதைக் காட்டிலும் தன் சுய ஆலோசனையில் செயல்பட தீர்மானித்தான். அவன் பெலிஸ்தியருடைய பாளையத்திலிருந்து வருகின்ற சத்தத்திற்கு பதில் கொடுக்க வேண்டும் என விரும்பினான். ஆசாரியர்கள் தேவனிடத்திலிருந்து அவனுக்காக ஒரு செய்தியை கொண்டு

வரும்வரை காத்திருக்க அவனால் முடியவில்லை. அவன் தன் சேனையை யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணினான்.

நம்மில் யார்தான் இவ்வித சோதனையை சந்திக்காதவர்கள்? உடனடியாக தீர்மானமொன்றை செயல்படுத்த வேண்டிய அவசியமான சூழ்நிலைகள் வாழ்க்கையில் வருகின்ற ஒன்றாகும். இதற்கெல்லாம் தேவனிடம் கேட்க வேண்டிய அவசியமில்லை என்று எண்ணத் தோன்றும். நமக்குத் தெரிந்த விதத்தில் எப்படிச் செய்வது என அவசரப்பட்டு ஓடுகின்றோம். அநேக நேரங்களில் தேவனுக்கும் அவரது ஆலோசனைக்கும் காத்திருப்பதற்கு நாம் நேரமெடுப்பதில்லை.

தன் சுயத்தை நம்பின நிலைமையால் சவுல் பலமுறை பிரச்சனைகளை சந்திக்க நேரிட்டது. ஒரு முறை பெலிஸ்தியர்களை பின்தொடர்ந்த நேரத்தில், எதிரிகளை முற்றிலும் அழித்து மேற்கொள்ளும் வரையிலும் எந்த உணவையும் சாப்பிடுவதில்லை என சவுல் தன் சேனையிலுள்ளவர்களிடம் ஆணையிட்டு கூறினான். இந்த கட்டளையை அவன் போட்ட நேரத்தில் அவனுடைய மகன் யோனத்தான் அங்கே இருக்கவில்லை. அன்றைய நாளில் பசியேற்பட்டபொழுது யோனத்தான் தேன்கூட்டை கண்டு அதில் ஒருபகுதியை சாப்பிட்டான்.

பெலிஸ்தியரை தோற்கடித்த பின்னர், இவர்களை தொடர்ந்து பின் சென்று கொள்ளையிடலாமா என சவுல் தேவனிடம் விசாரித்தான். ஆனால் தேவன் மறுமொழி கொடுக்கவில்லை. ஏன் தேவன் இவர்களுக்கு மறுமொழி கொடுக்கவில்லை என்பதனை விசாரித்த பொழுது சவுலின் கட்டளையை யோனத்தான் மீறிவிட்டதைக் குறித்து அறிந்து கொண்டான். அன்று சவுலின் சேனையிலுள்ளவர்கள் மாத்திரம் யோனத்தானுக்காக பரிந்து பேசியிருக்காவிட்டால் கட்டளையை மீறின குற்றத்திற்காக சவுல் அவனைக் கொன்றிருப்பான்.

இந்த ஆணை தேவனுடைய ஆலோசனையை கேட்காமல் செய்யப்பட்டதனால் தான் சொந்த மகனையே கொலை செய்யுமளவிற்கு சென்றது.

தேவ ஆலோசனைக்கு சவுல் எதிர்த்து நின்றதைக் குறித்து மீண்டும் 1 சாமுவேல் வாசிக்கின்றோம். அமலேக்கியருடன் யுத்தம் பண்ணச் சொல்லி கட்டளையுடன் தீர்க்கதரிசியாகிய சாமுவேலை தேவன் அனுப்பினார். 1 சாமுவேல் 15:3ல் தேவன் சாமுவேலுடன் குறிப்பிட்ட விதத்தில் பேசுகின்றார்.

இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம்வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான். சவுல் அமலேக்கியருடன் யுத்தம் செய்து அவர்களை தோற்கடித்தான். ஆனால் 1 சாமுவேல் 15:7-9ல் என்ன சொல்கின்றது என்பதைக் கவனியுங்கள்.

> 15:7 அப்பொழுது சவுல்: ஆவிலா துவக்கி எகிப்திற்கு எதிரேயிருக்கிற சூருக்குப்போகும் எல்லைமட்டும் இருந்த அமலேக்கியரை மடங்கடித்து,
>
> 15:8 அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்தான்; ஜனங்கள் யாவரையும் பட்டயக்கருக்கினாலே சங்காரம் பண்ணினான்.
>
> 15:9 சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழித்துப்போடமனதில்லாமல் தப்பவைத்து, அற்பமானவைகளும் உதவாதவைகளுமான

*சகலவஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டார்கள்.*

சவுல் தேவனுடைய ஆலோசனையில் பகுதிக்கு மட்டுமே கீழ்ப்படிந்தான். அற்பமானவைகளையும் உதவாதவைகளையும் கொன்று போட்டு நலமான எல்லாவற்றையும் அவனுக்காக வைத்துக் கொண்டான். ஏன் தேவ கட்டளையை அவமதித்தான் என சாமுவேல் அவனிடம் கேட்டபொழுது:

*15:21 ஜனங்களோ உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக, கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள் என்றான். (1 சாமுவேல் 15:21)*

நல்ல காரியத்திற்காகத்தான் அப்படிச் செய்தேன் என அவன் கூறுகின்றான். இந்த ஆடுகளையும் மாடுகளையும் தேவனுக்குப் பலியாகச் செலுத்துவதன் மூலம் தேவனுடைய ஆலோசனையை மதிக்காமல் போனதை நியாயப்படுத்துகின்றான். சாமுவேலோ பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக்கடாக்களின் கொழுப்பை பார்க்கிலும் தேவனுக்கு செவி கொடுத்தலுமே உத்தமமானது என கூறுகின்றார். (1 சாமுவேல் 15:22)

சாமுவேலின் மரணத்திற்குப் பின்னர், பெலிஸ்தியர் அதிக பிரச்சனைகளைக் கொடுத்தார்கள். சவுல் தேவ ஆலோசனையை அப்பொழுது தேடினான். ஆனால் தேவன் அவனுடன் பேசவில்லை.

தேவன் அவனுடன் பேசவில்லை எனக் கண்டபொழுது சவுல் சாமுவேலின் ஆவியுடன் பேசுவதற்காக குறிகாரர்களை தேடிப் போகின்றான். தேவனுடைய வார்த்தையை கொடுக்கக் கூடிய சாமுவேலுடன் பேச வேண்டுமென சவுல் விரும்பிய பொழுதும் அவன் மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள கட்டளையை அவமதித்தே செயல்படுகின்றான்:

*18:10 தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும்,*
*18:11 மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். (உபாகமம் 18:10-11)*

சவுலின் இருதயம் முழுமையாக தேவனுக்கு அர்ப்பணிக்கப்படவில்லை. அவனுக்குத் தேவையான நேரத்தில் தேவ ஆலோசனையைத் தேடினான், மற்ற நேரங்களில் அதை அலட்சியம் பண்ணினான். அவன் செய்த காரியங்களில் தேவனுக்குரியவைகள் காணப்பட்டாலும் அவன் முழுமையான கீழ்ப்படிதலுடன் செயல்படவில்லை. தேவன் அவனுடைய ராஜ்யபாரத்தை அவனிடம் இருந்து எடுத்து வேறொருவரிடம் கொடுக்கப் போகின்றார் என்று சாமுவேல் சவுலிடம் செல்லும்பொழுது, தாவீதுதான் அவனுக்கு அடுத்த ராஜாவாக வரப்போகின்றான் என சந்தேகப்பட்டான். (1 சாமுவேல் 20:30-31). இதன் விளைவாக அவனுடைய மரண நாள் வரையும் அவன் தேவனுடைய திட்டத்திற்கு எதிராக போராடினான். தாவீதை வனாந்திரத்தில் கொல்லத் தேடினான். தாவீது வாத்தியத்தை வாசிக்கும்போது அவனைக் கொலை செய்ய முயற்சித்தான். அவனுடைய படுக்கையிலே அவனைக் கொலை செய்ய தன் சேவகர்களுக்குக் கட்டளை யிட்டான். தாவீது உயிரோடிருக்கும் நாளெல்லாம் சவுல் தன் ஆவியில் சமாதானமில்லாதிருந்தான். தேவன் அவனுடைய சிம்மாசனத்தை அவனிடமிருந்து எடுத்துப்போடுவார் என்பதனை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சவுல் தேவனுடைய ஆலோசனைக்கு முற்றிலும் கீழ்ப்படியாதபடியால் தேவன் அவனுக்கு ஆலோசனை

கொடுப்பதை நிறுத்திவிட்டார். தேவன் அவனிடமிருந்து ராஜ்யபாரத்தை எடுத்துப் போட தீர்மானித்ததன் காரணமே சவுல் தேவனுடைய நோக்கத்தில் நடக்காதபடியால்தான். சவுலின் சரித்திரம் நம் எல்லோருக்கும் ஒரு எச்சரிக்கையாகும். அது எல்லாவற்றுடனும் ஒத்துப்போவதன் விளைவின் சரித்திரம். தனக்கு சரியென தோன்றியதை செய்ய தீர்மானித்து தேவனுடைய ஞானத்தையும் ஆலோசனையையும் புறக்கணித்த ஒரு ராஜாவின் சரித்திரம். தேவனுக்காக காத்திருக்க நேரமில்லாமையின் விளைவுகளைச் சந்தித்த ஒரு மனிதனின் சரித்திரம்.

## கவனத்திற்கு:

- உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை கேள்வி கேட்ட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதுண்டா? விளக்குக.

- தேவனுக்காக காத்திருக்காமல் உடனடியாக தீர்மானமெடுக்க வேண்டிய சூழ்நிலைகள் சவுலுக்கு ஏற்பட்டது. அதன் விளைவுகள் என்ன? அப்படிப்பட்ட சூழ்நிலைகள் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?

- தேவனுடைய ஆலோசனையை தேடினாலும் அதற்காக முற்றிலும் கீழ்ப்படிய விட்டுக் கொடுக்காத ஒரு ராஜா என சவுல் தன்னை நிரூபித்தான். தேவனுடைய சித்தத்தை தேடியும் அதற்கு முற்றிலும் கீழ்ப்படிய முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதுண்டா? ஏன்?

- தேவனுக்கு கீழ்ப்படியாமல் போன சந்தர்ப்பங்களை சவுல் நியாயப்படுத்திய நேரங்களுண்டு. அவன் நல்ல ஆடு மாடுகளை தேவனுக்கு பலி செலுத்துவதற்காக காப்பாற்றியதாக சாமுவேலிடம் சொல்லுவது இதற்கான ஒரு எடுத்துக் காட்டாகும். தேவனுக்காக எதையாவது செய்து கொண்டும் கீழ்ப்படியாமல் வாழுவது சாத்தியமா? நல்ல ஒரு

காரியத்தை செய்வதன் மூலம் தேவனுக்கு கீழ்ப்படியாமையை நியாயப்படுத்தக் கூடுமா?

## ஜெபத்திற்கு:

- உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய ஆலோசனைக்கும் அவரது சித்தத்திற்கும் கீழ்ப்படியாமல் இருந்த நேரங்களுக்கு சாக்குப் போக்கு சொன்ன பகுதிகளை தேவன் உங்களுக்கு காண்பிக்கும்படியாக ஜெபியுங்கள்.

- தேவனுடைய நேரத்திற்கு காத்திருக்கவும், கடினமான மற்றும் அழுத்தங்களை உண்டு பண்ணுகின்ற சூழ்நிலைகளிலும் கீழ்ப்படிதலுடன் நடக்க தேவன் உதவி செய்யும்படியாக ஜெபியுங்கள்.

- தேவனுடைய தெளிவான கட்டளைகளை நம்புவதைப் பார்க்கிலும் உங்கள் சுய யோசனைகளை நம்பின நேரங்களை மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள்.

அதிகாரம் 12

# தாவீதும் தேவ ஆலோசனையும்

இஸ்ரவேலின் சரித்திரம் கண்டதிலே தாவீது என்னும் பெயர் அவர்களுக்கு கிடைத்த மிகச் சிறந்த ராஜாவின் பெயராகும். ஒரு அரசியல் மற்றும், தலைமைத்துவத்தில் அவனுடைய வெற்றியின் இரகசியம் என்ன? இதற்கான பதில் அவனுடைய வாழ்க்கை சரித்திரத்திலே அடிக்கடி இடம்பெற்றுள்ள ஒரு சொற்றொடரில் தங்கியுள்ளது. தாவீது தேவனிடம் விசாரித்தான் என்னும் அந்த சொற்றொடர் அவனுடைய வாழ்க்கையில் அடிக்கடி இடம் பெற்றுள்ளது. சவுலைப் போலில்லாமல், தாவீது தன் சுய அறிவைச் சார்ந்திருக்காமல் நாட்டு நடப்புகள் அனைத்திலும் தேவனுடைய ஆலோசனையைத் தேடினான். தாவீதின் வாழ்க்கையில் இருந்த அந்த சொற்றொடரைக் குறித்து இப்பொழுது நாம் பார்ப்போம். தேவ ஜனங்களின் ஆரம்ப கால சரித்திரத்திலே, பெலிஸ்தியர்கள் நிலையான பயமுறுத்தும் எதிரிகளாயிருந்தார்கள். அடிக்கடி இஸ்ரவேல் எல்லைகளுக்குள் தாக்குதலை ஏற்படுத்தி கொள்ளையடித்து, அவர்களுக்கு கஷ்டமான சூழ்நிலைகளை ஏற்படுத்தினார்கள். இதற்கான எட்டுத்துக் காட்டை நாம் 1 சாமுவேல் 13:5-6ல் வாசிக்க முடியும்.

> 13:5 பெலிஸ்தர் இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணும்படி முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரைவீரரோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் கூடிக்கொண்டுவந்து, பெத்தாவேலுக்குக் கிழக் கான மிக்மாசிலே பாளயமிறங்கினார்கள்.
>
> 13:6 அப்பொழுது இஸ்ரவேலர் தங்களுக்கு உண்டான இக்கட்டைக் கண்டபோது, ஜனங்கள் தங்களுக்கு

*உண்டான நெருக்கத்தினாலே கெபிகளிலும், முட்காடுகளிலும், கன்மலைகளிலும், துருக்கங்களிலும், குகைகளிலும் ஒளித்துக்கொண்டார்கள்.*

இந்த வசனங்களில் இஸ்ரவேலர் தங்கள் வாழ்க்கையை பயத்துடன் வாழ்ந்தார்கள் என்பதனைக் கவனிக்கின்றோம். அவர்கள் பெலிஸ்திய வீரர்களுக்குப் பயந்து ஓடும் பொழுது குகைகளிலும், கெபிகளிலும் கன்மலைகளிலும், துருக்கங்களிலும் ஒளித்துக் கொண்டார்கள். பெலிஸ்தியரின் பயமுறுத்தலில் வாழ்ந்த இஸ்ரவேலருக்கு இது ஒரு கஷ்டமான காலமாகும்.

1 சாமுவேல் 23:1ல் பெலிஸ்தியர் கேகிலா என்னும் இடத்தில் யுத்தம் பண்ணி களஞ்சியங்களைக் கொள்ளையடிக்கிறார்கள் என தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது என வாசிக்கின்றோம். இந்த யுத்தம் கேகிலாவிலுள்ள ஜனங்களுக்கு பயமுறுத்துதலாக இருக்கும் என அறிந்ததும் அவன் முதலாவதாக என்ன செய்தான் என்பதனைக் கவனியுங்கள்.

*23:1 இதோ, பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணி, களஞ்சியங்களைக் கொள்ளையிடுகிறார்கள் என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது.*

*23:2 அப்பொழுது தாவீது: நான் போய், அந்தப் பெலிஸ்தரை முறிய அடிக்கலாமா என்று கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு, கர்த்தர்: நீ போ; பெலிஸ்தரை முறிய அடித்து, கேகிலாவை ரட்சிப்பாயாக என்று தாவீதுக்குச்சொன்னார்.*

இந்த வசனங்களிலுள்ள தொடர்பைக் கவனியுங்கள். தாவீது பெலிஸ்தியருடனுள்ள பிரச்சனையைப் பற்றிக் கேள்விப்படுகின்றான். ஆகையால் அவன் கர்த்தரிடம் போய் விசாரிக்கின்றான். இதுதான் தாவீதின் முதல் அனுபவம். அவன் தன் சொந்த ஆலோசனையின்படி நடக்கவில்லை. உடனடியாக அவன் தேவ ஆலோசனையைத் தேடினான். பழைய மிஷனரி

நண்பர் ஒருவர் என்னிடம் இவ்வாறு ஒருமுறை கூறினார். ஒரு பிரச்சனைக்காக நாம் ஜெபிக்கவில்லை என்பதல்ல; ஆனால் நாம் முதலாவதாக ஜெபிக்கவில்லை என்பது தான் உண்மை. வேறு வார்த்தையில் சொல்வதானால், ஒரு பிரச்சனையிலிருந்து வெளியே வர வேறு வழியேயில்லை என்னும் சூழ்நிலை வரும்போது மட்டுமே அதிகமான ஜெபத்தை ஏறெடுக்கின்றோம். ஆனால் தாவீது ஜெபத்தையும் தேவ ஆலோசனையைத் தேடுவதையும் முதலாவதாக செய்கின்றான்!

தேவன் தெளிவாக தாவீதிடம் பெலிஸ்தியருக்கு எதிராக யுத்தம் செய்து கேகிலாவைக் காப்பாற்ற சொன்னபோதும், அவனோடிருந்த ஜனங்கள் பயந்தார்கள். பெலிஸ்தியரின் பலத்தை அவர்கள் அறிந்திருந்தார்கள். கேகிலாவிலுள்ள ஜனங்களைக் காப்பாற்ற தங்கள் வாழ்க்கையை பணயம் வைப்பது சரியா என அவர்கள் நிச்சயமில்லாதிருந்தார்கள். இது தாவீதிற்கு சங்கடமான சூழ்நிலையாக அமைந்தது. யுத்தத்திற்கு போக கட்டளையைப் பெற்றுக் கொண்டான், ஆனால் அவனுடைய வீரர்கள் போக மனதில்லாதிருந்தார்கள். பிரச்சனை வந்த பொழுது மீண்டும் தாவீது அதை எப்படி அணுகுகின்றான் என்பதனைக் கவனியுங்கள்.

> அப்பொழுது தாவீது திரும்பவும் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர் அவனுக்கு உத்தரமாக: நீ எழும்பி, கேகிலாவுக்குப் போ; நான் பெலிஸ்தரை உன்கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்.
> *(1 சாமுவேல் 23:4)*

தன் போர் வீரர்களின் விருப்பமில்லாமையை சந்தித்த தாவீது செய்த முதல் காரியம் தேவனிடம் சென்று என்ன செய்வது என ஆலோசனை கேட்பதுதான். தேவன் மீண்டும் அவனுக்கு வெற்றியை வாக்குப் பண்ணுகின்றார். ஆகவே தாவீதும் அவனுடையசேனையும் பெலிஸ்தியரை முறிய

அடித்து தேவன் சொன்னவண்ணமாகவே வெற்றியை பெற்றுக் கொண்டார்கள். தாவீது கேகிலாவில் இருப்பதைக் கேள்விப்பட்ட சவுல் அவனை முற்றிக்கை போடும்படி தன் வீரர்களை அனுப்புகின்றான். சவுல் தனக்கு தீங்கு செய்ய சதியாலோசனை பண்ணுகின்றான் என தாவீது அறிந்த பொழுது தேவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள மீண்டும் போகின்றான்.

*23:9 தனக்குப் பொல்லாப்புச் செய்யச் சவுல் எத்தனம் பண்ணுகிறான் என்று தாவீது அறிந்து கொண்டபோது, ஆசாரியனாகிய அபியத்தாரை நோக்கி: ஏபோத்தை இங்கே கொண்டுவா என்றான்.*

*23:10 அப்பொழுது தாவீது: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, சவுல் கேகிலாவுக்கு வந்து, என்னிமித்தம் பட்டணத்தை அழிக்க வகைதேடுகிறான் என்று உமது அடியானாகிய நான் நிச்சயமாய்க் கேள்விப்பட்டேன்.*

*23:11 கேகிலா பட்டணத்தார் என்னை அவன் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ, உம்முடைய அடியான் கேள்விப்பட்டபடி சவுல் வருவானோ, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இதை உம்முடைய அடியானுக்குத் தெரிவிக்கவேண்டும் என்றான். அதற்குக் கர்த்தர்: அவன் வருவான் என்றார்.*

*23:12 கேகிலா பட்டணத்தார் என்னையும் என் மனுஷரையும் சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ என்று தாவீது கேட்டதற்கு, கர்த்தர்: ஒப்புக்கொடுப்பார்கள் என்றார்.*

சவுலின் பயமுறுத்தலைப் பார்த்த தாவீது தேவனின் சமூகத்திற்கு ஓடினான். அவனுடைய இருதயம் எப்போதும் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள ஆசைப்பட்டது. பெலிஸ்தியர் பயமுறுத்தல் ஏற்பட்டபொழுது அவர்கள் மேல் யுத்தம் பண்ண தேவன் தாவீதிக்கு கட்டளையிட்டார். ஆனால்

சவுலினால் அவனுக்கு பயமுறுத்தல் ஏற்பட்டபொழுது அப்படிப்பட்ட ஆலோசனை அவனுக்கு கொடுக்கப்படவில்லை. ஆகவே அவனும் அவனுடைய வீரர்களும் சவுலுக்கு தப்பியோடினார்கள். பெலிஸ்தியருக்கு மேல் கிடைத்த வெற்றிக்குப் பின்னர், தாவீதும் அவனுடைய வீரர்களும் சவுலை எதிர்த்து போராடியிருக்கலாம் என நினைத்திருக்கக் கூடும். ஒருவேளை அவர்கள் சவுலை மேற்கொண்டிருக்கக் கூடும். பெலிஸ்தியரின் பயமுறுத்தல்களிலிருந்து கேகிலாவிலுள்ள ஜனங்களை தப்புவித்தபடியால் அந்த ஜனங்கள் அவன் பக்கமாக நிற்பார்கள் என தாவீது நினைத்திருக்கக் கூடும்.

இந்த எண்ணங்களின்படி அவன் செயல்பட்டிருந்தால் அவன் தோல்விகளைச் சந்தித்திருப்பான். ஆனால் தாவீது தேவ ஆலோசனையைத் தேடினபடியால் அவன் தப்புவிக்கப்பட்டான். ஒவ்வொரு புதிய சந்தர்ப்பத்திலும் தேவனிடமிருந்து புதிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதை தாவீது அறிந்திருந்தான்.

2 சாமுவேல் புத்தகத்தை நாம் வாசிக்கும்பொழுது தாவீதின் வாழ்க்கையில் இதே கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதை நாம் காண முடியும். சவுலும் அவன் மகன் யோனத்தானும் யுத்தத்திலே கொல்லப்பட்டார்கள். பல வருடங்களாக தாவீது சவுலின் இராணுவத்திற்கு தப்பியோடுகிற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றான். சவுல் மரித்துப் போனான் என்பதை தாவீது கேள்விப்பட்ட பொழுதும் அவன் செய்ததெல்லாம் தேவனிடத்தில் விசாரிக்கச் சென்றதுதான்:

> *2:1 பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான். அதற்குக் கர்த்தர்: போ என்றார்; எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர்: எப்ரோனுக்குப் போ என்றார். (2 சாமுவேல் 2:1)*

இப்பொழுது சவுல் இராஜாவாக இல்லை. தாவீதுக்கு மீண்டும் தேவ ஆலோசனையை தேடுகின்றான். தன்னை இஸ்ரவேலின்மேல் இராஜாவாக தேவன் அபிஷேகம் பண்ணி யிருக்கிறார் என்பது அவனுக்குத் தெரிந்தாலும் காரியங்களை தன் கைகளில் எடுத்துக் கொள்ளவிரும்பவில்லை. மீண்டும் யூதாவிற்கு திரும்பிப் போகலாமா என தாவீது தேவ ஆலோசனையைத் தேடினான்.

தாவீது யூதாவில் தங்கியிருக்கவில்லையென்றால் எப்படி அவன் யூதாவிற்கு மேல் இராஜாவாக ஆளுகை செய்யமுடியும் என்பதே எனக்கும் கேள்வியாக இருந்தது. மனித ரீதியாகப் பார்த்தால் இது பொதுவான ஒரு பிரச்சனையாகும். ஆனால் தாவீது தன் சுய ஞானத்தின்படி செயல்பட விரும்பவில்லை. அதற்குப் பதிலாக அவன் அதைக்குறித்து தேவனிடத்தில் அறிந்து கொள்ள விரும்பினான். யூதாவிற்குள் போவதற்கு இதுதான் சரியான நேரமா என அறிந்து கொள்ள விரும்பினான். தேவனுக்குப் பிரியமான விதத்தில் அவன் செயல்பட விரும்பினான்.

அப்பொழுது தேவன், யூதாவிற்கு செல்ல இது சரியான நேரம்தான் என அவனிடம் கூறினார். யூதாவிற்குள் திரும்பிச் செல்வதற்கு இது சரியான நேரம் என தேவன் அவனிடம் சொல்லி யிருந்தாலும் யூதாவிலே எங்கே தங்குவது என்பதனையும் விசாரித்தபொழுது அவன் எபிரோனிலே தங்கவேண்டும் என தேவ ஆலோசனை கொடுக்கப்பட்டது. தாவீது தன் சேனையுடன், முழு நிச்சயத்துடன் தேவனுடைய நேரத்தில் தேவன் விரும்பின இடமாகிய எபிரோன் பட்டணத்திலே போய் தங்கினான். தன் வாழ்க்கையில் தேவனுக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கமுண்டு என தாவீது நம்பினான். அந்த நோக்கத்தின் மையத்தில் எப்போதும் இருக்க விரும்பினான். இதற்காக தேவனுடன் தொடர் ஐக்கியத்தில் இருந்து ஒவ்வொரு படியிலும் தேவ வழிநடத்துதலை தேட கவனமாயிருந்தான்.

தாவீது இராஜாவானான் என்பதனைக் கேள்விப்பட்ட பெலிஸ்தியர்கள் அவனைத் தாக்க வேண்டுமென தீர்மானித்தனர். பெலிஸ்தியர் தங்கள் சேனையுடன் வந்து ரெப்பாயிம் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினார்கள். *(2 சாமுவேல் 5:18)* தாவீது ஒரு திரள் சேனை தன்னை தாக்குவதற்காக பாளயமிறங்கியிருப்பதைக் கேள்விப்பட்டு மீண்டும் தேவ ஆலோசனையை கேட்க சென்றான்:

> *5:19 பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர்: போ, பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார். (2 சாமுவேல் 5:19)*

தேவ ஆலோசனைக்கு கீழ்படிந்து தாவீது தன் வீரர்களை சேர்த்துக் கொண்டு பெலிஸ்தியருடன் யுத்தம் பண்ணி அவர்களை மேற்கொண்டான். இந்த வெற்றி மகா பெரிய வெற்றியாக இருந்தபடியால், இஸ்ரவேலரின் தாக்குதலை தண்ணீர் உடைந்தோடுகிறது போல சத்துருக்களை ஓடச் செய்தார் என தாவீது வர்ணிக்கின்றார். *(2 சாமுவேல் 5:20)*

ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே யுத்தத்திலே தோற்கடிக்கப்பட்டாலும் பெலிஸ்தியர்களால் அந்தத் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தங்கள் சேனையை மீண்டும் அணிதிரட்டி அதே பள்ளத்தாக்கில் இன்னுமொரு யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள்.

தாவீது முதல்முறை பெலிஸ்திருக்கு எதிராக யுத்தம் செய்ய ஆயத்தமான போது தேவன் அவனை போகச் சொல்லி கட்டளையிட்டபடியால் இரண்டாவது முறை யுத்தத்திற்கு பெலிஸ்தியர்கள் அணிதிரண்ட போதும் அவர்களுக்கெதிராக யுத்தம் செய்வது தேவ சித்தமாகத்தான் இருக்கும் என தாவீது

நினைப்பதற்கு எல்லா வாய்ப்புகளும் இருந்தது. ஆனால் தாவீது தன் அனுமானத்தில் செயல்படவில்லை. ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவ ஆலோசனையைத் தேட வேண்டும் என அவன் அறிந்திருந்தான். பெலிஸ்தியர்கள் மீண்டும் அணிதிரண்டார்கள் எனக் கண்ட தாவீது மீண்டும் ஆலோசனை கேட்பதற்காக தேவ சமூகத்திற்குச் செல்லுகின்றான்.

> *5:22 பெலிஸ்தர் திரும்பவும் வந்து, ரெப்பாயீம் பள்ளத் தாக்கிலே இறங்கினார்கள்.*
> *5:23 தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு, அவர்: நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து,*
> *5:24 முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப் போ; அப்பொழுது பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார். (2 சாமுவேல் 5:22-24)*

இந்த முறை தேவ ஆலோசனை வித்தியாசமானதாக இருப்பதைக் கவனியுங்கள். பெலிஸ்தியர்களை நேருக்கு நேர் சந்தித்து தாக்க வேண்டாமென்று தேவன் தாவீதிடம் சொல்லுகின்றார். அதற்குப் பதிலாக தாவீது பின்பற்ற வேண்டிய யுத்த முறையொன்றை தேவன் கொடுக்கின்றார். நேருக்கு நேர் அவர்களை சந்திப்பதற்கு பதிலாக அவர்களுக்குப் பின்னால் சென்று தாக்க வேண்டும். பெலிஸ்தியர்களை எங்கே தாக்க வேண்டுமென்றும் தேவன் தாவீதிடம் சொன்னார். முசுக்கட்டை செடிகளுக்கு எதிரே போக வேண்டும். கடைசியாக தேவன் தாவீது எப்பொழுது தாக்க வேண்டுமென்பதனையும் கூறினார் முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை கேட்கும்போது தேவன் இந்த யுத்தத்திற்கான தனிப்பட்ட திட்டத்தை வைத்திருந்தார். தேவனுடைய ஆலோசனையை

கேட்டபொழுது மட்டுமே தாவீது இந்தத் திட்டத்தைப் பெற்றுக் கொண்டான். 1 நாளாகமம் 10:13-14 வரையுள்ள பகுதி சவுல் இராஜாவைப் பற்றி இவ்வாறு கூறுகின்றது:

10:13 அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல், கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப்போனான்.

10:14 அதற்காக அவர் அவனைக்கொன்று, ராஜ்ய பாரத்தை ஈசாயின் குமாரனாகிய தாவீது வசமாகத்திருப்பினார்.

தேவனுடைய ஆலோசனையை சவுல் தேடாமல் போனபடியால்தான் அவன் மரித்துப் போனான். மாறாக தாவீது தான் செய்த எல்லாவற்றிலும் தேவ சித்தத்தை தேடினான். தேவ ஆலோசனையைச் சார்ந்திருப்பதை அவன் தெரிந்து கொண்டான். தன் சுய ஆலோசனையும் புரிந்து கொள்ளலும் தேவ நோக்கத்தை நிறைவேற்ற போதுமானதல்ல என்பதனை அறிந்து அவன் தன்னை தாழ்மைப்படுத்திக் கொண்டான். இதனால் தாவீது எல்லாக் காரியங்களிலும் தேவனைத் தேடினான் எனவும் கூறமுடியாது. பத்சேபாளுடன் அவன் நடந்து கொண்ட விதமும் அதன் விளைவாக தான் செய்த பாவத்தை மறைக்க அவளுடைய கணவனை கொலை செய்ததும் அவன் இந்தக் காரியத்தில் தேவ ஆலோசனைக்கு செவிகொடுக்கவில்லை என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். அன்றைய நாளில் அவன் செய்தவைகள் அவன் வாழ்க்கையிலும் அவனைச் சூழ்ந்திருந்தவர்களின் வாழ்க்கையிலும் எதிர்மறையான விளைவைக் கொண்டு வந்தது.

ஆனாலும் பொதுவாக தாவீதின் இருதயம் தேவனுடைய ஊழியத்தை தேவனுடைய வழிகளில் செய்வதற்கு ஆயத்தமாயிருந்தது.

## கவனத்திற்கு:

- *சவுல் மற்றும் தாவீதின் இராஜ்ய பாரங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும். அவைகள் எவ்வாறு வித்தியாசப்படுகின்றன?*

- *அநேக வேளைகளில் தேவனிடம் ஓடுவதுதான் தாவீதின் முதல் காரியமாக இருந்தது. எத்தனை முறைகளில் நாம் ஜெபத்தையும் தேவனைத் தேடுவதையும் கடைசியான காரியமாக மாற்றிவிட்டோம்? ஏன் இவ்வாறு நடக்கின்றது?*

- *எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய திட்டம் ஒரே மாதிரியானதாக இருக்குமா? நாம் ஒவ்வொரு புதிய சூழ்நிலையிலும் தேவ ஆலோசனையை புதிதாக தேட வேண்டியதன் அவசியம் என்ன?*

- *தாவீது யுத்தத்திற்கு போகவேண்டிய பொழுது, ஒரு இடத்திற்கு போக தீர்மானிக்க வேண்டிய பொழுது, அவன் எங்கே தங்க வேண்டும், எப்படி யுத்தம் பண்ண வேண்டும் என்ற எல்லா சூழ்நிலைகளிலும் தேவ ஆலோசனையைத் தேடினான். உங்கள் வாழ்க்கையில் தேவ ஆலோசனையைத் தேடாமலிருந்த பகுதிகள் உண்டா?*

- *நம் சொந்த ஞானத்தின்படியும் புரிந்து கொள்ளலின்படியும் நமக்கு முடிந்ததை தேவனுக்காக செய்வதற்கும் தொடர்ந்து தேவ ஆலோசனையைக்கேட்டு ஊழியத்தைச் செய்வதற்குமிடை யிலுள்ள வித்தியாசம் என்ன?*

## ஜெபத்திற்கு:

- *தேவனுக்கும் அவருடைய ஆலோசனைக்கும் ஒப்புக் கொடுக்காத உங்கள் வாழ்க்கையின் பகுதிகளை உங்களுக்குக் காண்பித்துத் தருமாறு ஜெபியுங்கள்.*

- *தொடர்ந்து தேவனிலும் அவருடைய ஆலோசனையிலும்*

சார்ந்திருக்க தேவன் உங்களுக்க உதவி செய்யும்படி ஜெபியுங்கள்.

- தேவ ஆலோசனையைத் தேடாமல் உங்கள் சொந்த இஷ்டத்தின்படி செய்ய தீர்மானித்த நேரங்களை தேவன் மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள்.

- நம் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் நம்மை வழிநடத்த வாஞ்சையுள்ளவராயிருக்கிறபடியால் அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

அதிகாரம் 13

# இயேசுவும் பிதா மற்றும் ஆவியானவரின் ஆலோசனையும்

பழைய ஏற்பாட்டிலுள்ள சில நபர்கள் தங்கள் வாழ்க்கையின் தீர்மானங்களில் தேவ ஆலோசனையை எவ்வாறு சார்ந்திருந்தார்கள் என்பதனை நாம் இதுவரை கவனித்தோம். புதிய ஏற்பாட்டிலும் தாங்கள் செய்த எல்லாவற்றிலும் தேவ ஆலோசனையை தேடினவர்களைக் குறித்த எடுத்துக் காட்டுக்களை நாம் காணமுடியும். நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் எடுத்துக் காட்டுடன் இதை நாம் ஆரம்பிப்போம். ஆண்டவராகிய இயேசு முற்றிலும் தேவனானவர் என வேத வார்த்தைகளில் தெளிவாக காணப்பட்டாலும், உலகத்தில் தன் வாழ்க்கையை ஒரு மனிதனாக, பிதாவானவர் மற்றும் ஆவியானவரின் வழிநடத்துதலையும் ஆலோசனையையும் முற்றிலும் சார்ந்து வாழ்ந்தார். அவரின் அடிச்சுவடுகளைப் நாம் பின்பற்றவேண்டியதன் அவசியத்தைக் காட்டுவதற்கு இதுவே பலமான சாட்சியாகும். மனுஷ குமாரனே பிதா மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையை சார்ந்திருப்பாரானால் அதைப் பார்க்கிலும் நாம் எவ்வளவு அதிகம் சார்ந்திருக்க வேண்டும்! வேதத்தில் காணப்படும் எழுதப்பட்ட தேவ வார்த்தைகளினால் இயேசு வழிநடத்தப்பட்டார். வனாந்திரத்தில் அவர் சோதிக்கப்பட்ட சம்பவத்தை நாம் வாசிக்கும் பொழுது, ஒரு முக்கிய குறிக்கோள் அதில் வெளிப்படுகின்றது. வேத வசனத்திலிருந்து கற்றுக் கொண்டவைகளின் மூலமாகவே இயேசு பிசாசின் சோதனையை மேற்கொண்டார். பிசாசானவன் கல்லுகளை அப்பமாக்கும்படி அவரை சோதித்தபொழுது

இயேசு இவ்வாறு சொன்னார்:

*அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்தேயு 4:4)*

பிசாசானவன் அவரை தேவாலயத்து உப்பரிக்கை மேல் கொண்டு போய் அங்கிருந்து தாழக் குதிக்கச் சொன்னபொழுது

*அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். (மத்தேயு 4:7)*

கடைசியாக பிசாசானவன் உலகத்தின் சகல இராஜ்யங்களையும் அவருக்குக் காண்பித்து என்னைப் பணிந்து கொண்டால் எல்லாவற்றையும் தருகின்றேன் என கூறிய பொழுது, இயேசு சொன்னார்:

*அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்தேயு 4:10)*

வனாந்திரத்திலே சாத்தான் இயேசுவைச் சோதித்தபொழுது எவ்வாறு அவற்றை மேற்கொண்டார்? அவர் தொடர்ந்து வேத வார்த்தைகளுக்குத் திரும்பியபடியாலேயே அவரால் அப்படிச் செய்ய முடிந்தது. வேத வார்த்தைகளின் உண்மையை அவர் நம்பி அதில் காணப்பட்ட தேவ ஆலோசனைக்கு முற்றிலும் கீழ்ப்படிய தன்னை அர்ப்பணித்தார்.

இயேசு ஊழியம் செய்த நாட்களில், தன் கிரியைகள் ஒவ்வொன்றிற்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் அவர் தொடர்ந்து வேத வார்த்தைகளுக்கே சென்றார். மத்தேயு 21:13ல் இயேசு தேவாலயத்திற்குச் சென்று வியாபாரிகள் விற்பதையும் வாங்குவதையும் கண்டார். அங்கு அவர் பார்த்தவைகளினால்

கோபமூண்டு காசுக்காரரின் பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்துப் போட்டார். இவ்வளவு கோபத்துடன் அவரை செயல்படத் தூண்டியது எது? இதற்கான பதிலை காசுக்காரர் மற்றும் விற்கிறவர்களைப் பார்த்து அவர் சொன்ன வார்த்தையில் இருக்கின்றது:

> என்னுடைய வீடு ஜெப வீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்றார். (மத்தேயு 21:13)

வியாபாரிகளை வெளியே துரத்தவும் காசுக்காரரின் பலகைகளைக் கவிழ்த்துப் போடவும் இயேசுவை தூண்டியது வேதவார்த்தைகளே. வேத வார்த்தைகளை அவர் தீவிர முனைப்புடன் எடுத்துக் கொண்டார். தேவனுடைய வீடு ஜெப வீடாக இருக்க வேண்டும் என அவர்கள் போதித்தார்கள். வேத வார்த்தையிலிருந்த இந்த சத்தியம் அந்த நாளில் தீட்டுப்பட்டபடியால்தான் இயேசு கோபமடைந்தார்.

லூக்கா 10:25ல் ஒரு நியாயாதிபதி இயேசுவிடம் ஒரு கேள்வியுடன் வந்தான், அவன் வந்து போதகரே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்? எனக் கேட்டான். இயேசு அந்த மனிதனுக்கு அளித்த பதிலைப் பாருங்கள்:

> அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார். (லூக்கா 10:26)

இந்த விமர்சனமான கேள்விக்கு பதிலளிக்க இயேசு அந்த மனிதனிடம் ஏற்கனவே பதில் எழுதப்பட்டுள்ள வேதவார்த்தைகளை குறிப்பிட்டு காண்பிக்கின்றார்.

வேத வசனத்தின்மேல் இயேசு அதிக மதிப்பு வைத்திருந்தார். மலைப்பிரசங்கத்திலே இயேசு பேசுவதைக் கேட்க ஜனங்கள் வந்திருந்த பொழுது இயேசு இவ்வாறு சொன்னார்:

*5:17 நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.*
*5:18 வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 5:17-18)*

இயேசு வேதவார்த்தைகளின்மேல் முழு நம்பிக்கை வைத்திருந்தபடியால் அந்த வார்த்தைகளிலுள்ளவைகளிலெல்லாம் நிறைவேறும் என அவர்களுக்குப் போதித்தார். அதனைத்தொடர்ந்து மேலும் அவர் இவ்வாறு கூறுகின்றார்:

*5:19 ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். (மத்தேயு 5:19)*

இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி என்னும் வாக்கியத்தைக் கவனிக்கவும். கற்பனையை மீறுகின்றது என்றால் என்ன? கிரேக்க மூலபாஷையில் இந்த இடத்தில் "இயோ" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் அர்த்தம், தளர்த்தப்படுதல், உடைக்கப்படுதல், கரைந்து போதல் என்று அர்த்தமாகும். அது வேதம் என்ன போதிக்கின்றதோ அதனுடன் சமரச இணக்கம் செய்து கொள்வதுடன் சம்பந்தப்பட்டது.

மேலும் இந்த கற்பனைகளில் "சிறியதொன்றையாகிலும்" என இயேசு இந்த வசனத்தில் கூறுவதைக் கவனிக்கவும்.

இதன் அர்த்தம் ஒரு கற்பனை மற்ற கற்பனையைப் பார்க்கிலும் முக்கியமானது என்பதல்ல. இயேசு இங்கே என்ன சொல்லுகின்றார் என்றால் சிறிய ஒரு கற்பனையுடன் கூட சமரச இணக்கம் செய்து கொள்ளக்கூடாது என்பதாகும். வேத வசனத்திற்கு கீழ்ப்படிதல் என்பது முழுமையானதாக இருக்க வேண்டும். யாராவது ஒருவர் வேதத்திலுள்ள சிறிய ஒரு காரியத்துடன் சமரச இணக்கம் செய்வார்களானால் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் மிகச் சிறியவர்களாக கருதப்படுவார்கள். இது கிறிஸ்து எழுதப்பட்ட வேத வார்த்தைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பதனைக் காட்டுகின்றது.

வேத வார்த்தைகளுக்கு இயேசு எவ்வாறு கீழ்ப்படிந்து நடந்தார் என்பதற்கான பல எடுத்துக் காட்டுகளை நாம் காண முடியும். ஆனால் மேற்கூறப்பட்டவைகளே இதற்குப் போதுமானது. வேத வார்த்தையில் காணப்பட்ட தேவ ஆலோசனையின்படி நடப்பதற்கு இயேசு தன்னை முற்றிலும் அர்ப்பணித்திருந்தார். வேத வார்த்தைகளினால் அவர் தனக்கு வந்த சோதனைகளை ஜெயித்தார். வேத வார்த்தைகளினால் தன் ஊழியத்தைச் செய்ய ஊக்கப்படுத்தப்பட்டார். எழுதப்பட்ட தேவ ஆலோசனைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தவராக அவற்றைப் போதித்தார்.

இயேசு வேத வார்த்தையில் காணப்பட்ட தேவ ஆலோசனையைத் தேடினது மட்டுமல்ல, அவர் தான் செய்த ஒவ்வொரு காரியத்திலும் ஆவியானவரின் ஆலோசனையைத் தேடினார். இதற்கான ஒரு எடுத்துக் காட்டை மாற்கு 1:12ல் வாசிக்க முடியும். மாற்கு 1ம் அதிகாரத்தில் உள்ள கிறிஸ்துவின் சோதனையைப் பற்றி நாம் ஏற்கனவே பார்த்தோம். ஆனால் இயேசு வனாந்திரத்தில் பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு எவ்வாறு கொண்டு வரப்பட்டார் என்பதனை கவனிப்பதும் மிக அவசியமாகும்:

> *உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார். அவர் வனாந்தரத்திலே நாற்பது நாள் இருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டு, அங்கே காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார். தேவ தூதர்கள் அவருக்கு ஊழியஞ் செய்தார்கள். (மாற்கு 1:12-13)*

இயேசு வனாந்திரத்திற்குப் போக ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார். மாற்கு இதைக் குறிப்பிடும்போது ஆவியானவர் வனாந்திரத்திற்குப் போகும்படி அவரை ஏவினார் என கூறுகின்றார். மாற்கு சிறிது ஆழமான வார்த்தையை இங்கே பயன்படுத்துகின்றார். இயேசுவானவர் வனாந்திரத்திற்குள் தேவ ஆவியானவரின் வல்லமையினால் ஏவப்பட்டு அல்லது தள்ளிக் கொண்டு போகப்பட்டார்.

இயேசு தன் மரணத்தைச் சந்திக்கும் முன்னர் தன் சீஷர்களைக் கூட்டிக் கொண்டு கெத்சமெனே தோட்டத்திற்குச் சென்றார். அந்தத் தோட்டத்திலே தன் பிதாவை நோக்கி கதறியழுது ஜெபிக்கின்றார். இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும் என ஜெபிக்கின்றார். அவருடைய ஜெபத்தை இவ்வாறு முடிக்கின்றார்: ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். (மத்தேயு 26:39) எந்த சூழ்நிலையானாலும் பிதாவின் சித்தத்தை மட்டும் செய்ய வேண்டும் என அவர் தன் இருதயத்தில் தீர்மானித்திருந்தார். தனக்கு முன்னிருந்த வலிகளையும் துயரங்களையும் தன் மாம்ச சரீரத்தால் ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையிலும் தேவ ஆலோசனையையும் தேவ நோக்கத்தையும் இயேசு தேடிக் கொண்டே இருந்தார்.

யோவான் 5:30ல் பிதாவின் ஆலோசனைக்கும் வழி நடத்துதலுக்கும் தன் அர்ப்பணிப்பை இயேசு இவ்வாறு விளக்குகின்றார்:

*நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.*

தன்னை அனுப்பினவரின் சித்தத்தைத் தேடாமல் இயேசு ஒன்றையும் செய்யவில்லை. அவர் செய்த எல்லாவற்றிலும் தேவ சித்தத்திற்கு தன்னை அர்ப்பணித்தார். இதற்காக அவர் தன் பிதாவுடன் தொடர் உறவில் இருக்க வேண்டிய நிலையில் இருந்து எல்லாக் காரியத்திலேயும் அவரின் ஆலோசனையைத் தேடினார். யோவான் 5ல் இயேசு இவ்வாறு கூறினார்:

*5:19 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். (யோவான் 5:19)*

இது பயங்கரமான ஒரு வார்த்தையாகும். தன் சொந்த முயற்சியினால் எதையும் செய்ய முடியாது என இயேசு கூறினார். பிதாவில்லாமல் சுயமாக தான் எதையும் செய்ய மறுதலித்தார். பிதா எதைச் செய்யக் கண்டாரோ அதையே அவரும் செய்தார். பிதா எதைச் செய்ய அவருக்கு ஆலோசனை கொடுத்தாரோ அதை மட்டுமே செய்தார். எத்தனை முறை நாம் காரியங்களை நம் கைகளில் எடுத்துக் கொள்கின்றோம்? நாம் தேவனுக்காக நமக்கு முடிந்தவைகளையெல்லாம் நம் மாம்ச பெலத்தினாலும் ஞானத்தினாலும் செய்கின்றோம். ஆனால் தேவன் நம்மைச் செய்யச் சொல்லி கேட்பவைகளை செய்வதில்லை. பிதாவானவரின் ஆலோசனையின்படி செய்யச் சொன்னதை மட்டும் செய்வதற்கும், நம் சொந்த

ஞானத்தையும் பெலத்தையும் பயன்படுத்தி தேவனுக்காக நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்வதற்குமிடையில் பெரிய வித்தியாசமுண்டு.

யோவான் 6:38ல் தன் ஊழியத்தின் முழு நோக்கத்தையும் இயேசு விவரிக்கின்றார்.

> *6:38 என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.*

இயேசு தனக்காக வாழவில்லை. தன் சுய மகிமைக்காக சுய நல நோக்கத்திற்காகவும் வரவில்லை. தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தைச் செய்வது மட்டுமே அவரது நோக்கமாக இருந்தது. இயேசு பேசின எல்லா வார்த்தைகளும் பிதா அவரை பேசச் சொன்ன வார்த்தைகளாக மட்டுமே இருந்தது.

> *நான் சுயமாய்ப்பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளை யிட்டார். (யோவான் 12:49)*

இயேசு பிதாவின்மேல் முழு நம்பிக்கையும் வைத்திருந்தபடியால் பிதா அவருக்குக் கொடுத்த வார்த்தைகளை அவர் அறிவிப்பதில் உண்மையுள்ளவராக இருந்தார்.

> *நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். (யோவான் 17:8)*

பிதா கொடுத்த வார்த்தைகளை மட்டுமே இயேசு அறிவித்தார் என்பதற்கு மேலும் பல வேத வசன பகுதிகள் காணப்படுகின்றன (யோவான் 7:16; 8:26; 14:10; 15:15; 17:14).

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், இயேசு பேச வேண்டிய ஒவ்வொரு வார்த்தைக்கும் பிதாவின் ஆலோசனையை சார்ந்திருக்க வேண்டியதாக இருந்தது. மனித அறிவிலிருந்து அவர் பேசவில்லை. பிதாவானவர் அவருக்கு கொடுத்த வார்த்தைகளை மட்டுமே பேசினார். அவர் பேசினதெல்லாம் பிதாவித்திலிருந்து வந்தவைகள். இந்த நிலைமை நம் ஊழியத்திலும் காணப்படுமென்றால் எப்படியிருக்கும்.

நாம் பேசும் வார்த்தைகள் பிதாவிடமிருந்து பெற்றுக் கொண்ட வார்த்தைகளாக மட்டும் இருந்தால் நம் வாழ்க்கையிலும் சபையிலும் எப்படிப்பட்ட மாற்றத்தை அது கொண்டு வந்திருக்கக் கூடும்

இயேசுவுக்கு வாழ்க்கையின் மற்றைய எல்லாக் காரியத்தையும் விட பிதாவின் சித்தத்தை செய்வதே பிரியமானதாக இருந்தது. யோவான் 4:34ல் என்ன சொல்கின்றார் என்பதனைக் கவனியுங்கள்:

> *4:34 இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.*

தேவ குமாரனான இயேசு தன் உலக வாழ்க்கையை பிதாவின் அதிகாரத்திற்குக் கீழேயே வாழ்ந்தார்.

> *ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள். (யோவான் 8:28)*

இயேசு தேவ குமாரனாக தன் உலக வாழ்க்கையை பிதாவின் அதிகாரத்தின் கீழேயே வாழ்ந்தார்.

*8:28 ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள். (யோவான் 8:28)*

இயேசு செய்த எல்லாவற்றிலும்பிதாவின் அதிகாரத்திற்குக் கீழே அவருடைய ஆலோசனை மற்றும் அவரது சித்தத்தின்படி மட்டுமே செய்தார். தன் சொந்த அதிகாரத்தின்படி எதையும் செய்யவில்லை.இயேசு பிதாவின் அதிகாரத்தின் கீழ் வாழ்ந்தது போலவே, நாம் செய்யும் எல்லாவற்றையும் பிதாவின் ஆலோசனை மற்றும் அவரது நோக்கம் மற்றும் அவரது அதிகாரத்தின் கீழேயே செய்ய வேண்டும். இயேசு இவ்வாறு வாழ்ந்திருப்பாரானால், சுபாவத்திலேயே பாவிகளாகிய நாம் அவருடைய எடுத்துக் காட்டுக்களைப் பின்பற்றி தேவனுடைய ஆலோசனையை தேட வேண்டியது எவ்வளவு அவசியம். நாம் நம்முடைய பாவ சுபாவத்தை சார்ந்து வாழப்போகின்றோமா? நம் குறைந்த அறிவையும் புரிந்து கொள்ளுதலையும் சார்ந்து வாழப்போகின்றோமா? கிறிஸ்துவின் எடுத்துக் காட்டுதலை பின்பற்ற நாம் தைரியம் கொள்ளுவோமாக.

இயேசு பூரணமான தேவ குமாரனாக, தேவனுடைய எல்லா கட்டளைகளுக்கும் முற்றிலும் கீழ்ப்படிந்து வாழ வேண்டுமென கற்றுக் கொடுத்தார். பிசாசானவனின் சோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் வேத வார்த்தைகளின் ஆலோசனைகளை சார்ந்து நின்றார். தன் வாழ்க்கையின் எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய சித்தத்திற்கும் நோக்கத்திற்கும் அர்ப்பணித்து வாழ்ந்தார். பேசும்படி பிதா என்ன அவரிடம் சொன்னாரோ அதையே பேசினார். பிதா அவரிடம் செய்யும்படி என்ன சொன்னாரோ அதையே செய்தார். சுயத்திற்கு மரிப்பதும் தேவ ஆலோசனை மற்றும் தேவ நோக்கத்தை தன் ஊழியத்திலும் தன் வாழ்க்கையிலும்

செயல்படுத்துவதற்காவே தன்னை அர்ப்பணித்திருந்தார். இவ்வாறு நம்மையும் பார்த்துச் சொல்ல முடியுமா?

## கவனத்திற்கு:

- வேத வார்த்தைகளைக் குறித்து இயேசுவின் கண்ணோட்டம் எப்படிப்பட்டதாக இருந்தது? இயேசு தன் ஊழியத்திலும் வாழ்க்கையிலும் வேதவார்த்தைகளை எவ்வாறு உபயோகித்தார்?

- இயேசு சோதனைகளை மேற்கொள்ள வேதவார்த்தைகளை எவ்வாறு பயன்படுத்தினார்? சோதனைகளை மேற்கொள்வதில் வேதவார்த்தைகள் இன்று என்ன பங்கு வகிக்கின்றது?

- ஆவியானவரால் இயேசு எவ்வாறு வழி நடத்தப்பட்டார் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டைத் தருக. நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றீர்களா?

- பிதா என்ன சொல்லச் சொன்னாரோ அதை மட்டும் இயேசு சொன்னார். இது அவருக்கும் பிதாவுக்கும் இடையிலிருந்த உறவைப் பற்றி என்ன சொல்கின்றது? இவ்விதமான உறவை நாம் வைத்திருப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது?

- பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே இயேசுவின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. உங்கள் வாழ்க்கையின் குறிக்கோளும் அதுதானா? உங்கள் வாழ்க்கையைக் குறித்த பிதாவின் சித்தத்தை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

## ஜெபத்திற்கு:

- கிறிஸ்தவ வாழ்க்கையில் வேதவசனத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து இன்னுமதிகமாக கற்றுத் தரும்படி

தேவனிடம் ஜெபியுங்கள். வேத வார்த்தையில் காணப்படுகின்ற தேவ ஆலோசனைக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்க கற்றுத் தர தேவன் உதவி செய்யமாறு ஜெபியுங்கள்.

- வேத வசனம் தரும் ஆலோசனைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

- தேவ ஆவியானவரின் வழிநடத்துதலில் எவ்வாறு நடப்பதென்பதை தேவன் இன்னுமதிகமாக கற்றுத் தருமாறு ஜெபியுங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென தேவன் விரும்புகின்றார் என்பதனைக் காட்டித் தரும்படி ஜெபியுங்கள்.

- பிதாவின் சித்தத்தை செய்வதை மட்டுமே நோக்கமாக கொண்டிருந்த கிறிஸ்துவின் மனப்பான்மையை தேவன் இன்னுமதிகமாக உங்களுக்கு தர ஜெபியுங்கள்.

- உங்கள் சுய யோசனைகளுக்கும் திட்டங்களுக்கும் மரித்து முழுமையாக தேவ ஆலோசனை மற்றும் நோக்கத்தில் நடக்க உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.

அதிகாரம் 14

# பவுலும் தேவ ஆலோசனையும்

கடைசியான எடுத்துக்காட்டாக அப்போஸ்தலனாகிய பவுலை கவனிக்க நான் விரும்புகின்றேன். பவுலின் போதனைகளை ஆராய்ந்து பார்க்கும்போது வேதத்திலுள்ள தேவ ஆலோசனைகளை அவர் எந்த அளவிற்கு விசுவாசித்திருக்கிறார் என்பதை அவை சந்தேகமில்லாமல் காட்டுகின்றது. தன் விசுவாச குமாரனாகிய தீமோத்தேயுக்கு பவுல் இவ்வாறு புத்தி சொல்லுகின்றார்:

*3:14 நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்,*

*3:15 கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.*

*3:16 வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,*

*3:17 அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளா யிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:14-17)*

வேத வசனத்தின் போதனைகளை உறுதியாக பிடித்துக் கொள்ளும்படி பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை

கூறுகின்றார். உறுதியாக பிடித்துக் கொள்வது என்பது அவைகளை வெறுமனே நம்புவது மட்டுமல்ல, ஆனால் அவைகளை தன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது என்பதாகும். இந்த வார்த்தைகளை உறுதியாக பிடித்துக்கொள்ள தீமோத்தேயுவிடம் பவுல் கூறும் காரணத்தைக் கவனியுங்கள். வேத வசனங்கள் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றபடியாலும் அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளா யிருக்கின்றபடியாலுமாகும். வேத வார்த்தைகளுக்கு கவனம் செலுத்துவது, நமக்கு நிறைவை தந்து தேவ சித்தத்தை செய்வதற்கு நம்மைத் தகுதிப்படுத்துகின்றது.

2 தீமோத்தேயு 3:14-17லுள்ள பகுதியை கவனிக்கும் போது அதிலிருந்து அநேக காரியங்களை அறிந்து கொள்ள இருந்தாலும், நாம் கவனிக்க வேண்டிய முக்கிய பாடமென்னவென்றால், வேதவார்த்தையில் எழுதப்பட்ட தேவ ஆலோசனைகளைக் குறித்த பவுலின் கண்ணோட்டமேயாகும். வேத வசனங்கள் தேவனிடமிருந்து வந்தவைகள் என்பதை பவுல் உறுதியாக நம்பினார். அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது தேவனுடைய பிள்ளை நீதியை நடப்பிக்கவும், தேவன் அவர்களை அழைத்த நற்கிரியைகளைச் செய்யவும் அவர்களைத் தகுதிப்படுத்துகின்றது.

ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே சொல்லுவதன் முக்கியத்துவத்தை பல நேரங்களில் நாம் விட்டு விடுகின்றோமோ என நான் பயப்படுகின்றேன். வேத வசனங்களின் மூலமாக நற்கிரியைகளைச் செய்ய நாம் தகுதிப்படுத்தப்படுகின்றோம் என பவுல் இங்கே கூறுகின்றார். உங்கள் சபையை வளரச் செய்வது எது என அறிய வேண்டுமா வேதவசனங்களை கற்றுக் கொள்ளுங்கள். தேவனிடம் இன்னும் எப்படி நெருங்கிச் சேரக் கூடும் என அறிய விரும்புகின்றீர்களா வேத வசனத்தில் நேரத்தை செலவழியுங்கள். உங்கள் தேசத்தில்

எழுப்புதலை காண விரும்புகின்றீர்களா எழுதப்பட்டுள்ள தேவ ஆலோசனைக்கு கீழ்ப்படிய கற்றுக் கொள்ள ஆரம்பியுங்கள். தேவன் உங்களை எதற்கென்று அழைத்திருக்கின்றாரோ, அதற்கு வேத வசனம் உங்களை தகுதிப்படுத்தும். அதற்கான வழிநடத்துதல்களை அவரது சமுகத்திலிருந்து உங்களுக்கு கொடுத்து வெற்றிக்கும் ஆசீர்வாதத்திற்கும் உங்களை அழைத்துச் செல்லும்.

வேத வார்த்தைகளுக்கு பவுல் அதிக மரியாதை செலுத்தினவர். தன்மேல் அதிகாரமுள்ளதாகவும் தன் வழிகாட்டியாகவும் உள்ள வேத வார்த்தைகளின் போதனைக்கு கீழ்ப்படிவதற்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். இப்படிப்பட்ட வார்த்தைகளையே அவரும் போதித்து அதற்காக அவர் மரிக்கவும் ஆயத்தமுள்ளவராக இருந்தார். அத்துடன் பவுல் தேவ ஆவியானவரின் ஆலோசனையை தேடுவதன் முக்கியத்துவத்தையும் நம்பினார். பவுல் சிறந்த புத்தியுள்ளவர் என பல ஆதாரங்கள் நமக்குக் காண்பிக்கின்றது. அவர் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன்னர், யூத மதத்தில் குறிப்பிடத்தக்க தலைவர்களில் ஒருவராக கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு எதிராக போராட்டங்களை நடத்தினவர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்ட பின்னர், பவுல் பல மாற்றங்களை ஏற்படுத்தினவர். அவரது அறிவுக் கூர்மை அவருடைய எழுத்துக்களில் வெளிப்பட்டாலும், அவர் தன் ஊழியத்தில் தன் அறிவையும் திறமையையும் சாரந்திருக்கவில்லை. ஆகவேதான் ரோம விசுவாசிகளுக்க அவர் எழுதும் போது: உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். (ரோமர் 12:16) என எழுதுகின்றார் மேலும் கொரிந்திய சபைகளுக்கு அவர் எழுதும் போது

> 3:18 ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்

படிக்குப் பைத்தியக் காரனாகக்கடவன்.

*3:19* இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும்,

*3:20* ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது. *(1 கொரிந்தியர் 3:18-20)*

தேவனுடைய இராஜ்ஜியத்தை விரிவாக்கவும் தேவ மகிமையை வெளிப்படுத்தவும் மனித ஞானமும் திறமையும் போதுமானதல்ல என பவுல் அறிந்திருந்தார். அறிவுத்திறமையுள்ள அப்போஸ்தலனாகிய அவர் ஊழியத்தை தன்னுடைய சொந்த புத்தியால் கட்ட விரும்பவில்லை.

ஏற்கனவே நாம் பார்த்தபடி வேத வசன போதனைகளுக்கும் பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலுக்கும் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

அப்போஸ்தலர் 9ம் அதிகாரத்தில் நாம் காணும் பவுலின் மனந்திரும்புதல் அறிவுசார்ந்த மனமாற்றமல்ல. அவருடைய அறிவு கிறிஸ்தவத்தை அழிப்பதுதான் முக்கியமானது என சொல்லியது. ஆனால் தமஸ்குவுக்குப் போகும் வழியில் ஆண்டவராகிய இயேசுவுடன் ஏற்பட்ட ஆச்சரியமான சந்திப்பு அவருடைய வாழ்க்கையை மாற்றியது. அந்த பாதையிலே, ஆண்டவராகிய இயேசு தன் தவறான விசுவாசத்தைக் குறித்து எதிர்த்துப் பேசுவதை அப்போஸ்தலன் கேட்டார். அங்கே முதல் முறையாக தன் புரிந்து கொள்ளுதல் தன்னை தவறான வழியில் நடத்தியதை புரிந்து கொண்டார்.

பவுலின் இரட்சிப்பு இயேசுவின் நேரடியான வெளிப்பாட்டின் மூலம் வந்தது. அவருடைய ஊழிய அழைப்பும் ஆவியானவரின் ஆலோசனை மூலமே வந்தது. அந்தியோகியா பட்டணத்திலே

சபையானது ஜெபத்திற்காக கூடி வந்த பொழுது என்ன நடந்தது என்பது பின்வறுமாறு விவரிக்கப்பட்டுள்ளது:

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

> *அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள். (அப்போஸ்தலர் 13:2-3)*

அந்தியோகியாவிலிருந்த சபை கர்த்தரை ஆராதித்து ஜெபித்துக் கொண்டிருந்த போது தேவ ஆவியானவரின் ஆலோசனையின்படியே பவுல் ஊழியத்திற்குள் உந்தித் தள்ளப்பட்டார். இது பவுலின் சுய தீர்மானமல்ல, ஆனால் தேவனுடைய தீர்மானமாகும். பவுல் அதற்கு முற்றிலும் கீழ்ப்படிந்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல் தன் ஊழிய பாதை யிலே, தெளிவான வேத வசனபோதனையுடன் சேர்த்து பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலையும் தொடர்ந்து சார்ந்திருந்தார். அப்போஸ்தலர் 13ல் அவர்கள் அந்தியோகியாவை விட்டுப் போனபின்னர், எலிமா என்னும் மாயவித்தைக்காரன் ஒருவனை எதிர்கொள்கின்றார். எலிமா பவுலின் போதனைகளுக்கு எதிர்த்து நின்று செர்கியுபவுல் என்னும் அதிபதியை பவுலுக்கு விரோதமாக திருப்ப முயற்சி செய்தான். அன்று என்ன நடந்தது என்பதனைக் கவனியுங்கள்:

> *13:9 அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப் பார்த்து:*
> *13:10 எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம்*

பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?

13:11 இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சில காலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன் மேல் விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான். (அப்போஸ்தலர் 13:9-11)

அசுத்த ஆவியினால் நிறைந்திருந்த மாயவித்தைக்காரனுக்கு முன்பாக பவுல் நின்றபொழுது தேவ ஆவியானவர் பவுலை நிரப்பி என்ன பேசவேண்டும் என ஆலோசனை கொடுத்தார்.

மற்றொரு சம்பவத்திலே பவுல் லீஸ்திரா என்னும் பட்டணத் திலிருக்கையில் பிறவியிலிருந்து சப்பாணியாக இருந்த ஒரு மனிதனைக் கண்டார். அப்போஸ்தலர் 14:9-10 இவ்வாறு சொல்கின்றது:

14:9 பவுல் பேசுகிறதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு:
14:10 நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான்.

இந்த வசனம் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். 9ம் வசனத்தில் அந்த மனிதனிடம் சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விசுவாசம் உண்டென்று பவுல் கண்டார் என வாசிக்கின்றோம். விசுவாசம் என்பது நம் மாமிசக் கண்களினால் காணக்கூடிய ஒன்றல்ல. அன்று பவுல் கண்டது தேவன் அவர் எதைப் பார்க்க வேண்டும் என விரும்பினாரோ அதைக் கண்டார். இந்த மனிதனை குணமாக்க வேண்டுமென்பது தேவ நோக்கமாக இருக்கின்றது என்பதனை ஆவியானவர் பவுலுக்கு

ஆலோசனையாக கொடுக்கின்றார். அந்த ஆலோசனையின் அடிப்படையில், பவுல் தைரியமாக அந்த மனிதனைப் பார்த்து நீ எழுந்து காலூன்றி நில் என்று சொன்னார். தேவ ஆவியினால் வழிநடத்தப்பட்டபடியால் அவருடைய மாம்சக் கண்களோ அவருடைய அறிவு சார்ந்த எண்ணங்களோ காண முடியாதவைகளை அவரால் காண முடிந்தது.

பவுல் தன் மிஷனரி பிரயாணங்களில் பயணம் செய்தபொழுது, அவர் எங்கே ஊழியம் செய்ய வேண்டும் என்பதற்கான வழிநடத்துதல்களுக்கு தேவ ஆவியானவரின் ஆலோசனையை நம்பினார். அப்போஸ்தலர் 16ல் இதற்கான தெளிவான எடுத்துக் காட்டை நாம் காணலாம்.

> *16:6 அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்து போனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு,*
>
> *16:7 மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.*
>
> *16:8 அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப்போய், துரோவாவுக்கு வந்தார்கள்.*
>
> *16:9 அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது.*
>
> *16:10 அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்*

*கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம் பண்ணி, (அப்போஸ்தலர் 16:6-10)*

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பிரயாணப்பட்டுப் போய்க்கொண்டிருந்தார் என்பதை இந்த வசனங்களில் கவனிக்க வேண்டும். 6ம் வசனத்தில் பரிசுத்த ஆவியானவர் தடை பண்ணினபடியால் அவர்கள் ஆசியாவிற்குச் செல்லவில்லை என காண்கின்றோம். பின்னர் அவர்கள் பித்தினியாவிற்குச் செல்ல முயற்சித்தார்கள், ஆனால் அங்கேயும் அவர்களை போகவிடாமல் தடைபண்ணினார். பவுல் தேவனிடமிருந்து ஒரு தரிசனத்தைப் பெற்றுக் கொண்டபடியால் அவர்கள் மக்கெதோனியாவிற்குச் செல்ல தீர்மானித்தார்கள். இந்த மனிதர்களுக்கு தொலைநோக்கு இலக்குகளோ திட்டங்களோ இருக்கவில்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் தேவ சித்தத்தை செய்வது மட்டும்தான். தேவன் அவர்களை நடத்திய இடங்களுக்குச் சென்றார்கள். அவர்கள் தேவ ஆவியானவரின் ஆலோசனையைத் தேடி, அவருடைய வழிகளுக்கு கீழ்ப்படிந்து அதில் நடந்தார்கள்.

பவுல் கொரிந்திலே ஊழியம் செய்தபொழுது, சில யூதர்கள் அவருடைய போதனைகளை எதிர்த்தார்கள். ஆனாலும் தேவன் பவுலுடன் தரிசனத்தின் மூலம் பேசுகின்றார்:

*18:9 இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே;*
*18:10 நான் உன்னுடனே கூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப்பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்.*
*18:11 அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி, தேவ வசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம் பண்ணிக்கொண்டு வந்தான். (அப்போஸ்தலர் 18:9-11)*

அநேக எதிர்ப்புகளைச் சந்தித்த பவுலுக்கு இது அதைரியமான காலமாக இருந்திருக்கும். இந்தக் காலத்தில் அவருக்கு ஆண்டவரிடமிருந்து தைரியப்படுத்தும் வார்த்தைகள் அவசியமாக இருந்திருக்கும். தேவன் அவருக்கு ஆலோசனை கூறி அந்தப் பட்டணத்தில் தங்கி தொடர்ந்து பிரசங்கம் பண்ணும்படி சொல்லுகின்றார். தேவன் அவருக்கு பாதுகாப்பை வாக்களித்து அங்கே அவருக்கு ஒரு அறுவடை உண்டு எனவும் கூறுகின்றார். இந்த தைரியப்படுத்தும் வார்த்தையையும் வழிநடத்துதலையும் பெற்றுக் கொண்ட பவுல் அந்தப் பட்டணத்திலே ஒன்றரை வருடம் தங்கியிருந்தார். எபேசுவிலே பவுல் சபையின் மூப்பர்களை அழைத்து அவர்களுடன் பேசுகின்றார். அந்த நாளிலே எருசலேமுக்கு போக வேண்டும் என்னும் தன் அழைப்பை அவர்களிடம் பகிர்ந்து கொள்கின்றார்:

> *20:22 இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்.*
> *20:23 கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். (அப்போஸ்தலர் 20:22-23)*

எருசலேமுக்குப் போவதிலுள்ள ஆபத்துக்களை பவுல் நன்றாக அறிந்திருந்தார். அங்கே போனால் தான் சிறைபிடிக்கப்படுவேன் என்பதனையும் அவர் அறிந்திருந்தார். சொல்லப் போனால் இந்தத் திட்டத்திற்கு எதிராக பல ஆலோசனைகள் வந்ததற்கு காரணங்களும் இருந்தது. ஆனாலும் பவுல் மனித ஞானத்தினால் வழிநடத்தப்படாமல் தேவனுடைய ஆலோசனையினால் வழிநடத்தப்பட்டார். எபேசுவிலுள்ள மூப்பர்களிடம் அவர் பேசும்போது ஆபத்துக்கள் இருந்தாலும் ஆவியிலே கட்டுண்டவனாக எருசலேமுக்குப் போகிறேன் என கூறுகின்றார். ஆவியானவரின் ஆலோசனைக்கு

கீழ்ப்படிய தன்னை அர்ப்பணித்தவராக தன் இரட்சகருக்காக உபத்திரவத்தையும் சிறைப்படுதலையும் விருப்பத்துடன் தெரிவு செய்து கொண்டார்.

இந்த வார்த்தைகளில் பவுலைக் குறித்து நாம் என்ன கற்றுக் கொள்கின்றோம்? வேத வார்த்தையில் காணப்படும் தேவ ஆலோசனை மற்றும் பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலின்படி நடக்க தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என நாம் காண்கின்றோம். தான் எங்கே ஊழியம் செய்ய வேண்டும் என்பதனை அறிந்து கொள்ள ஆவியானவரின் ஆலோசனையைக் கேட்டார். தேவ ஆவியானவர் பவுலை என்ன பேசச் சொன்னாரோ அதை மட்டுமே பேசினார். ஆவியானவரின் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து அவர் சொல்லும் இடத்திலே தங்கியிருந்தார் அல்லது அவர் போகச் சொன்ன இடத்திற்கு போனார். தனக்கு உபத்திரவம் மற்றும் போராட்டம் உண்டென்று அறிந்திருந்தாலும் அந்த ஆலோசனையில் முழு விருப்பத்துடன் நடந்து கொண்டார். தன் சொந்த ஞானம் மற்றும் திறமைகளை நம்புவதை மறுத்து, எழுதப்பட்ட வார்த்தைகள் மற்றும் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு செவிகொடுக்க விரும்பினார். தேவன் அந்த அர்ப்பணிப்பை ஆசீர்வதித்து பவுலை வல்லமையாக பயன்படுத்தினார்.

## கவனத்திற்கு:

- எழுதப்பட்ட தேவ ஆலோசனைகளாக வேத வார்த்தைகளைக் குறித்த பவுலின் கண்ணோட்டம் என்ன?

- விசுவாசிகள் நற்கிரியைகளைச் செய்வதற்கு வேதவார்த்தைகள் தகுதிப்படுத்துகின்றதென பவுல் போதித்தார். இன்று நாம் இதனை முற்றிலும் புரிந்து கொண்டுள்ளோமா? நம் நாட்களில் வேதவார்த்தையின் தேவ ஆலோசனையை குறைத்து மற்றைய ஆலோசனையை தேடுவதில் சோதிக்கப்படுவதற்கான காரணம் என்ன?

• பவுல் அறிவுள்ள மற்றும் திறமையுள்ளவராக இருந்தபோதிலும் அவரது வாழ்க்கையில் தேவ ஆலோசனை என்ன பங்கு வகித்தது? அவர் தன் சொந்த ஞானத்தையும் திறமையையும் நம்பியிருந்தாரா?

• தேவ ஆவியானவரின் ஆலோசனையை நம்பி யிருப்பது பவுலுக்கு எவ்வளவு முக்கியமானதாக இருந்தது? பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்கு கீழ்ப்படிய அவர் எதையெல்லாம் சந்திக்க ஆயத்தமாகினார்?

• தேவ ஆலோசனையில் நடப்பதற்கு எவ்வளவு அவசியமானது? அந்த ஆலோசனைக்கு கீழ்ப்படிய நீங்கள் எதை சந்திக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கின்றீர்கள்?

## ஜெபத்திற்காக:

• நமக்கு கொடுத்த அழைப்பின்படி நற்கிரியைகளைச் செய்வதற்கு நம்மை தகுதிப்படுத்த தேவன் நமக்குக் கொடுத்த வேதவார்த்தைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த வார்த்தைகளை எவ்வாறு கற்றுக் கொள்வது என தேவன் கற்றுத் தருமாறு ஜெபியுங்கள்.

• உங்கள் தினசரி வாழ்க்கையில் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலை அடையாளம் கண்டு கொள்ள உங்களுக்குக் காண்பித்துத் தருமாறு ஜெபியுங்கள். உங்கள் சொந்த ஞானத்தை நம்பாமல் தேவனுடைய ஆலோசனை மற்றும் வழிநடத்துதலை நம்பி வாழ உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.

• தேவனுடைய ஆலோசனைக்கு உண்மையாக நடப்பதற்காக முகம் கொடுக்க வேண்டிய உபத்திரவங்கள் மற்றும் போராட்டங்களை விருப்பத்துடன் சந்திக்க தேவன் உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.

• உங்கள் சபை அல்லது நீங்கள் ஐக்கியமாக உள்ள

ஊழியத்திற்காக ஜெபியுங்கள். எழுதப்பட்ட வார்த்தைகள் மூலமாகவும் ஆவியானவர் மூலமாகவும் பெற்றுக் கொள்ளும் தேவனுடைய ஆலோசனைக்கு உண்மையாக நடக்க உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.

அதிகாரம் 15

# கடைசியாக சில வார்த்தைகள்

இந்தப் பாடத்தின் மூலம் தேவ ஆலோசனையில் நடப்பதன் அவசியத்தை போதிக்கும் வேத வார்த்தைகளை ஆராய்ந்தோம். அத்துடன் சில தனி நபர்களின் வாழ்க்கையில் தேவ ஆலோசனையின் பங்கைக் குறித்தும் ஆராய்ந்தோம். வேத வார்த்தைகளின் தெளிவான போதனையிருந்தும் கூட, தேவன் தங்களுக்குக் கொடுத்த அழைப்பின் வேலையை செய்து முடிக்க இன்னும் தங்கள் சொந்த ஞானத்தையும் தங்களிடமுள்ள ஆதாரங்களையும் பயன்படுத்துகின்ற கூட்டமொன்று இருக்கத்தான் செய்கின்றது.

தேவன் தன் இராஜ்ஜியத்தை விரிவு படுத்துவதற்காக, நமக்கு வரங்களையும் தாலந்துகளையும் தந்திருக்கிறார். அந்த வரங்களையும் தாலந்துகளையும் அவருடைய மகிமைக்காக பயன்படுத்தவேண்டுமென்பது அவருடைய விருப்பமாகும். நம் வரங்களை பயன்படுத்துவது ஒரு பிரச்சனையல்ல. ஆனால் அவை எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டுமென்பதிலுள்ள புரிந்து கொள்ளல் தான் பிரச்சனையாக இருக்கின்றது. இந்தக் காரியத்தில் மோசேயின் உதாரணத்தை சற்று கவனிப்போம். தன் எண்பதாவது வயதில், தேவன் மோசேயிடம் வந்து எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தன் ஜனத்தை வெளியே கொண்டுவர அவனை அங்கே போக அழைக்கின்றார். மோசே இதற்கு மறுப்புத் தெரிவித்தான். யாத்திராகமம் *4:1ல்* இவ்வாறு நாம் வாசிக்கின்றோம்:

> *அப்பொழுது மோசே: அவர்கள் என்னை நம்பார்கள்; என் வாக்குக்குச் செவிகொடார்கள்; கர்த்தர் உனக்குத் தரிசனமாகவில்லை என்று சொல்லுவார்கள் என்றான்.*

இந்த வார்த்தைகளுக்கு மறுமொழியாக தேவன் மோசேயைப் பார்த்து உன் கையிலிருக்கிறது என்ன என்று கேட்டார். மோசே தன் கையில் ஒரு கோல் மாத்திரம் உண்டென்று பதிலளித்தவுடன், தேவன் அந்தக் கோலை கீழேபோடும்படி சொன்னார். மோசே அப்படிச் செய்தவுடன் அந்த கோல் ஒரு சர்ப்பமாக மாறியது. இந்த உதாரணத்தில் மிக முக்கியமானதொரு காரியம் உண்டு. தேவன் ஒரு ஆவிக்குரிய வரத்தை அவனுடைய கோலின் மூலமாக தருவதாக மோசேயிடம் கூறுகின்றார். ஆனாலும் நாம் பார்க்க வேண்டியது என்னவென்றால், மோசே தேவ வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து தன் கோலை தரையிலே போட்டால் மாத்திரமே அது ஜீவன் பெறும். தேவன் தன் மகிமைக்காக தன் கையிலுள்ள கோலை ஒரு கருவியாக பயன்படுத்துவார் என மோசே புரிந்துகொண்டான். ஆனால் தேவன் அந்த வரத்தை எப்படி பயன்படுத்த விரும்புகின்றார் என்பதனை மோசேயினால் புரிந்து கொள்ள முடியவில்லை. மோசேயின் வாழ்க்கை முழுவதிலும், இந்தக் கோலை எப்படி பயன்படுத்துவது என்பதை தேவன் கற்றுக் கொடுத்தார். நைல் நதிக்கு மேல் அந்த கோலை நீட்டச் சொன்னார். அப்பொழுது நதியின் தண்ணீர் முழுவதும் இரத்தமாக மாறியது. சிவந்த சமுத்திரத்தின் மேல் அந்த கோலை நீட்டச் சொன்னார். அப்பொழுது அந்த தண்ணீர் இரண்டாகப் பிளந்தது.

மற்றொரு சம்பவத்திலே இஸ்ரவேல் யுத்தத்திலிருந்தபோது மோசே தன் கோலை உயர்த்திப் பிடித்து கொண்டிருந்த போது தேவன் அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்தார். இன்னுமொரு சம்பவத்திலே தேவன் மோசேயைப் பார்த்து வனாந்திரத்திலுள்ள ஒரு கற்பாறையை அந்தக் கோலால் அடிக்கச் சொன்னார். மோசே அவ்வாறு செய்தபொழுது கற்பாறையிலிருந்து தண்ணீர் பெருக்கெடுத்தது. அன்று எல்லா ஜனங்களும் அவர்களின் ஆடுமாடுகளும் தாகம் தீரக் குடித்தார்கள். தேவன் நம் வரங்களை பயன்படுத்துகின்றார்.

ஆனால் நாம் அவற்றை அவரின் வழிநடத்துதலின்படி பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். தங்கள் ஆவிக்குரிய வரங்களையும் தாலந்துகளையும் சிறந்த முறையில் பயன்படுத்த விரும்புபவர்கள் அவற்றை எப்பொழுது எங்கே பயன்படுத்த வேண்டும் என்பதற்கான தேவ ஆலோசனையைத் தேட கற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் பல புத்தகங்களும் வேதாகம பள்ளியின் கல்விக்கான வாய்ப்புகளும் உண்டு. சபை நிகழ்ச்சிகளும் கருத்தரங்குகளும் நமக்கு கிடைக்கின்றது. இப்படிப்பட்ட எல்லா கருவிகளும் ஊழியத்திற்கு நம்மை தகுதிப்படுத்துகின்றது. மோசேக்கு வேத வார்த்தை மற்றும் பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதல் தேவைப்பட்டது என நாம் பார்க்கின்றோம். ஆனால் இன்றைய நாட்களில் நமக்கும் இதேவித ஆலோசனை தேவைதானா? இதற்கு பதிலளிக்க சில முக்கிய குறிப்புகளை தர விரும்புகின்றேன்.

## வேத வசனம் எல்ல காலத்திற்கும் எல்லா கலாச்சாரத்திற்கும் பொருந்தக் கூடியது.

நம்மிடமிருக்கும் வேத வார்த்தைகள் மாற்றமில்லாதவைகள், நம்மேலிருக்கும் அதன் அதிகாரம் குறைந்து போகவில்லை என நான் உறுதியாக நம்புகின்றேன். வேத சத்தியங்கள் எல்லா காலத்திற்கும் எல்லா கலாச்சாரத்திற்கும் பொருந்தக் கூடியது. தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்களின்படி நாம் வாழுகின்றோமா என்பதற்கு தேவனிடம் நாம் கணக்கொப்புவிக்க வேண்டும். வேதவார்த்தையில் உள்ள சத்தியங்கள் வேதாகம காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு மட்டும் தான் பொருந்துமென்பதல்ல. அது தற்காலத்தில் வாழும் நமக்கும் பொருந்தும். முற்காலத்திய பழமையானவர்களுக்கும் அது பொருந்தும். தற்போதைய அறிவில் வளர்ச்சியடைந்த சமுதாயத்தில் வாழ்பவர்களுக்கும் அது பொருந்தும். இந்தப் பாடத்திட்டத்தின் போது என்னால் முடிந்தவரையும் வேதவசனங்களுடன் இணைந்திருக்கவே முயற்சி செய்தேன்.

வேதாகம எடுத்துக் காட்டுக்களை பயன்படுத்தி பல வேதவசனங்களையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளேன். இந்த பாடதிட்டம் நான் என்ன கற்றுக் கொடுக்க விரும்புகின்றேன் என்பதனைப் பற்றியதல்ல. மாறாக வேதம் என்ன கற்றுக் கொடுக்க விரும்புகின்றது என்பதனைப் பற்றியதாகும். தேவனுடைய வார்த்தைகள் எல்லாக் காலத்திற்கும் எல்லாக் கலாச்சாரத்திற்கும் அதிகாரத்துடன் பேசக்கூடியது என்பதனை நாம் விசுவாசித்தால்,

வேத வார்த்தைகள் தேவனுடைய வழிகளை நமக்கு வெளிப்படுத்தித் தர நாம் அனுமதிக்க வேண்டும். நாம் தேவ ஆலோசனையைத் தேட வேண்டுமென்பதனைக் குறித்தும் நம் சுய ஞானத்தை நாம் சார்ந்திருக்கக் கூடாது என்பதனைப் பற்றியும் இந்த அதிகாரமுள்ள வேத வார்த்தைகள் என்ன சொல்கின்றது? வேதாகமம் முழுவதிலும் மோசே, யோசுவா, சவுல், தாவீது, இயேசு மற்றும் பவுலின் வாழ்க்கைகளிலிருந்த தேவ அழைப்பைக் குறித்து நாம் காணமுடிந்தது. தேவனுடைய ஆலோசனையை பின்பற்றுதல் என்றால் என்ன என்பதனைக் குறித்த அநேக பாடங்களை இந்த மனிதர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் நமக்குக் கற்றுத் தருகின்றது. இந்தக் கட்டளைகளும் எடுத்துக் காட்டுக்களும் பல வருடங்களுக்கு முன்னரே கொடுக்கப்பட்டிருந்தாலும் இன்றும் நம் வாழ்க்கையுடனும் அதிகாரத்தோடு பேசிக்கொண்டிருக்கின்றது. நாம் வேத வசனத்திலுள்ள ஆலோசனைக்கு நம் முதுகைக் காட்டி நம் சுய ஞானத்தின்படி வாழவும் ஊழியம் செய்யவும் தேடும் பொழுது நாம் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகின்றோம்.

## மனித சுபாவம் மாறாமலிருக்கின்றது.

இரண்டாவதாக நாம் அறிந்து கொள்ளவேண்டிய குறிப்பு என்னவென்றால், நாம் கல்வியிலும், தொழில் நுட்பத்திலும், விஞ்ஞானத்திலும் மிகப்பெரிய முன்னேற்றத்தைக்

கண்டிருந்தாலும் மனிதனுடைய சுபாவம் மாற்றமில்லாததாகவே இருக்கின்றது. சுபாவத்தின்படி மனிதன் இன்றும் பாவியாகத்தான் இருக்கின்றான். இந்த உலகத்தைப் பற்றிய அறிவு அவனுக்கு அதிகரித்திருக்கலாம். அல்லது ஒரு காலத்தில் குணப்படுத்த முடியாதென்று நினைத்த வியாதிகளை குணப்படுத்த முடிந்திருக்கலாம். ஆனாலும் அவனுடைய சுபாவத்தில் மாற்றமில்லை. நாம் பாவத்தோடு கூட போராடி தேவனுக்கு எதிர்த்து நிற்கின்றோம். இந்த பாவ சுபாவத்தின் விளைவுகளினால் ஏற்படும் அதிர்ச்சியான சம்பவங்களினால் நம் செய்தித்தாள்கள் இன்று நிறைந்திருக்கின்றன.

பாவசுபாவம் நாம் செய்கின்ற மற்றும் நாம் பேசுகின்றவைகளை பாதிக்கின்றது. நம்மில் யார் பூரணமான தூய வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றோம் என சொல்லக்கூடும்? விசுவாசிகள் கூட பாவ சுபாவத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார்களே! சபைகள் குழப்பங்களினால் நிறைந்திருக்கின்றது. தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன் எனப்பட்ட தாவீதும் சோதனையில் சிக்கி தன் பாவ இச்சைகளில் வீழ்ந்தான். நம் இருதயம் கேடுள்ளது என தேவன் சொல்லியிருக்கின்றார். நம்முடைய நாவும் பாவ சுபாவத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்படியால் அது சரிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. என் பாவ சுபாவம் தேவனுடைய சித்தத்தின் நடுமையத்திற்கு என்னை வழிநடத்திச் செல்லும் என நான் நம்ப முடியுமா? தேவ நோக்கத்தை நிறைவேற்ற என் பாவ சுபாவத்தை நம்ப முடியுமா? நாம் நம்முடைய பாவ மாம்சத்திற்கு மரிக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஏனென்றால் அதன் இச்சைகளை நாம் பின்பற்றினால் நிச்சயமாக தேவனிடமிருந்தும் அவருடைய நோக்கங்களிலிருந்தும் நாம் திசைமாறிவிடுவோம்.

தேவன் நம்மை அழைத்த அழைப்பிலுள்ள ஊழியத்தை நாம் நிறைவேற்ற வேண்டுமென்றால், நம் பழைய மனிதன் மரித்து, நம் மனித சுபாவம் சொல்லுவதை நம்பாமல், அதற்கு பதிலாக

தேவ ஆலோசனையையும் ஞானத்தையும் தேடவேண்டும். அதுதான் நம் வெற்றிக்கான வழியாகும். பழைய மனிதனின் சுபாவம் தன் அவலட்சனமான தலையை தூக்கிக் கொண்டு அடிக்கடி எழும்பி நம்மை கீழே விழத்தள்ளும். தேவன் எதிர்பார்க்கும் வாழ்க்கையை நாம் வாழ வேண்டுமானால், நம் சொந்த ஞானத்தைப் பார்க்கிலும் அதிகமான ஞானமொன்று நமக்குத் தேவை. நமக்கு தேவ வழிநடத்துதல் வேண்டும்.

## தேவனுடைய வழிகள் நம் வழிகளைப் பார்க்கிலும் உயர்ந்தவைகள்.

உலகம் தொழில் நுட்பத்திலும் அண்ட சராசரத்தையும் புரிந்து கொள்வதிலும் முன்னேறிச் செல்லும் அதேவேளையில் பெருமையிலும் முன்னேறுகின்றது. எங்களால் எல்லா வியாதிகளையும் சுகமாக்கிவிட முடியும் என நம்புகிறவர்களும் இந்த உலகத்தின் முடிவு நம் கைகளில்தான் என நம்புகிறவர்களும் நம்மிடம் காணப்படுகின்றார்கள். தேவன் பெருமையுள்ளவர்களைப் பார்த்து நகைக்கின்றார். உலகம் சாதித்திருக்கின்ற எல்லாவற்றின் மத்தியிலும் தேவனுடைய சிந்தையை புரிந்து கொள்ளுமளவிற்குநாம் இன்னும் வரவில்லை. இயற்கையின் நியதிகளுக்குள் தேவனைக் கொண்டுவர முடியாது. இப்பிரபஞ்சத்தை பற்றிய புரிந்து கொள்ளுதலிற்குள் தேவனை கட்டுப்படுத்த முடியாது.

சில நேரங்களில் தேவன் நமக்குக் கட்டளையிடும் சில காரியங்கள் அர்த்தமற்றவையாகத் தோன்றலாம். ஒரு கோலைக் கீழே போட்டால் சர்ப்பமாக மாறுமென்றோ அல்லது அந்தக் கோலை நீட்டினால் செங்கடல் இரண்டாகப் பிளக்குமென்றோ யாரால் எதிர்பார்க்கக் கூடும்? ஒரு பெரிய மீன் தன் வாயைத் திறந்து இருப்பது யோனா என்னும் மனிதனின் பாதுகாப்பான பிரயாணத்திற்காக என்று யார் நினைக்கக் கூடும்?

எரிகோ பட்டணத்தை ஏழுதடவை சுற்றி வந்து எக்காளத்தை ஊதினால், பாதுகாப்பாக நின்ற அதன் உறுதியான மதில் சுவர்கள் கீழே விழும் என யாரால் நம்பக் கூடும்? ஒரு சிறிய பையனின் அப்பமும் மீனும் அனேகமாயிரம் பேரைப் போஷிக்கக் கூடும் என யாரால் நினைத்துப் பார்த்திருக்கக் கூடும்? இவைகளில் ஏதாவது ஒன்று நமக்கு அர்த்தமுள்ளதாக தோன்றுகின்றதா? இந்த சம்பவங்களிலெல்லாம் நடைபெற்ற வைகளை நம் விஞ்ஞானம் விளக்கப்படுத்த முடியுமா? தர்க்கரீதியானவைகளை தேவன் பொருந்தாதவைகளாக்கி விடுகின்றார். சில சூழ்நிலைகளில் இயற்கையின் நியதிகளுக்கு வெளியே செயல்படுகின்றார்.

நமக்கு பொருத்தமில்லாத சில சூழ்நிலைகளுக்கூடாக தேவன் நம்மை நடத்திச் செல்லக் கூடும். நாம் கையாளக்கூடிய சூழ்நிலையைவிட பெரிய சூழ்நிலைகளுக்குள் அவர் நம்மை வைக்கக் கூடும். அந்த இடத்தில் அவருடைய கிருபையையும், பெலத்தையும் ஞானத்தையும் நமக்குத் தந்து நம்மால் முடியாதென நினைத்தவைகளை நம்மைக் கொண்டு செய்யவைக்கக் கூடும். தேவனுடைய வழிகளில் தேவ ஊழியத்தைச் செய்ய நீங்கள் எதிர்பார்த்தால், உங்கள் எண்ணத்தின் வழிகளை ஒதுக்கித் தள்ள நீங்கள் ஆயத்தமாக வேண்டும். நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத விதங்களில் அவர் செயல்படுகின்றவர். ஒரு தகுதியுமில்லாதவர்களை அவர் வழிநடத்தி அவர்கள் செய்ய முடியாதென நினைத்திருந்தவைகளை செய்ய வழிநடத்தக் கூடியவர். மனித ஞானம் மற்றும் புரிந்து கொள்ளுதலை நம்பி தேவ ஊழியத்தைச் செய்ய முயற்சிப்பதென்பது அவர் நமக்காக வைத்திருப்பவைகளின் முழுமையை பெற்றுக்கொள்வதை இழப்பது என்பதாகும். என் வழிகளைக் காட்டிலும் தேவனுடைய வழிகள் உயர்ந்தது என்பதை நான் ஏற்றுக் கொண்டால்நான் செய்யும் எல்லாவற்றிலும் அவருடைய

ஆலோசனையை தேட வேண்டும் என்னும் என் தேவையை நான் கண்டு கொள்வேன்.

## தேவ ஆவியானவருக்கான நம் தேவை மாறாதது

நம் கல்வியறிவு மற்றும் அனுபவம் பரிசுத்தாவியானவரின் ஊழியத்திற்கு பதிலாக இடங்கொள்கின்றதை நான் அடிக்கடி பார்க்கின்றேன். மக்களுக்கு கிறிஸ்துவின் அவசியத்தைக் குறித்து பரிசுத்தாவியானவர் நம்ப வைப்பதைச் சார்ந்திருப்பதைக் காட்டிலும்என் சொந்த ஞானத்தினால் அவர்களை நம்ப வைக்க முயற்சித்த நேரங்களைக் குறித்து நான் குற்ற உணர்வுள்ளவனாகவே இருக்கின்றேன். தேவனுடைய ஆவியானவரை விட அதிகமாக நம் போதனைகளையும் சபை திட்டங்களையும் அதிகம் நம்புவதற்கு நாம் சோதிக்கப்படுகின்றோம். வேதாகம பள்ளி மற்றும் வேதாகம கல்லூரியில் படித்து முடித்துவிட்டு நான் வெளியே வந்த பொழுது, தேவ ஆவியானவரை நம்புவதைக் காட்டிலும் என் படிப்பையும் என் பயிற்சிகளையுமே நம்பினவனாக காணப்பட்டேன்.

தேவன் என் கல்வியையும் என் பயிற்சிகளையும் பயன்படுத்துவார். ஆனால் என் மன உறுதியும் நம்பிக்கையும் என் பயிற்சி மற்றும் தாலந்துகளைக் காட்டிலும் தேவ ஆவியானவரில் இருந்திருக்க வேண்டும். ஒரு காலகட்டத்தில் நான் பிரசங்கங்களை ஆயத்தப்படுத்தின பொழுது அவற்றை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பார்த்து மக்களை கவரும் வகையில் சிறந்த வார்த்தைகளை போட்டு மாற்றியமைத்து அதன் மூலம் அவர்கள் மனதில் இடம் பிடிக்க முயற்சித்ததுண்டு. ஆனால் வல்லமை என் வார்த்தைகளை எவ்வாறு வடிவமைத்துப் பேசுகின்றேன் என்பதிலல்ல தேவ ஆவியானவரில்தானுண்டு என்பதனை உணர்ந்து கொண்டேன்.

என்னால் ஒரு ஆத்துமாவை மனமாற்றமடையச் செய்ய முடியாது. இரட்சிப்பு என்னும் அற்புதம் தேவ ஆவியானவரின் அற்புத கிரியையாகும். பாவத்தைக் குறித்த உணர்வை என்னால் கொண்டுவர முடியாது. பாவ உணர்வைக் கொண்டு வரக்கூடியது பரிசுத்தாவியானவரின் கிரியை மட்டுமே. தேவன் தன் வேலைகளில் என்னையும் பங்குதாரராக்கியது அவர் எனக்குக் கொடுத்த சிலாக்கியம். ஆனால் நான் கண்ட பலன்களுக்குரிய நன்மதிப்பை நான் எடுத்துக் கொள்ள முடியாது. நான் வெறும் பாத்திரம் மாத்திரம் மட்டுமே; என் மூலம் பலன்களை கொடுப்பது தேவ ஆவியானவர் மட்டுமே.

பெரிய சபைகளைக் கட்டி மக்கள் ஆச்சரியப்படக்கூடிய ஊழியங்களை நாம் ஸ்தாபிக்கலாம். ஏன் அவிசுவாசிகள் கூட அப்படி ஏதாவது செய்கிறார்களே! நம்மைச் சுற்றியுள்ள அவிசுவாசிகள் பெரிய நிறுவனங்களை ஸ்தாபித்து இலாபகரமான வியாபாரங்களைச் செய்து வருகின்றார்களே! மக்களைக் கவர்ந்து தங்கள் பொருட்களை எப்படி விற்க முடியும் என்பதனை அவர்கள் அறிந்திருக்கின்றார்கள். தேவன் வெற்றிகளை உலக தரத்தின் அடிப்படையில் அளவீடு செய்பவரல்ல. இயேசுவின் உலக ஊழியத்தின் கடைசி நாட்களில் சில சீஷர்களே அவரோடு கூட இருந்தனர். ஆனாலும் அவர் அதிகாரத்துடன் செயல்பட்டு தன் ஒவ்வொரு படியிலும் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார்.

தேவனுக்காக பல நன்மையான காரியங்களை நாம் செய்யலாம். ஆனால் விளைவு எதுவானாலும் அதிலும் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு அவருக்குக் கீழ்ப்படியும் நபர்களையே அவர் தேடிக் கொண்டிருக்கிறார். மனித பார்வையில் வெற்றிகரமாக தோற்றமளிக்காத ஊழியமாக தெரியலாம், ஆனால் அது தேவ ஆவியானவரால் அதிகாரப்படுத்தப்பட்டதாக இருந்தால், தேவன் அதன் மூலம் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவார். தேவன்

எதிர்பார்க்கும் ஊழியத்தைச் செய்ய வேண்டுமானால் அது தேவ ஆவியானவரின் அபிஷேகத்துடன், அவரது ஞானத்தினால், அவரது நேரத்தில் செய்யப்பட வேண்டும்.

## தேவ ஆலோசனையின் இருபக்க குணாதிசயத்தை புரிந்து கொள்வதன் அவசியம்.

கடைசிக் குறிப்புடன் இதை நான் முடிக்க விரும்புகின்றேன். சமாரிய பெண்ணிடம் பேசும்பொழுது இயேசு இவ்வாறு கூறினார்:

> தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும் (யோவான் 4:23)

இயேசு இங்கே தேவனை ஆவியுடனும் உண்மையுடனும் தொழுது கொள்ள வேண்டுமென கூறுவதைக் கவனியுங்கள். இந்த பாடத்திட்டத்தில் வேத வார்த்தையின் ஆலோசனை மற்றும் ஆவியானவரின் ஆலோசனை ஆகிய இரண்டு பகுதிகளைக் குறித்தும் கற்றுள்ளோம்.

சில விசுவாசிகளுக்கு வேத வார்த்தையின் ஆலோசனை வசதியாக இருக்கின்றது. ஆனால் இவர்களுக்கு ஆவியானவரின் ஆலோசனை என்பதனைக் குறித்து குறைந்த அளவே தெரியும். வேறு சில விசுவாசிகள் ஆவியானவரின் ஆலோசனையை அதிகம் வலியுறுத்துவார்கள். ஆனால் எழுதப்பட்டுள்ள தேவ வார்த்தையிலுள்ள ஆலோசனையைக் குறித்து மிகக் குறைந்த அளவு அறிவே உள்ளது. வேத வார்த்தையின் ஆலோசனையும் ஆவியானவரின் ஆலோசனையும் ஒன்றுடனொன்று இணைந்து செல்ல வேண்டும். ஒரு காலில் நடந்து செல்வதை சிறிது கற்பனை செய்து பாருங்கள். அல்லது ஒரு மிதிசக்கர வண்டியை ஒரு சக்கரமில்லாமல் ஓட்ட முயற்சிப்பதை கற்பனை செய்து பாருங்கள். நாம் சிறப்பாக செயல்பட வேண்டுமென்றால்,

வேத வார்த்தையினால் மட்டுமல்ல, தேவ ஆவியினாலும் வழிநடத்தப்பட வேண்டும்.

தேவ ஆவியானவரின் கிரியைகளினால் மறுரூபமாக்கப்படாத ஆனால் வேதத்தைக் குறித்த சிறந்த அறிவுள்ள பலரை நான் சந்தித்துள்ளேன். காயப்படுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் ஏமாற்றுவதற்கும் அவர்கள் எவ்வாறு வேதத்தை பயன்படுத்துகின்றார்கள் என்பதையும் பார்த்திருக்கிறேன். அவர்கள் செய்யும் காரியங்களை அவர்கள் பார்க்கும் விதத்திலேயே பார்க்காதவர்களை நியாயந்தீர்த்து குற்றப்படுத்தி விமர்சிப்பார்கள். அவர்கள் பிரசங்கிப்பதை நானும் கேட்டிருக்கின்றேன். அவர்களுடைய பிரசங்கம் அறிவு நிறைந்ததாகவும் புத்திக்கூர்மை நிறைந்ததாகவும் காணப்படும். ஆனால் அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அல்லது எவ்வாறு சொல்லுகின்றார்களோ அதில் தேவ ஆவியானவரின் வல்லமை காணப்படாது.

நான் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு அதிகம் கவனம் செலுத்துகின்ற ஆனால் வேத வார்த்தைகளை அலட்சியப்படுத்துகின்ற இன்னும் சில நபர்களையும் பார்த்திருக்கிறேன். இவர்கள் வேத வார்த்தைகளை கற்றுக் கொள்வதன் அவசியத்தை உணராதவர்கள், அல்லது சத்தியத்தில் தங்களை ஆழப்படுத்திக் கொள்ளாதவர்கள். வேதம் எச்சரிக்கின்ற பாவங்கள் அவர்கள் வாழ்க்கையில் காணப்படும் ஆனால் அதை சரிப்படுத்துவதற்கு விருப்பமில்லாதவர்களா யிருப்பார்கள். ஆவியானவருடைய வழிநடத்துதலை தொடர்ந்து தேடிக் கொண்டே இருப்பார்கள், ஆனால் வேத வார்த்தையின் அஸ்திபாரங்களில் வழிநடத்தப்பட விட்டுக் கொடுக்காதவர்கள். அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய வேத வார்த்தையின் சத்தியங்களை அறியாதவர்கள். கீழ்ப்படியாமை மற்றும் சத்தியத்தை சரியாக புரிந்து கொள்ளாதபடியினால் தேவ ஆவியானவரின் கிரியைகளை மட்டுப்படுத்துபவர்கள்.

வேதவார்த்தைகளை நாம் புரிந்து கொள்ள தேவன் தம் ஆவியை கொடுத்துள்ளார். தேவ ஆவியானவரின் வழிநடத்துதலைப் புரிந்து கொள்ள அவர் நமக்கு தன் வார்த்தைகளை தந்துள்ளார். நாம் நடக்க வேண்டிய வழிகளை காண்பிப்பதற்கு அவர் தன் வார்த்தைகளைத் தந்துள்ளார். ஆவியானவர் அவருடைய வழிகளில் நடப்பதற்கு நமக்கு உதவி செய்கின்றார். செய்தியை போதிக்க தேவையான தன் வார்த்தையை அவர் நமக்குத் தருகின்றார், எந்த நபர்களுக்கு அந்த வார்த்தை போதிக்கப்பட வேண்டுமோ அந்த நபர்களிடம் அவருடைய ஆவியானவர் நம்மை நடத்துகின்றார். நாம் வேதாகமத்திலுள்ள சத்தியங்கள் மற்றும் ஆவியானவரின் வழிநடத்துதல் இரண்டையும் தேடும்பொழுது நாம் சமநிலையைக் கண்டு கொள்ளமுடியும். நாம் ஆவியோடும் உண்மையோடும் நடக்கும்போது மாத்திரமே நாம் வெற்றியுள்ளவர்களாக காணப்பட முடியும்.

ஊழியத்தில் வெற்றியுள்ளவர்களாக காணப்படவும் தேவன் எதிர்பார்க்கும் வாழ்க்கையை வாழவும், தேவ ஆலோசனையின் அவசியத்தை புரிந்து கொண்ட மக்களாக நாம் காணப்பட வேண்டும். வேத வசனத்தைக் கற்றுக் கொள்ளுதல் மற்றும் வார்த்தைகளை வாழ்க்கையில் பிரயோகித்தல் ஆகிய இரண்டும் சம அளவில் இருக்க தேவ ஆவியானவரின் வழிநடத்துதல் மற்றும் அவர் தரும் அதிகாரம் மூலமாக நாம் கற்றுக் கொள்ள வேண்டும். தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் ஆலோசனையை நாம் பெற்றுக் கொள்ள அவருடன் தொடர் உறவில் நிலைத்திருக்க வேண்டும். அதன் அர்த்தம் என்னவென்றால் தேவனுடைய வழிகள் நம் வழிகளாக காணப்படாது. தேவ ஆலோசனையில் நடப்பது என்பது உலகப் பார்வையின்படி வெற்றிகரமாக செயல்படுவது என அர்த்தமல்ல. உலகப் பார்வையில் அர்த்தமில்லாததைப் போலக் காணப்படும் வழிகளில் தேவன் நம்மை நடத்தக்

கூடும். எல்லாக் காரியங்களிலும் தேவனைத் தேடுவது என்பது நம் வாழ்க்கையின் எல்லா பகுதிகளையும் அவருடைய ஆளுகைக்கு அர்ப்பணிப்பதாகும். அப்படியென்றால் என் வாழ்க்கையில் சுய ஆலோசனைகளுக்கும் இலக்குகளுக்கும் நான் மரித்து, முற்றிலும் தேவனுக்கும் அவரது வழிகளுக்கும் என்னை விட்டுக் கொடுத்து விடுவது என அர்த்தமாகும்.

தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொள்ளும் மாணவனாக இன்று உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா? வேத வார்த்தைகளை கற்று உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் அதை பிரயோகப்படுத்த முயற்சிப்பீர்களா? தேவன் தன் ஆவியானவரை உங்கள் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் தந்துள்ளார் என்பதனை அங்கீகரித்துக் கொள்வீர்களா? ஆவியானவர் தேவ வார்த்தைகளை உங்களுக்கு வெளிப்படுத்தித் தருவதற்கு அனுமதிப்பீர்களா? நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய வழிகளைக் குறித்த வழிநடத்துதல்களை உங்கள் இருதயத்தில் தெளிவு படுத்த தேவ ஆவியானவருக்கு அனுமதி கொடுப்பீர்களா? வேத வார்த்தையிலுள்ள சத்தியங்களை வாழ்க்கையில் மிகக் குறிப்பான முறையில் பிரயோகப்படுத்த தேவ ஆவியானவர் காண்பிக்கும் போது அவரது வழிநடத்துதல்களை கேட்க கற்றுக் கொள்வீர்களா?

சங்கீதம் 106:13ல் தேவ ஜனங்களைக் குறித்த தேவனுடைய குற்றச் சாட்டு:

> ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள்; அவருடைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திருக்கவில்லை என சொல்லப்பட்டுள்ளது.

நம்மைப் பார்த்து இப்படிப்பட்ட வார்த்தைகள் சொல்லப்படாதிருப்பதாக!!

## கவனத்திற்கு:

- *தேவ ஆலோசனை நமக்கு அவசியம் என்பதனைக் குறித்து இந்தப் புத்தகம் நமக்கு என்ன கற்றுத் தருகின்றது? இன்றைய நாட்களில் நமக்கு தேவ ஆலோசனை அவசியமா? ஏன்?*

- *தேவனுடைய வழிகள் மனித சிந்தைக்கு அர்த்தமுள்ளதாக காணப்படுமா? மனித பார்வையில் பார்க்கும் போது தேவனுடைய வழிகள் எப்போதும் வெற்றியுள்ள வழிகளாக தோன்றுமா?*

- *வேத வார்த்தைகளின் மூலமாக மட்டும் தேவன் எதிர்பார்க்கும் வாழ்க்கையை வாழ முடியுமா? நமக்கு ஏன் தேவ ஆவியானவர் அவசியப்படுகின்றார்?*

- *தேவ ஆவியானவரின் வழிநடத்துதலைப் புரிந்து கொள்ள வேத வார்த்தைகள் நமக்கு எவ்வாறு உதவி செய்கின்றது? வேத வார்த்தையின் ஆலோசனை மற்றும் தேவ ஆவியானவரின் ஆலோசனை ஆகிய இரண்டையும் நாம் தேட வேண்டியதன் அவசியம் என்ன?*

- *தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு முக்கிய கவனம் செலுத்த நாம் எவ்வாறு கற்றுக் கொள்ளலாம்? போதுமான அளவு நேரத்தை நீங்கள் தேவனுடைய வார்த்தையுடன் செலவழிக்கின்றீர்களா?*

## ஜெபத்திற்கு:

- *வேத வார்த்தை மற்றும் தேவ ஆவியானவரின் ஆலோசனையின் தேவையை தேவன் இன்னுமதிகமாக காண்பித்துத் தர ஜெபியுங்கள். அவருடைய ஆலோசனை யின்படி இன்னுமதிகமாக நடக்க கற்றுக் தருமாறு ஜெபியுங்கள்.*

• தேவ ஆவியானவர் வேத வார்த்தைகளை நமக்கு வெளிப்படுத்தி தருவதற்காகவும் அவற்றை வாழ்க்கையில் பிரயோகப்படுத்த தேவன் காண்பித்துத் தருவதற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

• தேவ சித்தத்தையும் மற்றும் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலை எவ்வாறு புரிந்து கொள்வது என்பது பற்றியும் வேத வார்த்தைகள் கற்றுத் தருவதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

• தேவன் நம் தீர்மானங்களிலும் திட்டங்களிலும் பங்குபெற விரும்புகிறதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். அவருடைய ஆலோசனையை தேடாமல் அல்லது அலட்சியம் பண்ணி உங்கள் சொந்த வழிகளில் காரியங்களைச் செய்ய நீங்கள் தீர்மானித்த நேரங்களை தேவன் மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள்.